
புதிய சமுதாயம்

10509

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

27-3-1977



புதிய சமுதாயம்

பாரதிதாசன்

புதிய சமுதாயம் படைப்போம் - இந்தப்
புவனத்தில் எங்கணும் தோன்றாத சிறந்த
(புதிய)

மதில்தனில் பூனையாக - அன்று
வாழ்ந்துயாம் கலங்க மாட்டோம்
எதனிலும் ஒன்று சேர்ந்தே - என்றும்
இருந்திட உறுதி கொள்வோம்
(புதிய)

அணுயுகம் தன்னிற் கேற்ப - எங்கள்
அறிவினைப் பெருக்கி வாழ்வோம்
பணயுகம் ஆன போதும் - பழம்
பண்பினை மரபை மறவோம்
(புதிய)

தாய்மொழிக் கல்வியோடு - இந்தத்
தரணியின் மொழிகள் கற்போம்
வாய்வழி வம்பு தீர்ப்போம் - என்றும்
வன்செயல் அனைத்தும் துறப்போம்
(புதிய)

ஞாயிறு போல இயங்கி - ஆழி
ஞாலமே போற்ற உயர்வோம்
தேயினும் சந்த னம்போல் - ஒரு
தேவையைத் தந்து தேய்வோம்
(புதிய)

அடுத்த இதழ்...!

அடுத்த இதழ் ஏப்ரல்
10ஆம் தேதி வெளிவருகிறது.

NA-8.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

கம்பம் 1 :: 27-3-1977 :: குடும்பம் 1

எங்கள் குறிக்கோள்

"ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவாவா
களிபடைத்த மொழியினாய் வாவாவா
கடுமைகொண்ட தோளினாய் வாவாவா
தெளிவுபெற்ற மதியினாய் வாவாவா
சிறுமைகண்டு பொங்குவாய் வாவாவா
எளிமைகண்டு இரங்குவாய் வாவாவா
ஏறுபோல் நடையினாய் வாவாவா"

பாரதியின் இவ்வரிகளுக்கேற்ப நம் நாட்டில் படிப்படியாகத் தோற்றம் பெற்றுவரும் வீறுகொண்ட புதிய மலேசியச் சமுதாயத்திற்கு நல்வரவு கூறி அதன் வரிவடிவமாக ஓர் இதழினை இன்றுமுதல் படைக்க முற்பட்டுள்ளோம்.

கொள்கை நோக்குள்ள குடும்பப் பத்திரிகையாக-நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்னும் மேம்பட்ட நிலையினை நமது குடும்பங்கள் ஒவ்வொன்றும் எய்திட ஆக்ககரமான வழிகாட்டும் கையேடாகப் "புதிய சமுதாயம்" நாடெங்கும் வீடெங்கும் பவனி வரும்.

மலேசியாவில் உருவாகிவரும் பொருள் பொதிந்த "புதிய சமுதாயத்"தின் மூன்று முக்கிய கூறுகளில் ஒன்றாக நின்றிலங்கும் இந்திய சமுதாயம், எல்லா வகையாலும் பிற சமூகங்களோடு - முன்னேறி வரும் தாய்த்திருநாட்டின் வேகத்தோடு - தோளோடு தோள் இணைந்து நேர் நடை பயிலப் "புதிய சமுதாயம்" இங்குள்ள எழுத்துலகச் சிற்பிகளின் துணைகொண்டு ஒல்லும் வகையெல்லாம் முயலுமென்று உறுதிகூறுகின்றோம்.

இங்கு யாவரும் மதிக்கத்தக்க நல்ல இதழ் இல்லையே என்னும் குறையைப் "புதிய சமுதாயம்" தனது பவனி மூலம் போக்க முயலும். முதலில் மாதம் இருமுறையாகவும் ஒருசில மாதம் கழித்து வார இதழாகவும் "புதிய சமுதாயம்" தனது இலட்சியப் பயணத்தை நடாத்தத் திட்டமிட்டிருக்கிறது.

"புதிய சமுதாயம்" தரமான குடும்பப் பத்திரிகையாக-எவரும் படிக்கத்தக்க எளிமையோடு-குடும்பத்திலுள்ள சிறுவர், பெண்டிர், பெரியவர் அனைவரும் படித்துக் களிக்கும் பல்

அலுவலகம்: 27-ஏ, ஜாலான் தம்பாப்பிள்ளை, பிரிக்பீல்ட்ஸ், கோலாலம்பூர் 09-05
தொலைபேசி எண்: 203552 (லிடோ தியேட்டருக்குப் பின்புறம்)

எங்கள் குறிக்கோள் . . .

சுவைக் களஞ்சியமாகத் திகழுமென்றும் உறுதி கூறுகிறோம். எழுத்தாளர்களையும் அவர்களின் எழுத்துக்களையும் மதிக்கும் சிரிய கொள்கையைக் கடைப்பிடித்து, படைப்பிலக்கியத் துறையின் சீரான வளர்ச்சிக்கும் "புதிய சமுதாயம்" துணை நிற்கும்.

தேசிய ஒருமைப்பாடு, சமூகங்களின் ஒற்றுமை, கல்வி மேம்பாடு, பொருளியல் முன்னேற்றம் முதலிய பல்வேறு துறைகளிலும் அரசாங்கத்தின் பணிகளுக்கும் தேசத் தலைவர்களின் முயற்சிகளுக்கும் - குறிப்பாக இந்திய சமூகத் தலைவர்களின் செயல் திட்டங்களுக்கும் - "புதிய சமுதாயம்" வலுவான ஆதரவை நல்கி வரும்.

"நேசனை" விட்டு வெளியேறிய வேதனையிலிருந்து எனக்குக் கைகொடுக்கும் நம்பிக்கை ஒளியாகத் "தேவதூதர்கள்"போல அருமை நண்பர்கள் வந்தார்கள். அந்த நல்ல உள்ளங்களின் துணையோடு "புதிய சமுதாயத்தை" இன்று மலேசியத் தமிழ்ப் பெருமக்களின் திருமுன்னர் சமர்ப்பிக்கிறோம். வரவேற்று, வாழ்வளித்து, வளர்ச்சி காணச் செய்வது வாசகர்களாகிய உங்கள் பொறுப்பாகும்.

என்னைத் தன் சொந்தக் குழந்தை போல எப்பொழுதும் ஏற்றிப் போற்றி அரவணைத்து வந்திருக்கும் சமுதாயத்திற்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். என் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கும் சமுதாயத்திற்குத் தொடர்ந்து பணிபுரிவதற்கும் "புதிய சமுதாயம்" ஒரு நிலைக்களனாக அமையுமென்று நம்புகிறேன்.

"புதிய சமுதாயம்" உருக்கொள்வதற்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் எண்ணற்ற நன்னெஞ்சங்களுக்கும் குறிப்பாகப் பத்திரிகை விற்பனையாளர்களுக்கும் விளம்பரம் தருகிற வணிக நிறுவனங்களுக்கும், ஏடு பிடுநடை போட வாழ்த்துரை வழங்கியிருக்கும் பெருமக்களுக்கும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் புலப்படுத்திக்கொள்கிறோம்.

நைந்துபோன, பிய்ந்துபோன முடை நாற்றமெடுக்கும் பழைய கந்தல் வாழ்க்கைக்கு விடைகொடுப்போம்! கல்வியிலும் பொருளியிலும் ஏற்றம் பெற்ற நறுமணமிக்க புதிய சமுதாயத்திற்கு நல்வரவு கூறுவோம்!

முருகு சுப்பிரமணியன்,
ஆசிரியர்.

அரும்புமதின் சமுதாயத் திலகம்

புதியதொரு முயற்சியில் ஈடுபடுவோர், எடுத்த செயலில் வெற்றிபெற அவர்கள் நெற்றியில் திலகமிட்டுச் 'சென்றுவா, செயலில் வென்றுவா' என அன்னையர் வாழ்த்தி அனுப்புவது தமிழர் பண்பாடு.

அவ்வாறே, ஆற்றல்மிக்க தேசிய சமுதாயத்தை உருவாக்கும் நமது அரசாங்கத்தின் ஆக்கப் பணியும் இந்திய சமுதாயத்தை வலிவும் வளமும் மிக்கதாக மாற்றப் பாடுபடும் நம் தலைவர்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் முயற்சியும் வெற்றி காணத் தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றும் இலட்சியத்தோடு மலர்ந்திருக்கும் "புதிய சமுதாய"த்தை வாழ்த்திச் சமுதாயம் இட்டிருக்கிற 'திலகம்'தான் அட்டைப்படத்தை அலங்கரிக்கும் செல்வி திலகவதி.

"புதிய சமுதாயம்" எனும் தாமரை மொட்டின் ஓர் இதழான திலகவதிக்கு வயது பன்னிரண்டு. செந்தூல் தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறாள்.

திலகவதி பயிலும் செந்தூல் தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப்பள்ளி மிகவும் பழமையான தமிழ்ப் பள்ளிகளில் ஒன்றாகும். ஆரம்ப காலத்தில் கோலாலம்பூரின் நிர்மாணிப்புக்கும் வளர்ச்சிக்கும் காரணமாகத் திகழ்ந்த முக்கியமானவர்களில் காலஞ்சென்ற தம்புசாமிப் பிள்ளையும் ஒருவராவார். யாப் ஆ லோயும் இவரும் ஒரே காலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பெரியாருக்கு இன்றிருக்கும் ஒரே ஒரு சின்னம் இந்தத் தமிழ்ப் பள்ளிதான்.

திலகவதியின் அப்பா திரு. சந்திரசேகரன், பொதுவாக வசதிபடைத்த பெற்றோர்கள் செய்வதைப் போலத் தமது மகளை மற்ற பள்ளிகளுக்கு அனுப்பாமல் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பியிருப்பது ஏன்?

அதற்கு அவர் கூறும் காரணம்: "என் மகள் தமிழ்ப்பள்ளியில் படித்து முன்னேறினாள்" என்பதைக் கேட்கவே எனக்கு ஆசை. அது மட்டுமல்ல, தமிழையும் படித்தால்தான் தமிழ்ப்பெண் தமிழ்த்தாயாக இருப்பாள் என்பது எனது நம்பிக்கை. அதற்காகவும் திலகவதியைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பி இருக்கிறேன்" இது அப்பா சொல்லும் காரணம்.

மகள் என்ன சொல்கிறாள்?

"அப்பா என்ன நோக்கத்தோடு என்னைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புகிறாரோ எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ்ப்பள்ளியில் படிக்கும் பயனை அண்மையில்தான் நான் உணர்ந்தேன். ஆங்கிலப் பள்ளியில் படிக்கும் என் தோழி ஒரு தமிழ்ப் பெண்ணாக இருந்தும் அரைகுறையாகத் தமிழைப் பேசும்போது என்னால் சரளமாகப் பேச முடிவதற்குக் காரணம் இந்தத்தமிழ்ப் பள்ளிதானே!"

திலகவதியின் பேச்சை நான் இடைமறித்தேன். 'நீ உன் தோழியைப் பற்றி நினைப்பதுபோலவே உன் தோழியும் உன்னை "தன்னைப்போல் சரளமாக ஆங்கிலம் பேசத் தெரியாதவள்" என்று நினைக்கலாம் அல்லவா?"

"நினைக்கலாம். ஆனால், நான் என்ன வெள்ளைக்காரியா, ஆங்கிலம் தெரியவில்லை என்று அவமானப்பட! அத்துடன் நான் ஆறாம் வகுப்புக்குப் பிறகு ஆங்கிலத்தையும், தேசிய மொழியையும்தானே அதிகமாகப் பயிலப் போகிறேன். அப்போது எனது இந்தக் குறையும் நிச்சயம் அகன்று விடும். ஆனால், என் தோழியின் நிலை...!"

திலகவதி கல்வியைப் பொறுத்தவரையில் தெளிவான சிந்தனையைக் கொண்டிருப்பது அறிந்து மகிழ்ந்தேன்.

ஃ ஃ ஃ ஃ

நாட்டின் தலைவர்களைப் பற்றி ஏதாகிலும் தெரியுமா என்பதை அறிய நமது பிரதமர் யார் எனத் திலகவதியிடம் கேட்டேன்.

பட்டென்று "டத்தோ ஹூசேன் ஒன்" என்றாள் திலகவதி.

"கல்வியமைச்சர் யார்?"

"டாக்டர் மகாதிர் முகம்மது"

"ம. இ. கா. என்கிறீர்களே, அப்படி என்றால் என்ன?"

"மலேசிய இந்தியர் காங்கிரஸ் என்பதன் சுருக்கம்தான் ம. இ. கா. அதன் தலைவர் டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம். தொடர்புத்துறை அமைச்சராகவும் அவர் பொறுப்பு வகிக்கிறார்"

"வெட்டி வா" என்றால் கட்டிக்கொண்டு வருவது போல நான் கேட்ட ஒரே கேள்விக்கு இத்தனை பதில்களையும் சொன்ன திலகவதியின் பொது அறிவை இதற்கு மேலும் சோதிக்க நான் விரும்பவில்லை.

ஃ ஃ ஃ ஃ

திலகவதியின் குரல் மிக இனிமையாக இருப்பது அறிந்து 'பாட்டுப்பாடத் தெரியுமா? தெரிந்தால் பாடேன்" என்றேன்.

"மாசில் வீணையும்......" என்னும் திருநாவுக்கரசரின் தேவாரப் பாடலை அவள் மிக இனிமையாகப் பாடினாள். எடுத்ததும் சினிமாப் பாடலைப் பாடும் இக்காலத்தில் இவள் தேவாரம் பாடுகிறாளே என வியந்த நான், "உனக்குச் சினிமாப் பாட்டுத் தெரியாதா?" என்று கேட்டேன்.

"உங்களுக்குத் தேவாரம் பிடிக்காதா?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள் திலகவதி.

திலகவதி தொடர்ந்து சொன்னாள்: "எனக்குச் சினிமாப் பாடல் தெரியும். என்றாலும் தேவாரப் பாடல்களைத்தான் பாடுவேன். இதற்கு என் தாயாரின் கண்டிப்பும், நான் கலந்துகொள்ளும் தேவார வகுப்பும்தான் காரணங்கள்."

இந்த வயதிலேயே தேவாரப் பாடல்களைத் திலகவதி விரும்பிப் பாடுவதை அறிந்தபோது எனக்கு, 'சைவகுலத் திலகமாக' விளங்கிய திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதி அம்மையாரின் நினைவும் வந்தது.

தேவாரம் பாடும் திலகவதிக்கு அந்தத் தேவாரப் பாடல்களைப் பாடிய சிவனடியார்களும், தேவாரப் பாடல்களின் தலைவனாகிய சிவபெருமானும் துணைநின்று அருள்புரிய வாழ்த்துவோம்.

-வணிகன்

சமுதாயம் வாழ்த்துகிறது

அமைச்சரின் உளம் கனிந்த வாழ்த்து

ம.இ.கா. தேசியத் தலைவரும் தொடர்புத்துறை அமைச்சருமான மாண்புமிகு டான்ஸ்ரீ டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்களின் வாழ்த்துரை

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் துவக்குகின்ற "புதிய சமுதாயம்" எனும் இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"அரசாங்கத்தின் சமுதாயச் சீரமைப்பு, வறுமை ஒழிப்பு, மக்களுக்குத் தரமான வாழ்க்கையை நல்குவது ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நமது புதிய சமுதாயம் முழுமூச்சாகப் பணி புரியும்" என திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் எனக்கெழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறேன்.

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் பத்திரிகைத் தொழிலில் நீண்ட நாள் அனுபவம் உடையவர்கள். "தமிழ் நேசன்", "தமிழ் முரசு" ஆகிய பெரிய பத்திரிகைகளின் வழி நல்ல பல பணிகளை ஆற்றியவர்கள்.

அவர்கள் துவக்குகின்ற "புதிய சமுதாயம்" இதழுக்கு வாசகர்கள் எண்ணிக்கை வளர்ந்தோங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.


துணையமைச்சரின் தீந்தமிழ் வாழ்த்து

பிரதமர் துறையின் துணையமைச்சரும், ம.இ.கா. தலைமைச் செயலாளருமான மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்த்துரை.

1977 ஜனவரி திங்கள் முதல் வெளிவருகின்ற "புதிய சமுதாயம்" இதழுக்கு எனது வாழ்த்தினையும் வரவேற்பையும் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி.

உள்நாட்டில் தற்பொழுது ஓரிரு மாத வார சஞ்சிகைகளே வெளிவருகின்றன என்ற மனக்குறை பலரிடையே காணப்படுகின்றது. குறிப்பாக, நம்மவரிடையே இலக்கிய உணர்வு மிகுந்து வரும் இவ்வேளையில் "புதிய சமுதாயம்" போன்ற இதழ்கள் வெளியிடப்படுவது நமக்கு உற்சாகமூட்டக்கூடிய செய்தியாக உள்ளது.

இவ்விதழ் தாங்கியிருக்கும் பெயருக்கு ஏற்றாற்போல், மலேசிய இந்திய சமுதாயத்தினிடையே முற்போக்கு எண்ணங்களுக்கு அடிகோலும் வழிகாட்டியாக அமைகின்ற விதத்தில் இது வெளிவரும் என நம்புகின்றேன். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினர்க்கும் உகந்ததொரு பயன்மிக்க ஏடாக "புதிய சமுதாயம்" திகழ எனது மகிழ்ச்சி கலந்த வாழ்த்துக்களைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.



உபைதுல்லாவின் உயர் வாழ்த்து

இந்தியக் கூட்டு வர்த்தக சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற மேலவையின் துணைத்தலைவருமான மாண்புமிகு டான்ஸ்ரீ டத்தோ எஸ்.ஓ.கே. உபைதுல்லா அவர்களின் வாழ்த்து.

நல்ல சமுதாயம் வேண்டும்! இது உலகில் ஒவ்வொரு நாடும் எழுப்பும் ஜீவகீதம்.

மண்ணிலிருந்து எத்தனையோ புதை பொருட்கள் கிடைக்கின்றன. தங்கத்திற்கும் வைரத்திற்கும் உள்ள மதிப்பு வேறு எதற்கும் இல்லை. இதுபோல் நமது சமுதாயம் உலகில் மதிப்புப் பெறவேண்டும். அப்பொழுது தான் நமது சமுதாயம் நல்ல சமுதாயமாகும்.

முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் காண விரும்பும் சமுதாயம் "புதிய சமுதாயம்."

மண் அளிக்கும் தங்கமும் வைரமும் கரடு முரடாக இருந்தால் அவ்வளவு மதிப்பு இருக்காது. தங்கத்தை அழகான ஆபரணங்களாகக் கட்டுகிறார்கள்; வைரத்தை அழகான உருக் கொடுத்து வெட்டுகிறார்கள். அவற்றின் மதிப்பு கூடுகிறது.

நல்ல சமுதாயமான நமது சமுதாயம் உலகம் மதிக்கின்ற சமுதாயமாக வேண்டுமென்றால் வேண்டாத பழமை நீங்கி, தேவையுள்ள புதுமைகள் மலர வேண்டும். எழிலாகக் கட்டப்படும் தங்கம் போல, அழகாக வெட்டப்படும் வைரம் போல.

அஞ்ஞானத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, விஞ்ஞானத்தைத் துணைக் கொண்டு நடைபோடும் உலகில், முருகு அவர்கள் காண விரும்பும் புதிய சமுதாயம் வையகம் போற்றும் நல்ல சமுதாயமாக வேண்டுகிறேன்! வாழ்த்துகிறேன்.

பத்மநாபன் வரவேற்பு

தொழிலாளர்—ஆள்பல அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் திரு. கு. பத்மநாபன் கே. எம். என். அவர்களின் வாழ்த்துச் செய்தி

"புதிய சமுதாயம்" என்னும் பத்திரிகை மாதம் இருமுறை வெளிவர இருப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஏற்பாட்டாளர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

நமது சமுதாயத்தில் இப்பொழுது ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்பது தெளிவு. பொருளாதார, சமுதாய, கலை கலாச்சாரத் துறைகள் யாவற்றிலும் நம்மிடையே உள்ள குறைபாடுகளைக் களைந்திட நாளிதழ்களுடன் "புதிய சமுதாய"மும் பொறுப்புடன் முயலும் என நம்புகிறேன். அதோடு நாட்டுப் பற்று, நிலையான இன ஒற்றுமை போன்ற நமது இளநாட்டின் தலையான தேவைகளையும் வளர்க்கும் வண்ணம் இது இயங்கி வர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகைத் துறையில் பழுத்த அனுபவம் பெற்று விளங்கும் திருவாளர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் இவ்வெளியீட்டிற்கு பொறுப்பேற்றிருப்பது சாலப் பொருத்தமே. "புதிய சமுதாயத்திற்கு" இதனால் நல்ல தலைமைத்துவம் அமைகின்றது.

புதிய சமுதாயத்திற்கு எனது பாராட்டும், வாழ்த்தும்!

கூட்டுறவுத் தந்தையின் நல்வாழ்த்து

தேசிய ஒற்றுமை வாரியத்தின் தலைவரும் கூட்டுறவுத் தந்தையுமான மாண்புமிகு துன் வீ. தி. சம்பந்தன் அவர்களின் வாழ்த்து









சமுதாயத் தொண்டு செய்ய வரும் புதிய சமுதாயத்திற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

நிறைய அனுபவம் பெற்ற திரு. முருகு சுப்பிரமணியன் ஆரம்பிக்கும் இந்த இதழ் நாட்டிற்கும் மக்களுக்கும் தொண்டாற்றும் என்பதில் ஐயமில்லை.

மலேசியாவில் வாழும் நாம் ஆக்கப் பணியில் ஈடுபடுவது மிக முக்கியமானதாகும். ஒற்றுமை, செயல் தன்மை இவை இரண்டுடன் நல்ல சிந்தனை, நல்ல எண்ணம் இவை நமக்குத் துணையாகும்.

எனவே, "புதிய சமுதாயம்" தனது பணியில் ஆக்கப்பணியை மிகமுக்கியமானது என்று ஏற்றுக்கொண்டு நமது சமுதாயம் எல்லாத் துறைகளிலும் சச்சரவின்றி ஆக்கப்பணியில் ஈடுபடுவதற்கு உதவிசெய்ய வேண்டும்.

எனது நல்வாழ்த்துக்கள்.

பெருநிலக்கிழார் வாழ்த்துரை

"தமிழ் மலர்" நாளேட்டின் உரிமையாளரும் பெருநிலக் கிழாரும் அருள்மாமணியுமான திரு. என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை ஏ.எம்.என். அவர்களின் வாழ்த்து

மாதம் இருமுறை வெளிவர இருக்கும் "புதிய சமுதாயம்" எனும் தமிழ் இதழ் தைத்திங்கள் முதல் வெளிவர இருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மலேசியாவில் தமிழ்க் கல்வியின் எதிர்காலமும் பத்திரிகையின் வளர்ச்சியும் ஒன்றாக இணைந்து முயற்சிக்க வேண்டும். எதிர்கால இளம் சந்ததிகளுக்கு ஏற்றவாறு அவர்கள் மனம் கவரும் நிலையில் அவர்கள் அறிவு உயரவும் தமிழ்ப் பண்பு, கலாச்சாரம் இவைகளைத் தாங்கி வெளிவர முயலும் கொள்கைதான் "புதிய சமுதாயம்". அதன் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தும் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் பத்திரிகை உலகில் புதியவர் அல்ல. மலேசிய மக்களுக்கு நன்கு அறிமுகம் உடையவர். "முத்தமிழ் வித்தகர்" என்ற பெயரைப் பெற்றவர். அவருடைய முயற்சிகள் வெற்றி பெறவும் புதிய சமுதாய இதழ் வளர்ந்தோங்கவும் புது வருடப் பிறப்பாகிய இன்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு பெருநிலக்கிழார் தமது வாழ்த்துரையில் கூறி இருக்கிறார்.

மக்கள் தொண்டர் வாழ்த்துகிறார்

புதிய சமுதாயம் என்ற பெயர் நமது சமுதாயத்துக்குப் புத்துயிரும், புது எழுச்சியும் தரும் என்பதில் சந்தேகமில்லை. தமிழர் சமுதாயம் இருக்கக் கூடிய இந்த நிலையில் எழுச்சி ஊட்டக்கூடிய ஓர் இதழ் அவர்களது மத்தியில் அவசியமாக தேவைப்படுகின்றது. ஏறக்குறைய 10 லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியர்களில் 80 சதவிகிதம் தமிழ் பேசக்கூடியவர்கள். இவர்களின் வாழ்க்கை வளம் பெறவும், ஒளிமயமான எதிர்காலம் அமையவும் "புதிய சமுதாயம்" தொண்டாற்றும் என்று நம்புகின்றேன். புதிய சமுதாயத்தில் வரக்கூடிய செய்திகளும், கட்டுரைகளும், கவிதைகளும் மற்ற வெளியீடுகள் போலல்லாமல் தமிழர் சமுதாயத்துக்கு வழிகாட்டியாகவும், ஒற்றுமைக்கு உறுதுணையாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

சீர்திருத்த பணிகளில் ஈடுபாடு கொண்ட முத்தமிழ்வித்தகர் திரு. முருகு சுப்பிரமணியன் ஆரம்ப காலத்தில் நடத்திவந்த "பொன்னி" இதழ் நமக்கெல்லாம் ஞாபகமிருக்கும். அந்தப் பத்திரிகையைப் படித்தவர்கள் இன்று "புதியசமுதாயம்" என்று சொல்லும் போது எப்படி இருக்கும் என்பதில் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

பொருளாதாரத்துறை, சமுதாயத்துறை, அரசியல்துறை இவற்றில் தமிழர்கள் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்துள்ளது. "ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன" என்ற அலட்சிய மனப்பான்மையை அகற்றி, ஆளக்கூடிய அரசுக்கும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு என்பதை இதயத்தில் நிறுத்தி, அந்த அடிப்படையில் சமூகத்தை உருவாக்குவது "புதிய சமுதாயத்தின்" பொறுப்பும் கடமையும் ஆகும்.

நல்லவர்களும், வல்லவர்களும் மக்களைப் பிரதிநிதிக்கும் வகையில் சமூகம் அவர்களைத் தயார் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து நமது சமூகம் தவறி விட்டால் அதன் பிரதிபலனை நாமே சுமக்க வேண்டும். காரணம் இந்த விளைவுகளுக்கு நாமே பொறுப்புதாரராக இருந்திருக்கிறோம்.

"புதிய சமுதாய"த்துக்கு எனது மனப்பூர்வமான ஆதரவும், ஒத்துழைப்பும் இருக்கும். கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி எதிர்காலத்திலும்கூட ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க, முற்போக்குச் சக்திகளைப் படைக்க எனது தொண்டு நிரந்தரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு திரு. வீ. டேவிட் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யு. ஏ. பி. வாழ்த்துகிறது

"புதிய சமுதாயம்" என்னும் மாதமிருமுறை இதழுக்கு என் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலேசிய இந்திய சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இந்தப் புதிய இதழ் சிறந்த லட்சியங்களோடு பணியாற்றும் என்று நம்புகிறேன்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை..." என்னும் குறளின் அழுத்தமான கருத்தை இந்தியக் குடும்பங்களில் நன்கு பதிய வைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் வருமானத்தையும் உயர்த்துவதற்கும் அதன்மூலம் இந்திய சமூகம் நாட்டின் செழிப்புக்குக் கணிசமான பங்காற்றுவதற்கும் சிரிய வழிகாட்டியாகப் "புதிய சமுதாயம்" விளங்கவேண்டும் என்பது என் விருப்பமாகும்.

"புதிய சமுதாயம்" வெற்றி அடைய மீண்டும் என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

கே. வி. மூர்த்தி
தலைமை நிர்வாக இயக்குநர்
யுனைடெட் ஆசியன் பேங்க்
கோலாலம்பூர்.

பிரணவானந்தரின் ஆசியுரை

தெய்வீக வாழ்க்கைச் சங்கத் தலைவர் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி வாழ்த்து

தாங்கள் விரைவில் "புதிய சமுதாயம்" என்னும் இதழைத் தொடக்கவிருப்பது குறித்துப் பெரு மகிழ்வெய்துகிறோம். மேற்படி இதழின் சீரிய குறிக்கோள்கள் அரசாங்கத்தின் சமுதாயச் சீரமைப்பு, வறுமை ஒழிப்பு, மக்களுக்குத் தரமான வாழ்க்கையை நல்குவது ஆகியவை என்பதும், பல்வேறு அம்சங்கள் பொருந்திய தரமான குடும்பப் பத்திரிகையாக "புதிய சமுதாயம்" திகழும் என்பதும் பெரிதும் போற்றற்குரியன; மனநிறைவோடு வரவேற்கிறோம்.

தாங்கள் நாளிதழ்களின் பத்திராதிபராகப் பணியாற்றிப் பெற்றுள்ள நீண்டகால அனுபவமும் நன்மதிப்பும் தங்கள் அரசியல் ஞானமும் எழுத்தாற்றலும், சமுதாயச் சிந்தனைகளும் இப்புது முயற்சியில் வெற்றி காணப் பெரிதும் துணைபுரியுமென நம்புகிறோம். "புதிய சமுதாயம்" தனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் சித்தி அடையவும் சமுதாயத்தின் முன்னேற்றப்பாதைக்கு வழிகாட்டியாகத் திகழவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டி வாழ்த்துகிறோம்.

இலங்கைச் சைவர் சங்கம் வாழ்த்து

"புதிய சமுதாயம்" என்னும் இதழ் 1977 ஜனவரி முதல் வெளியாகும் என்னும் நற்செய்தி மிகவும் மகிழ்ச்சிக்கும் வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

இப்பத்திரிகையின் குறிக்கோள் மிகவும் முக்கியமானது, எங்கள் நாட்டில் விரும்பத்தக்கது. இவ்விதழ் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் மன நிறைவு அளிக்கும் என நம்பி வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

டாக்டர் க. கனகசபை
தலைவர்
சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

தேவஸ்தானம் வாழ்த்துரை

மலேசிய எழுத்துலகிலும், பொதுத்துறையிலும் நன்கு அறிமுகமான முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்களின் பொறுப்பில் வெளிவரும் "புதிய சமுதாயம்" மலேசிய சமுதாயத்திற்குத் திடமான வழிகாட்டும் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

"தொட்டது துலங்கும்" என்பது முருகுவைப் பொறுத்தவரை உண்மையாகும். அவரது துவக்கங்கள் அனைத்துமே மகத்தான வெற்றி பெற்றுள்ளன.

புதிய சமுதாயமும் எல்லா வளங்களும் பெற்று, நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் இந்து சமயத்துக்கும் என்றென்றும் பணியாற்றிவரும் என உறுதியாக நம்புகின்றேன்.

சமுதாய மேம்பாட்டில் எப்போதும் படிந்துள்ள முருகுவின் உள்ளம், தனது தெளிவான சொந்தக் கருத்துக்களையும் சுதந்தர லட்சியத்தையும் கொண்டு நாடெங்கும் தமிழர் இல்லமெல்லாம் வெற்றி பவனி வர உளமார வாழ்த்துகின்றேன்.

செ. சொக்கலிங்கம்
தலைவர்
ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில்
தேவஸ்தானம்
கோலாலம்பூர்



சமுதாயம் வாழ்த்துகிறது.

இராமதாசர் இனிய வாழ்த்து

ஊன்றிய முறைகள் உவந்தெழு தமிழ்முன்
ஈண்டி நின்றிக்கால் இயல்வது குன்றி
மடமை பல்கி மாத்தமிழ்ச் செல்வர்கள்
உடமை குன்றிய போக்கது தவிர்த்து
கடமை, கண்ணியம், கட்டுப்பா டெனும்
நடைமுறை தழைத்து நன்கு வாழற்காய்
தமிழ்நிலை, துறைநிலை, தமிழரின் செழுநிலை
அமிழ்தென வாய்ந்து தேர்ந்த பெற்றிசால்
உருகு நெஞ்சத் துவகை யாளன்
முருகு சுப்பிர மணியன் முயன்று
நிதியம் தம்மோடு தமிழர் உயர்ந்திடப்
புதிய சமுதாயம் எனும்பெய ருடைய
வார நல்லிதழ் வளமையா யமைத்தனன்
ஆரும் போற்றி அறிவு தெளிவுறக்
கவிதை, கட்டுரை, காதல், ஒழுக்கம்
செவிக்கி னிதாகிய செய்திக ளோடு
புதிய சமுதாயம் புகழொடு திகழ்க!
மதியப் பேரொளி வாய்ப்பென வாய்த்து
நெடுநாட் நிலைக்கும் செழும் புகழ் நிறுவுக
அதனால் மக்கள் அமைதிபெற் றுய்வரால்
வாழிய புவி மிசை மாண்பொடு
வாழிய புதிய வளர் சமுதாயமே.

முதுபெரும் புலவர் சுவாமி இராமதாசர்

இந்து இளைஞர் வாழ்த்து

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் "புதிய சமுதாயம்" தோற்றம் எடுப்பதை அறிந்து மகிழ்வுகொள்ளுகின்றேன்.

பல இன மலேசிய சமுதாயத்தில் குறிப்பிட்ட ஓர் சமூகத்தினர் பின் தங்குவதைத் தவிர்க்க வேண்டும். சமூக ஏற்றத் தாழ்வை அகற்ற இந்திய, இந்து மக்களிடையே விழிப்புணர்ச்சி தேவை. இவ்வுணர்வைப் "புதிய சமுதாயம்" வலுப்படுத்தும் என நம்புகிறேன்.


நமது சமூகத்தில் அவ்வப்போது ஏற்படும் வேறுபாடுகளை அகற்றித் தரமான இதழாகப் "புதிய சமுதாயம்" தொடர்ந்து தோற்றமளிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சி. இராஜரத்தினம்,
தலைமைச் செயலாளர்,
மலேசிய இந்து இளைஞர் பேரவை.

(மேலும் வாழ்த்துச் செய்திகள் 29, 30 பக்கங்களில்)

தமிழ் மலை

டாக்டர் இரா. தண்டாயுதம்
மலாயா பல்கலைக்கழகம்



இந்த நூற்றாண்டில் தமிழ் அறிஞர்கள் அனைவரும் போற்றும் ஒரு தமிழ்க் கழகமாகத் திகழ்ந்தவர் மறைமலையடிகள். தமிழ் அறிஞர்களிடையே மட்டுமன்றித் தமிழ் மக்கள் அனைவரின் சிந்தனைகளையும் இயங்க வைத்து அவர்களிடையே மொழி, வாழ்க்கை முறை, பண்பாடு, சமயம் முதலிய அனைத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அடிகளே என்பது வரலாறு கூறும் உண்மையாகும். தன் மொழியில் பேசுவதும் இழிவு என்று கருதிய தம் காலத்துத் தமிழ் மகனுக்குத் தமிழின் செம்மாந்த நிலையினைக் காட்டியவர் அடிகள்; தன் நாகரிகத்தைப் பற்றி அறியாது தன்னிலை மயங்கிக் கிடந்த தமிழனுக்குத் தன் நாகரிகத்தின் உயர்வை உணர்த்தியவரும் அடிகளே ஆவர்.

சுருங்கச் சொன்னால், தம் காலத்து அறிஞர் உலகையும் தமிழர் உலகையும் ஒருசேர இயங்க வைத்தவர் அடிகளே என்று கூறலாம். "அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக் கொண்டு வேதாசலனாராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கிறார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு......தென்னாடு பன்னெடுங் காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகட்குண்டு. அவர் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் ஆங்கிலப் புலமையும் ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும். . அடிகள் பேச்சு பல பேச்சாளரைப் படைத்தது; எழுத்து பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது. 'அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்' என்று கூறல் மிகையாகாது" என்று அவரோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. கூறுவது இதனை உணர்த்தும். இந்த அளவிற்குத் தம் காலத்துத் தமிழ் உலகின் இயங்கும் - இயக்கும் - ஆற்றலாகத் திகழ்ந்தவர் மறைமலை அடிகள்.

மறைமலையடிகள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், 1876-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் பிறந்தார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும், சைவ சமயப் பற்றும், தமிழ்ப் பற்றும் நிறைந்தவராக இவர் விளங்கினார். உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்திலேயே "இந்து மதாபிமான சங்கம்" என்று ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து, அதில் பல அரிய சொற்பொழிவுகளை அடிகள் ஆற்றியுள்ளார். தம்முடைய நிறைந்த தமிழறிவின் காரணமாக, தம்முடைய இருபத்திரண்டாவது வயதிலேயே சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இவர் நியமிக்கப்பட்டார். அங்கு அப்போது தமிழ்த் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த மற்றொரு அறிஞர், தமிழ் அறிஞர்களிடையில் தனிச் செல்வாக்குப் பெற்றிருந்த பரிதிமாற் கலைஞர் ஆவார். இவ்விரு அறிஞர்களும் தம் பணியால் கிறித்துவக் கல்லூரிக்கே ஒரு தனிச் சிறப்பு சேர்த்துத் தந்தனர்.

மறைமலையடிகளின் பெயரைச் சொல்லிய அளவில் தமிழறிந்த யாவருக்கும் உடன் நினைவிற்கு வருவது, தனித் தமிழ் இயக்கமே ஆகும். இந்த அளவிற்குத் தனித் தமிழில் எழுதுவதை ஓர் இயக்கமாகவே வளர்த்து செழிக்கச் செய்தவர் அடிகள் ஆவர். இவ்வியக்கம் தோன்றிய வரலாறே சுவையானது. அடிகளின் புதல்வியார் நீலாம்பிகை, ஒருமுறை இராமலிங்க சுவாமிகளின்,

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்

உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்

கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்

நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்குமென்
நமச்சி வாயத்தை நான்மற வேனே"

என்ற பாடலை மனமுருகப் பாடினாராம். அதனைக் கேட்ட அடிகள் சிறிது நேரம் தம்மை மறந்து இருந்தனராம். பின்னர் தம் புதல்வியிடம், அப்பாடலிலுள்ள "தேகம்" என்ற சொல்லைக் குறிப்பிட்டு, அச்சொல்லுக்குப் பதில்



முதல் சந்தாதாரர்

"*புதிய சமுதாயம்*" இதழுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே முதல் சந்தா வந்து விட்டது. இந்த முதல் சந்தாவை அனுப்பியவர் காஜாங் தோட்டத்தைச் சேர்ந்த திரு. செங்கோட்டய்யா நல்லையா என்னும் அன்பர்.

அத்தோட்டத்தில் மருத்துவமனை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் செங்கோட்டய்யா நல்லையா, புதிய சமுதாயம் இதழ் வர விருப்பதாகத் தமது காதில் விழுந்த அந்த வினடியே $20 மணியார்டர் அனுப்பித் தம்மைப் புதிய சமுதாயத்தின் சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளும்படி கடிதமும் எழுதி விட்டார்.

"புதிய சமுதாயத்திற்கு எனது முதல் காணிக்கை இது. புதிய சமுதாயம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடித் தமிழுக்கும் தமிழர்க்கும் மலேசிய சமுதாயத்திற்கும் தொண்டாற்றும்" என்று அவர் தமது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதிய சமுதாயத்தின் 52 இதழ்களுக்குரிய சந்தா $23 ஆகும். $20 அனுப்பியுள்ள திரு. செங்கோட்டய்யா நல்லையா முதல் சந்தாதாரர் என்பதால் அவருக்குத் தனிச் சலுகையாக 52 இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

"யாக்கை" என்ற தமிழ்ச் சொல் இருந்திருப்பின் பாடல் இன்னும் ஒலிநயத்தில் சிறந்திருக்கும் என்று கூறினாராம். அவ்வளவில் நில்லாது, வேண்டுமென்றே பிற மொழிச் சொற்களைக் கலந்து தமிழின் தனித் தன்மையைக் கெடுப்பாரைப் பற்றியும் அடிகள் குறிப்பிட்டாராம். அதனைக் கேட்ட அளவில், "இனி தனித் தமிழிலேயே எழுத முற்பட்டால் என்ன?" எனப் புதல்வியார் கேட்டாராம், கேட்டதோடு நில்லாது தனித் தமிழிலேயே பேசவும் எழுதவும் அவர் முற்பட்டு விட்டார். அதனைக் கண்ட அடிகள் தாமும் தனித் தமிழிலேயே பேசவும் எழுதவும் முற்பட்டார்.

அதுவரை அடிகளார் எழுதிய தமிழ், அக்கால வழக்கிற்கேற்பத் தமிழும் வடமொழியும் கலந்த ஒன்றாகவே இருந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின் அதனைக் கைவிட்டார் அடிகள். சுவாமி வேதாசலம் என்ற தம்முடைய பெயரை மறைமலையடிகள் என்று மாற்றிக் கொண்டதோடு, "ஞானசாகரம்" என்ற பெயரில் தாம் நடத்தி வந்த திங்கள் இதழின் பெயரையும் "அறிவுக் கடல்" என்று மாற்றினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் அடிகள் எழுதிய நூல்கள் அனைத்தும் தனித் தமிழிலேயே அமைந்தன. முன்னர் எழுதி மறு பதிப்புக்கு வந்த நூல்களிலும், வட சொற்களை நீக்கித் தனித் தமிழ்ச் சொற்களாக அடிகள் மாற்றினார். இவ்வாறு அடிகள் தொடங்கிய ஒரு நன்முயற்சி ஓர் இயக்கமாகவே உருப்பெற்று, இன்றும் அதன் அலைகள் தமிழ் உலகில் வீசிக் கொண்டுள்ளன. தமிழின் மீதுள்ள அடங்காக் காதலாலேயே அன்றி, பிற மொழிகளின் மீதுள்ள வெறுப்பால் இவ்வியக்கம் உருப்பெறவில்லை என்பதை இவ்வரலாற்றைப் படிக்கும் யாரும் உணரலாம்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் ஆக மும்மொழிப் புலமை பெற்றவர் அடிகள். இம் மும்மொழிகளிலும் சிறந்து நின்ற நூல்கள் பலவற்றை அடிகள் இளமை முதலே வாங்கிச் சேர்த்து வந்தார். அதன் காரணமாக அவருடைய வீட்டிலேயே ஒரு பெரிய நூலகம் உருவாயிற்று. அடிகளுக்குப் பின்னர் அந்நூல்களைக் கொண்டு அவருடைய பெயராலேயே "மறைமலையடிகள் நூலகம்" ஒன்றும் அமைக்கப்பட்டது. அது இன்றளவும் நடந்து வருகிறது. நூல்களை எப்படிப் பாதுகாப்பது என்பதை இந்நூலகத்தில் உள்ள அடிகளாரின் புத்தகங்களைப் பார்த்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அடிகளாரின் புலமை ஆழமானது. ஆழ் கடலினும் ஆழமான அப்புலமை உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த அறிவு வெள்ளம் பலப்பல ஆராய்ச்சி நூல்களில் இன்றளவும் காணக் கிடக்கின்றது. திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை, சைவ சித்தாந்த ஞானபோதம், அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை, சைவ சமயத்தின் நெருக்கடி நிலை ஆகியவை சைவ சமயத் துறையில் அடிகளாரின் திறனை விளக்குவன. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், தமிழர் மதம் ஆகியவை அடிகளாருடைய சமயத் தொடர்பான ஆராய்ச்சி நூல்கள். சோமசுந்தர காஞ்சியாக்கம், சாகுந்தல நாடக ஆராய்ச்சி, முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, வேளாளர் நாகரிகம் முதலிய பல நூல்கள் இவரது ஆராய்ச்சியின் நுட்பத்தைக் காட்டுவன. பொருந்தும் உணவும், பொருந்தா உணவும், தொலைவில் உணர்தல் ஆகியவை இவருடைய அறிவியல் அறிவிற்கும் சான்று கூறுவன.

அறிவிலும் ஆராய்ச்சியிலும் மட்டுமன்றிப் படைப்புத்துறையிலும் மறைமலையடிகள் எவ்வளவு ஈடுபாடு காட்டி வந்தார் என்பதற்குக் குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் இரு நூல்களும் சான்று கூறுகின்றன. கடித முறையில் அமைந்த ஒரு முழு நாவலுக்குத் தமிழில் இன்றளவும் 'கோகிலாம்பாள் கடிதங்களே" ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றது. அடிகளின் சிந்தனைகள் அன்றே எந்த அளவிற்குச் சீர்திருத்த வேகத்தோடு ஒளிர்ந்தன என்பதற்கு அடிகள் தமிழுலகிற்கு விட்டுச் சென்றுள்ள இந்நூற் செல்வம் என்றும் உணர்த்திக் கொண்டிருக்கும்.

அடிகளின் நூல்களே அன்றி, அவருடைய வாழ்க்கையும் ஒரு கட்டுப்பட்ட ஒழுங்கு முறைக்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. காலை 8 மணிக்குத் தொடங்கி இரவு இரண்டு மணிக்கு முடிந்த அவருடைய அன்றாட வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடும் திட்டமும் அமைந்திருந்தன. எதையும் முன்னமே சிந்தித்து, திட்டமிட்டு, திட்டமிட்ட வண்ணமே செய்து முடிப்பது அடிகளின் இயல்பு. இவ்வியல்பு இறுதிவரை அவரிடமிருந்து நீங்கவில்லை.

ரூபாய் இருநூறு

எழுத்தில் இருந்த ஆற்றலைப் போலவே பேச்சிலும் அவருக்கு ஒரு தனித்த ஆற்றல் இருந்தது. தமிழ்ச் சொற்பொழிவுகளுக்கு ஒரு தனித் தகுதியும் பெருமையும் சேர்த்தவர் அடிகளே! ரூபாய் இருநூறு இல்லாமல் அவர் எந்தச் சொற்பொழிவும் செய்ததில்லை; அவ்வாறே, தம் சொற்பொழிவுகளுக்குப் பிறரைத் தலைமைதாங்கச் செய்ததும் இல்லை. தமக்கே அன்றி, தம்முடன் வருபவர்க்கும் சொற்பொழிவு ஏற்பாட்டாளர்கள் அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்பதை அடிகள் தம்முடைய கட்டளைகளில் ஒன்றாகவே வைத்திருந்தார். தங்குவதற்குத் தனி வீடு, சைவச் சமையற்காரர், வெளிவேலைக்கு ஓர் ஆள், வேண்டிய நாற்காலி முதலியன, உணவு வகைகள் முதலிய அனைத்தைப் பற்றியும் சொற்பொழிவு ஏற்பாட்டாளர்க்கு முதலிலேயே எழுதிவிடுவது அடிகளாருடைய வழக்கம்.

“இவ்வளவு ஏற்பாடுகள் செய்தால்தான் அடிகள் வருவார்” என்ற நிலை இருப்பினும் அடிகள் ஓய்ந்து இருந்ததே இல்லை எனின் அவருடைய பேச்சிற்கு எவ்வளவு வரவேற்பிருந்தது என்பது எளிதில் புலனாகும்.

எழுத்தாலும், பேச்சாலும் இன்னும் பிற எல்லாவகைகளாலும் இவ்வாறு தமிழ் உலகிற்குப் பணியாற்றிய மறைமலை அடிகள் தம் காலத்தில் மட்டும் அன்றி இன்றும் ஒரு பெரிய தமிழ் மலையாகவே விளங்குகின்றார். பல்வகை வளங்களும் அம்மலையில் செழித்துக் குவிந்துள்ளன. பயன்படுத்திக் கொள்வது தமிழ்ச் சமுதாயத்தின் கடன். மறைமலையடிகளின் இந்நூற்றாண்டு ஆண்டிலாவது அக்கடமையைச் செய்யத் தொடங்குவோமா?



துன்ப சிநேகிதன்

கண்ணதாசன்

ஒரு சோலைக்கு இலையுதிர் காலத்தில் மட்டுமே ஒரு குயில் வந்துகொண்டிருந்தது.

“சோபை இழந்த இந்தக் காலத்தில் ஏன் வருகிறாய், குயிலே!” என்று ஒரு மரம் கேட்டது.

“நான் வசந்த காலத்தை என் நண்பர்களுக்காக ஒதுக்கிவிடுகிறேன்.

“என் பகைவர்களின் கோபம் தணிந்ததற்காகக் கோடை காலத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறேன்.

“எவரும் தேடா இலையுதிர் காலத்தை நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறேன்.

“இதன் மூலமே ஏ, மரங்களே! உங்கள் துன்பத்தை நான் பகிர்ந்து கொள்கிறேன். தொல்லையில்லாத தனிமையையும் நான் அனுபவிக்கிறேன்.

“இருக்கும்போது எல்லோரும் வருவார்கள்; இல்லாதபோது யார் வருவார்கள்?”

ஒரு மரம் சொன்னது:

“கனி கொய்யும் காலத்தில் ஒருநாள் நீ வர வேண்டும். உனக்காக நாங்கள் பசுமையோடு காத்திருப்போம்”.

அதன் வேண்டுகோளுக்கு இணங்கக் கனி கொய்யும் காலத்தில் குயில் வந்தது.

சோலை முழுவதையும் பறவைகள் சூழ்ந்து கொண்டிருந்தன.

குயிலைப் பார்த்ததும், “யாரோ புதியவன் வருகிறான்” என்று ஒரு பறவை சத்தம் போட்டது.

எல்லாப் பறவைகளும் கிழே தாக்கத் தொடங்கின.

தங்கள் நண்பனுக்கு ஏதும் செய்ய முடியாமல் மரங்கள் கண்ணீர் வடித்தன.

‘குப்’பென்று குயில் வானத்தில் பறந்தது. பறந்தபடியே சொன்னது:

“பார்த்தீர்களா, வாழும் காலத்தில் கூட நாம் துன்பத்திலேதான் கலந்து கொள்ளுகிறோம்! வழக்கம்போல் நான் இலையுதிர் காலத்திலேயே வருகிறேன்!”



நல்லொழுக்க வைட்டமின்

சரசா

"குழந்தை வளர்ப்பு" "குழந்தைகள் கண்காணிப்பு" என்று பத்திரிகைகளில் படிக்கும்பொழுது சிலர் கேலியாகச் சிரிக்கின்றார்கள். "எங்களுக்கு வளர்க்கத் தெரியாதா?" என்று குறைப்பட்டுக் கொள்கின்றார்கள். இன்றைய நிலையில் தாய்மார்கள் ஒவ்வொரு கணமும் தம் குழந்தைகளைக் கண்காணித்து வருவது அவசியம்.

குழந்தைகள் பழகும் நண்பர்கள், போகுமிடங்கள், நடவடிக்கைகள் முதலானவற்றைக் கண்காணித்து வருதல் மிகவும் முக்கியம். இன்று மலேசியாவில் மூன்று இனத்தவரும் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னை போதைப் பொருளாகும். போதையில் மதி மயங்கிக் கொள்ளை, கொலை, கொடிய செயல்களைப் புரியத் தலைப்படுகின்றார்கள் இளைஞர்கள். இதனால் நாட்டின் அமைதி குலைகின்றது. குடும்பத்திலும் பல தொல்லைகள் வந்து சூழ்கின்றன.

பள்ளி செல்லும் பிள்ளைகளிடத்தில் பேச்சுக் கொடுத்து அவர்கள் நண்பர்களைப் பற்றி விசாரித்தல் வேண்டும். இதனால் நம் குழந்தைகள் நாடும் நண்பர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது நமக்குத் தெரியும். நல்லது கெட்டது அறிந்து அவர்களைத் திருத்தவும் முடியும். உணவு, உடை, கல்வியை விட இன்று நல்லொழுக்கம் எனும் மேலான "வைட்டமினை" வளரும் குழந்தைகளுக்கு ஊட்டுதல் அத்தியாவசியமாகும்.

கஞ்சா, ஹெரோயின், மார்பீன், பிட் போன்ற போதைப் பொருட்களின் பழக்கத்திற்குக் குழந்தைகள் அடிமையாகிவிடாமல் பாதுகாப்பது தாய்மார்களின் கடமையாகும். தேகம் திடமிழந்து, வலுவிழந்து, அறிவு மங்கிக் கண்ணிருந்தும் குருடர்களாய் நடைப் பிணங்களாய்ச் சுற்றித்திரியும் வாலிப உருவங்களைப் பார்க்கும் பொழுது இதயத்தில் ஓர் வலி ஏற்படுகின்றது. பாடுபட்டுப் பணந்தேடி வளர்த்துப் படிக்க வைத்துப் பயனடையும் வேளையில் கூடு மட்டும் நடமாடும் அளவுக்கு நம் குழந்தைகளை விட்டு விடாதீர்கள்! அப்படியே தீய பழக்கத்திற்கு அடிமையானது தெரியவந்தால் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பத் தயங்காதீர்கள். தவறு உணர்ந்து திருந்துவதற்கு அதுவே சிறந்தவழியாகும்.

துளசி இருந்தால் பாம்பு வராது!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே "துளசி"ச் செடியை மாடங்களில் வைத்துப் பூசை செய்வது இந்தியர்களின் பண்பட்ட பழக்கமாகி இருந்தது. துளசிச் செடியைத் தெய்வமாகவே மதித்துப் போற்றுவாரும் உண்டு.

இத்தனை பெருமை இச்செடிக்கு ஏன் வந்தது என்று ஆராய்வோமானால் பல அரிய பெரிய வைத்திய முறைகளும், வாழ்க்கைத் தத்துவங்களும் துளசியில் புதைந்துகிடக்கக் காணலாம்.

நாள்தோறும் ஒரு பிடி துளசி இலையை நன்றாக மென்று தின்று வந்தால் மாறாத எழிலுடன் விளங்கலாம்.

வியர்வை நாற்றம் உடைய மேனியர் குளித்தவுடன் துளசி இலைகளால் உடல் மீது தேய்த்து விட்டு உடை அணிந்து வந்தால் நாளடைவில் முடை நாற்றம் நீங்கும்.

துளசிச் செடிகளை நாகம் தீண்டுவதில்லை. துளசிச் செடியை வீட்டைச் சுற்றி வைத்தால் பாம்பு பயம் நீங்கும்.

முனிவர்கள் துளசி மாலையையும், துளசி இலைகளையும் பயன்படுத்தி வந்ததன் நோக்கம் மின்னல், இடியால் பாதிக்கப்படாதிருக்கவும், "பசி"யெனும் நோயால் வாடாதிருக்கவுமே என்பது சித்தர்கள் கூற்று.

"கேஸ்டிரிக்" நோயால் அவதியுறுவோர் இரவு படுக்கைக்குச் செல்லுமுன் ஒரு கைப்பிடித் துளசி இலையின் சாற்றோடு ஒரு டம்ளர் பால் அருந்தினால் இந்நோய் குணமாகும்.

துளசி மாலை முருகனுக்குகந்த மாலையாகவும் பயன்படுத்தப் படுகின்றது.

இத்தனை சிறப்பையும் தன்னகத்தே கொண்ட துளசிச் செடி எளிமையோடு நிற்பதைக் காணும்பொழுது வாழ்க்கையில் நாமும் அப்படி வாழ வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா!

"எப்போ எடுக்கிறுங்களாம்...?"

"தெரியல... இன்னும் யாரோ சொந்தக்காரங்க வரணுமாம் நேரமாவும் போல இருக்கு..."

"இந்த மாதிரி கேஸை ஆஸ்பத்திரியில வெட்டிப் பார்த்த பின்னுடி தானே குடுத்திருப்பான். இவ்வளவு நேரம் வச்சிருந்தா என்னுத்துக்கு ஆவுறது. சட்டு-புடடுன்னு காரியத்தை முடிக்கிறத உட்டுட்டு..."

பேசிக்கொண்டே அந்த வீட்டை நோக்கி முன்னேறியவர் ஒரு சிறு தாண்டலுடன் கீழே கிடந்த சேற்றைக் கடந்து—ஏற்பட்ட தடுமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு வீட்டை நெருங்கி சன்னல் வழி எட்டிப் பார்த்தார்.

அந்தச் சேற்றில் நேற்றிரவு சீட்டாடியவர்கள் தவறவிட்ட சீட்டொன்று மிதிபட்டுக் கசங்கிக் கிடந்தது. அது டைமன் ராணி... ராணிக்கா இந்தக் கதி?

"ராணியைப்போல இருந்தா... அவளுக்கா இந்தக் கதி...? சே...! மனசு எவ்வளவு வெறுத்துப் போயிருந்தா... மூட்டைப்பூச்சி மருந்தைக் குடிச்சிட்டு...

"அவன்தான் புருஷன்காரனு? கொஞ்சமாவது கவலை இருக்கா முகத்தில... இவனுக்கெல்லாம் என்னுத்துக்குப் பொண்டாட்டி...?"

"என்னுப்பா சேகர்...ஒரே கவலையா இருக்கே...?"

"கவலையில்லாதவன் யாரு உலகத்தில. நெருப்பு இருந்தா குடுப்பா... சிகரெட்டாவது போடலாம். இந்தா நீ பத்த வக்கிலையா?"

"நம்மளுக்கு இதெல்லாம் ஒத்துவராது, தோ பாரு... இதைப் பத்தவச்சு நாலு தம் இழுத்தாத்தான் "சூரா" இருக்கும்."

"அது என்னுப்பா... கெழவன் மாதிரி ரோக் தாள் பத்த வக்கிற...?

"இது சாதாரண ரோக்கு இல்ல... "செனை" ரோக்கு...!"



இக்கதை ஒரு சோதனே முயற்சி. இதனே ஒரு தடவை மட்டும் படித்துத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வாசகர்கள் வாசகத் தன்மையில் 100% புள்ளிகள் பெறத் தகுதியுள்ளவர்கள். இரண்டு தரம் படித்த பிறகு புரிந்துகொள்வோர் 70% புள்ளிகள் பெறுவர். மூன்று தடவை படித்த பிறகே புரிந்து கொள்வோர் 50% புள்ளிகள் வாங்குவர். நான்குமுறை படித்த பிறகு புரிந்து கொள்பவர்கள் பெறும் புள்ளிகளே எழுதவும் வேண்டுமா? நீங்கள் எத்தனே புள்ளிகள் வாங்கத் தகுதி உள்ளவர் என்பதைத் தெரிந்துகொள்ள இக்கதையை நிச்சயம் படித்துத்தான் பாருங்களேன்!

"அப்படின்னு...?

"இதப்பாரு எப்படி உப்பிக் கிட்டிருக்கு, முழுவாம இருக்கிற பொம்பளே வயிறு மாதிரி, அதான் செண ரோக்குன்னு பேரு. இதுல சரக்கு இருக்கு... அடிச்சேன்னு கவலேயே தெரியாது... இழுத்துப் பார்க்கிறியா?

"வேண்டாம்...வேண்டாம்..."

"சும்மா ஒரு தம் இழுப்பா..."

"லொக்......லொக்... என்னப்பா மூளேயில போய் என்னமோ செய்யுது...?"

"மொதல்ல... அப்படித் தான் இருக்கும்......யேய் போதும்பா ரொம்ப இழுத்திடாதே..."

"ஐசே... நல்லா இருக்கு... ஆஹா என்ன... ஆனந்தம்...!"

"இது என்ன ஆனந்தம் இதை விட அப்பனுனதெல்லாம் இருக்கு......போட்டா இந்த உலகமே நம்பக் கண்ணுக்குத் தூசாத் தெரியும்,"

"அப்படியா... அதெல்லாம் எங்கக் கிடைக்கும்?"

"பாலாவைத் தெரியுமா?"

"யாரு...இந்த செக்கச் செவேல்னு சீனன் மாதிரி இருப்பானே... அவன......பார்த்திருக கேன். அந்த ஆளேப் பார்த்தாலே ஒரு மாதிரியா... எனக்குப் பிடிக்கவே பிடிக்காது அவண."

"அவன்தான் வச்சிருக்கான், மாத்திரை மாதிரி வாயில போட்டுக்கலாம், ஊசியா கூடப் போட்டுக்கலாம். அதெல்லாம் தேவாமிர்தம் மாதிரி. போட்டுக்கிட்டா இங்கியே சொர்க்கத்தைக் காணலாம். யேய்... நீ பாட்டுக்கு இழுத்துக்கிட்டே இருக்கே. சரிதான் போ... வேண்டாம் வேண்டான்னே... நீ பாட்டுக்கு இழுக்கிறே? நடக்க முடியாம சாய்ஞ்சிடப் போறே தூக்கிக்கிட்டுப் போக வேண்டியதாயிடும்,"

தூக்குங்க... தூக்குங்க ...ஒரு கை குடுப்பா... மெதுவா... மெதுவா...

பெட்டிய இப்படித் திருப்புங்க... தலே இந்தப் பக்கம்...

வண்டியில ஏறி பெட்டிய இழுங்க...

மெதுவா...

பூவளேயங்களேயெல்லாம் கொண்டு வந்து வையுங்க... போப்பா... என்ன சும்மா நிக்கிறே...,

ஃ ஃ ஃ

"என்னங்க சும்மா... நீங்க பாட்டுக்கு உட்கார்ந்திருந்தா நம்பக் குடும்பம் என்னத் துக்குங்க ஆவுறது. முன்பெல்லாம் வேலே முடிஞ்சி வந்திங்கன்ன கொல்லேயில போய் வேலே... செய்வீங்க... நாலஞ்சி காசாவது கெடைக்கும். ஆன... இப்ப எல்லாம் ஆகாசத்தில கோட்டை கட்டப் போற மாதிரி எதையோ நினேச்சிக்கிட்டு உட்கார்ந்திடுறீங்க சரியா சாப்பிடுறதில்ல.. தூங்குறதில்லே... ஏங்க.,.?"

"ஏய்... என்னேச் சும்மா தொந்திரவு செய்யாதே...என்னே இப்படியே இருக்க விட்டுட்டு நீ போய் உன் வேலேயைப் பாரு... சும்மா நச்சரிச்சேன்ன நான் பாட்டுக்கு எங்கியாவது போயிடுவேன்."

"போயிடுங்க பொண்டாட்டி ஒருத்தியிருக்கான்கிறதையே மறந்துட்டுப் பேய் உலாத்திற நேரத்தில அந்த பாலாவோட சுத்திப்புட்டு வாங்க...... நீங்க இப்பல்லாம் ரொம்ப மாறிப் போயிட்டீங்க .... கலியாணம் ஆன ஆம்பிளே காலிப்பசங்க கூட சேர்ந்துக்கிட்டு ஊரைச் சுத்தின யாராவது பார்த்தா என்ன சொல்லுவாங்க?"

"அது என இஷ்டம். நான் எப்படியும் சுத்துவேன."

"நீங்க எப்படி வேணும்ன லும் சுத்துங்க......வேற யார் கூடவேணும்னலும் சுத்துங்க... ஆன...அந்த பாலாவோட சகவாசம் மட்டும் வேணும். அவனேப் பத்தி ஒரு மாதிரியாப் பேசிக்கிறாங்க..."

"எவன் எப்படிப் பேசின எனக்கென்ன......? எனக்கு அவன்தான் உயிர் நண்பன். அவனோட ஊரையும் சுத்துவேன். இந்த உலகத்தையும் சுத்துவேன்."


ஃ ஃ ஃ

"சரி...ஆச்சா? பொம்பளேங்க புள்ளேங்களேயெல்லாம் சுத்தச் சொல்லுங்க..."

"ஐயோ... மகளே... இன்னமே ..யாருடி என்னே வாய் நெறைய அம்மான்னு கூப்பிடப் போறது?"

"அக்கா என்ன விட்டுட்டுப் போவப் போறியா அக்கா...?"

"மகளே...... அப்பா... அப்பான்னு உயிரையே வச்சிருந்தியே...இப்ப அப்பாவை விட்டுட்டுப் போவ உனக்கு எப்படியம்மா மனசு வந்தது?"



எம்.ஏ. இளஞ்செல்வன்

"ஐயோ...மகளே...!"

"அக்கா..."

"ரெண்டு...! சரி இன்னும் ஒரு தடவை சுத்தினா போதும்"

ஃ ஃ ஃ

"பாலா...! ஒரே தடவை பாலா...! பிளீஸ்..."

"காசு கொண்டுட்டு வந்திருந்தா பேசு... இல்லன்னா பேசாதே..."

"பாலா...என் கை நடுங்குறதைப் பாரு...இந்த தடவை மட்டும் கடனா..."

"சேகர்...! இதுக்கு முன்ன வாங்கினதுக்கான கடனையே நீ இன்னும் "செட்டில்" பண்ணல. இனிமே காசில்லாம என்னால குடுக்க முடியாது"

"பிளீஸ் பாலா...பிளீஸ்...! உன் கால்ல வேணுன்னாலும் விழறேன். நீ குடுக்கலேனா நான் செத்தே போயிடுவேன்!"

"அப்படின்னா ஒன்னு செய்வியா?"

"ஒன்னு என்ன... என்ன வேணுன்னாலும் செய்யிறேன்.. ஆனா இல்லன்னு மட்டும் சொல்லிடாதே!"

"அப்போ...வா...உன் வீட்டுக்குப் போவோம். நீ போதும் போதுன்ற அளவுக்குக் குடுக்கிறேன்."

ஃ ஃ ஃ

போதும்...இங்கியே நிறுத்தச் சொல்லுங்க வண்டியை, இதுக்கு மேலே போக முடியாது...

பெட்டியைப் பிடிங்க...

மெதுவா இறக்குங்க...

நடுக் காட்டான்ல பெட்டியைத் திருப்பனுமில்ல...

ஆமா...ஆமா...திருப்புங்க...

சரி...மெதுவா வையுங்க...இப்படி....இப்படிமண்ணு சரிஞ்சிடப் போவுது...பார்த்து வையுங்க...

எங்கப் போயிட்டானுங்க... என்னடா பார்த்துக்கிட்டுப் பேசாம நிக்கறீங்க ...ஊம்... உங்க வேலையை ஆரம்பிங்க... மழை வரும்போல இருக்கு.

ஃ ஃ ஃ

"என்னங்க பார்த்துக்கிட்டுப் பேசாம இருக்கீங்க ... ஏங்க ... ஏங்க"

"சே... என்னைத் தொந்தரவு செய்யாதே ... நான் சொர்க்கத்துக்குப் போய்க்கிட்டிருக்கேன்"

"ஏங்க...இவனைப் பாருங்க!"

"அவன் பார்க்கமாட்டான். அவன் சுவைச்சி அனுபவிச்சிக்கிட்டிருக்கானே ... ...அதுக்கு விலையா...உன்னை..."

"சீ! நாயே!தொடாத என்னை"

"என்னடி பெரிய மகாராணி என்ற நெனைப்போ: சரிதான்... வாடி...!"

"ஐயோ...விடு...விடு"

ஃ ஃ ஃ

"விடுங்க கயித்த... மெதுவா இறக்குங்க ... யாருப்பா ... குழியிலே இறங்கி செய்யவேண்டியதைச் சீக்கிரமா செய்யப்பா...



ஹலோ ஆபத்து!

அமெரிக்காவிலுள்ள ஃப்புளோரிடா மாநிலத்தின் பிரதான சாலைகளில் ஆங்காங்கே வாகனமோட்டிகளின் சவுகரியத்துக்காக ஒரு பெட்டியை அமைத்திருக்கிறார்கள்.

அந்தப் பெட்டியில் போலீஸ், தீயணைப்பு நிலையம், மருத்துவமனை உதவிகளைப் பெற தனித்தனியே பொத்தான்கள் உண்டு. தற்செயலாக நடுச்சாலையில் தங்களுக்கு மேற்குறித்த சேவைகளில் ஏதேனும் தேவைப்பட்டால் வாகனமோட்டிகள் அதற்குரிய பொத்தானை அழுத்துகிறார்கள். அதிகப் பட்சம் 30 நிமிடங்களுக்குள் அவர்களுக்கு உதவி கிடைக்கிறது.

இந்தப் பெட்டியை ஒரு நாளைக்குச் சராசரி 200 தடவை வாகனமோட்டிகள் பயன்படுத்துகின்றனராம்.

-ஆதாரம் 'டைம்' சஞ்சிகை

அந்தக் கால்கட்டை அவிழ்த்திட்டியா?

முடிஞ்சதா...ஊஹூம்...பெட்டியை மூடாதே. எந்த ஊர் வழக்கம் பெட்டியை மூடறது?

வாங்க மண்ணு தள்ளுங்க...

மூணு தடவை தள்ளிட்டு கையை நனைச்சிக்கிட்டுத் திரும்பிப் பார்க்காமப் போகணும்.

கையை உதருதீங்க... போங்க...யாராவது இவரப் பிடிச்சிக்கிட்டுப் போங்க...

சரி... மண்ணைத் தள்றவங்க வந்து தள்ளுங்க...

இன்னும் யாரும் மண்ணுத் தள்றவங்க இருக்கீங்களா... வாங்க நேரமாவுது,

போப்பா...ஏன் நிக்கிறீங்க... போய்த் தள்ளுங்க...பாலா! பேசிக்கிட்டிருக்கியே, வாப்பா மண்ணு தள்ளலியா?

நான் முன்னையே தள்ளிட்டேங்க...

நீங்க இன்னும் தள்ளல போல இருக்கு...தள்ளிட்டேன்றீங்க?

அப்படித்தான் சொல்லணும். இல்லாட்டி கூப்பிட்டுக்கிட்டேயிருப்பாங்க...ஆமா...

ஃ ஃ ஃ

சரி...விருட்னு தள்ளுங்க மண்ணை. ஆளுக்கொரு மம்டியைப் பிடிங்க...

ஆச்சா...தோ! அந்தச் செடியைப் பிடுங்கிடப்பா...

சரி ..வாங்க...மழை இறங்கிக்கிட்டிருக்கு...

என்னப்பா பாலா கதை பெரிசா இருக்கு...வரலியா?

போய்க்கிட்டே இருங்க வந்திடறோம்.

நடுக்காட்டானில் துண்டை விரித்துச் சுருட்டுகளைக் கொட்டி ஆளுக்கொன்றாக எடுத்து பற்ற வைத்துக்கொண்டு, காசுகளை எண்ணி இடுகாட்டு வேலையாட்களுக்குக் கூலி கொடுத்துக் கொண்டிருந்தபோதுகூட, பூமியில் சொர்க்கத்தைத் தேடும் வழிகளைப் பாலா உபதேசித்துக் கொண்டிருந்தான்.

அடுத்து, சேற்றில் மிதிபடப் போவது எந்த ராணிச் சீட்டோ? ★

சிந்தையில் நிற்கும் சிவனடியார்கள்

சித்தாந்த வித்தகர் முரு பழ இரத்தினம் செட்டியார்

1. சேக்கிழார் பெருமான்

"திருத்தொண்டர் புராணம்" என்னும் பெரிய புராணத்தைப் பாடியவர் சேக்கிழார் பெருமான். அவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தொண்டை நாட்டில் உள்ள குன்றத்தூரில் அவர் பிறந்தார். அவர் வேளாளர் மரபில் உதித்தவர். அருள் மொழித் தேவர் என்பது அவர்க்குப் பெற்றோர்கள் இட்ட பெயராகும். திருநாகேச்சுவரத்தில் உள்ள திருக்கோயில் வழிபாட்டில் அவர் முனைந்து நின்றார்.

கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய சேக்கிழார் பெருமானை அக்காலத்தில் சோழநாட்டை ஆண்ட அநபாயச் சோழன் வரவழைத்து முதல் அமைச்சர் பதவியை அளித்தான். சேக்கிழாரின் மதிநுட்பமும் அரசியல் அறிவும் அரசனுக்குப் பேருவகை அளித்தன. அவன் அவரிடத்தே தனி மதிப்பு வைத்துப் பேரன்பு செலுத்தினான்.



சேக்கிழார் பெருமான்

சீவக சிந்தாமணி

அநபாயச் சோழன் சிறந்த கலா ரசிகன். அவன் காலத்தே திருத்தக்க தேவர் பாடிய "சீவக சிந்தாமணி" புலவர் உலகத்தைப் பெரிதும் கவர்ந்தது. சொற்சுவையும் பொருட் சுவையும் மிக்கதாக அது விளங்கியதால் அனைவரும் அதனைப் படித்து மிகவும் மகிழ்ந்தனர். தமிழில் முதன் முதல் விருத்தப் பாவில் பெருங் காவியம் பாடியவர் திருத்தக்க தேவரே ஆவார். அரசன் இக்காவியத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டான். அவன் அவைக்களத்தே இக்காவியத்தைப் புலவர் பலர் படித்துப் பொருள் சொல்லி வந்தனர்.

சீவக சிந்தாமணி மிகப் பெரிய காவியமாயினும் அது சமணக் கொள்கையைத் தமிழ் மக்களிடையே பரப்புவதற்காகப் பாடப்பெற்றதாகும். தமிழரின் தொன்மைச் சமயமாகிய சைவத்தை அது போற்றவில்லை. சைவ சமயக் கருத்துக்களைச் சொல்லாமல் சமணர்க் கொள்கைகளையே அது வன்மையாக எடுத்துக் கூறியிருக்கிறது. இதனால் அமைச்சராயிருந்த சேக்கிழாருக்கு அதில் ஈடுபாடு உண்டாகவில்லை.

சமண சமயம் கடவுள் ஒருவர் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. உலகம் தானே தோன்றியது என்பது அதன் கொள்கை. "அருகர் என்பவர் நல்லொழுக்கத்தின் மூலமும் ஆசையை வென்றதின் மூலமும் தூய ஒரு நிலையைப் பெற்றார். அவர் கடவுள் அல்லர். ஆனால் நம் அனைவர்க்கும் அவர் வழிகாட்டி; அவர் கூறிய-குறிக்கிற ஆகமத்தின் வழி நின்று நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தால் நாம் மாறாத ஒரு தூய நிலையை எய்தலாம்" எனச் சமணம் சொல்கிறது ஊழ் வினையை யாராலும் தடுக்க முடியாது. அதனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது அதன் தலையாய கொள்கை. கடவுள் வழிபாடு தேவை இல்லை என்றும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தால் போதும் என்றும் அது மக்களுக்குப் போதித்து வந்தது. கொல்லாமை அதன் தலையாய அறமாகும். எந்தச் சிற்றுயிரையும் மறந்தும்கூடக் கொல்லக்கூடாது என்பதைச் சமண முனிவர்கள் மிக நன்றாக எடுத்துக்கூறி வந்தனர். கொல்லாமையும் புலால் உண்ணாமையும் அவர்கள் நூற்களில் முக்கிய இடம் பெற்றன. சைவம் கொல்லாமையையும் புலாலுண்ணாமையையும் உடன்பட்டது; ஆனால் சமணர்கள் "கடவுள் வழிபாடு வேண்டாம்" எனக் கூறியதை அது வன்மையாக எதிர்த்தது.

கடவுள் வழிபாடு

எவ்வளவு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தாலும் கடவுள் வழிபாடு இல்லையேல் பயன் இல்லை. இதனாலேயே வள்ளுவர், "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்றும், "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்றும், "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்றும் கூறியிருக்கிறார். வெறும் நல்லொழுக்கத்தால் மட்டும் நாம் உயரிய நிலையை அடைய முடியாது. பேரறிவுப் பொருளாகிய இறைவனை அடைந்தால்தான் பேரின்பமும் தூய்மையும் அடைய முடியும். வழிபாடு இல்லாத ஒழுக்கம் தலையில்லாத முண்டம்போல உள்ளீடு இன்றிப் பயனற்ற முயற்சியாக முடியும். நல்லொழுக்கம் நமக்கு மிகவும் தேவை; ஆனால் கடவுள் வழிபாடுதான் அதன் பயனாக இருக்கவேண்டும். வழிபாடு இல்லையேல் நல்லொழுக்கம் நிலைக்காது. சோதனை வரும்போது ஊன்றிக்கொள்ளக் கடவுள் துணை வேண்டும். "நல்லொழுக்கமே போதும்" என நினைக்கின்ற மக்கள் சோதனை வரும்போது அதனைக் கடைப்பிடிக்க முடியாமல் நெகிழவிட்டுப் "போலி நியாயம்" பேசத் தலைப்படுவர். இதனாலேயே சைவம் கடவுள் வழிபாட்டைத் தன் தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது. நல்லொழுக்கத்தைக் கடவுள் வழிபாட்டோடு கடைப்பிடிக்க வேண்டும் எனச் சைவம் சொல்கிறது. கடவுள் வழிபாட்டையும் பக்தியையும் பரப்பாத சீவகசிந்தாமணிக் காவியம் தமிழ் உலகிற்கு நன்மையை விளைவிக்காது எனச் சேக்கிழார் பெருமான் கருதினார்.

ஒருநாள் சோழ அரசனிடம் சேக்கிழார் பெருமான் சீவகசிந்தாமணி தமிழ் மக்களுக்கு நன்மையை விளைவிக்காது என்று கூறினார். அது கேட்ட அரசன், "நன்மையை விளைவிக்கும் வேறு

காவியம் உண்டா? அதனைக் கூறுக" என்று வேண்டினான். "தேவாரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என ஒரு திருப்பதிகம் செய்துள்ளார். அதற்குத் "திருத்தொண்டத் தொகை" என்று பெயர். அதில் நாயன்மார் 60 பேர்பற்றிய விவரம் வருகிறது. நம்பியாண்டார் நம்பி அத்திருத்தொண்டத் தொகையில் வரும் 60 பேருடன் சுந்தரரையும் அவர் தாய் தந்தையர் இருவரையும் சேர்த்து 63 பேர் பற்றிச் சிறிது விரிவாக ஓர் அந்தாதி செய்தார். அந்த அந்தாதியின் துணை பற்றி 63 நாயன்மார் வரலாற்றை நான் உங்களுக்குக் கூறுகிறேன்."எனச் சேக்கிழார் சொல்லி நாயன்மார் அறுபத்துமூவர் வரலாற்றையும் விரிவாக விளக்கினார். இதைக் கேட்ட அரசன் உளம் பூரித்து "இவ்வரலாறுகளைச் சொற்சுவை பொருட்சுவை ததும்ப நீவிரே ஒரு காவியமாகச் செய்து தரவேண்டும்; அதற்கு வேண்டும் பொருளும் உதவியும் நான் தருகிறேன்." என்று சொன்னான். சேக்கிழார் தில்லையம்பதி சென்று, பெரிய புராணம் பாடத் தொடங்கினார்.

"எவ்வாறு புராணத்தைப் பாடத் துவங்குவது?" என எண்ணி நடராசப் பெருமான் திருமுன் நின்றார். "உலகெலாம்" என ஓர் அடி அசரீரியாக எழுந்தது. நடராசர் எடுத்துக்கொடுத்த அவ்வடியையே முதலாகக்கொண்டு பெரிய புராண காவியத்தைச் சேக்கிழார் பெருமான் பாடி நிறைவு செய்தார். அரசன் அவரை யானை மீதேற்றி உபசாரம் செய்து பெரிய புராணத்தை அரங்கேற்றச் செய்தான். சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவது திருமுறையாக அஃது இடம் பெற்றது. ★



15 நாள் பலன்

மார்ச் 27 முதல் ஏப்ரல் 10 வரை

மேஷம் (மார்ச் 21 - ஏப்ரல் 20



உங்களுக்குப் பெரியோர்களின் ஆலோசனைகளும் உதவியும் கிடைக்கும். தொழிலில் பங்காளிகளுடன் சிறிது கருத்து வேறுபாடு எழும். காதல் விவகாரத்தில் தோல்வி ஏற்படலாம். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருங்கள். எதிலும் முதலீடு செய்யும் திட்டத்தை ஒத்தி வைத்தல் நல்லது. பழைய நண்பர்களின் உதவி கிடைக்கும்,

நல்ல நாட்கள் 30, 1,3, 8.

எச்சரிக்கை நாட்கள் 27, 31.

ரிஷபம் (ஏப் 21 - மே 20)



வியாபாரம் தொடங்குவதற்கு ஏற்ற நாட்கள் இவை. பெரியோர்களின் உதவி கிடைக்கும் என்றாலும் அதன் பலன் சிறிது நாட்களுக்குப் பின்னரே தெரியும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குறிப்பாகப் பெற்றோர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பணச் செலவு அதிகமாகும். பண விஷயத்தில் யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம்.

நல்ல நாட்கள் 27, 1, 5, 10.
எச்சரிக்கை நாட்கள் 31, 4, 7.

மிதுனம் (மே 21 - ஜூன் 20)



நண்பர்களில் பெரும்பாலோர் உங்களுடன் ஒத்துப்போவது மட்டுமன்றி உதவியும் செய்வார்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாகனப் பயணங்களிலும், இயந்திரங்களில் வேலை செய்யும் போதும் எச்சரிக்கை அவசியம். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும் சாத்தியம் உண்டு. உணர்ச்சி வசப்பட்டு எதையும் பேசவோ செய்யவோ முயலாதீர்கள்.

நல்ல நாட்கள் 28, 2, 4, 5.
எச்சரிக்கை நாட்கள் 27, 31.

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)



உங்களுக்குப் பணத் தட்டுப்பாடு அவ்வளவாக இராது. பயிற்சியும் அனுபவமும் இல்லாதவற்றில் ஈடுபட்டுத் தொல்லையை விலைக்கு வாங்காதீர்கள். கடிதப் போக்குவரத்து மூலம் சில நன்மைகள் உண்டு. குடும்பத்தில் கடும் வாக்குவாதம் ஏற்படலாம். அப்போது அமைதியைக் கடைப்பிடித்தால் அனுகூலமாகும். எதிலும் கையெழுத்திடுவதில் கவனம் தேவை. புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

நல்ல நாட்கள் 28, 2, 7, 9.
எச்சரிக்கை நாட்கள் 3, 5.

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)



வழக்கத்திற்கும் அதிகமாகவே நீங்கள் உழைக்க வேண்டியிருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமையைப் பாராட்டுவர். . அங்கீகரிப்பர். இயந்திரத்தோடு தொடர்புடைய வேலை செய்பவர்கள் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். அதிகமான உழைப்பால் உடல் நிலை பாதிக்கலாம். ஆனாலும் உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும்.

நல்ல நாட்கள் 28, 29, 4, 8.
எச்சரிக்கை நாட்கள் 31,2,5.

கன்னி (ஆக 22 - செப் 22)



கடைசி 10 நாட்களிலும் உங்களுக்கு மிக அதிகமான வேலைப் பளு ஏற்படும். செய்யும் தொழிலில் திருப்தி இல்லாமலும் போகலாம். என்றாலும் எந்த மாற்றத்தையும் செய்ய உங்களுக்கு ஏற்ற தருணம் இது வல்ல. மேலதிகாரி, நண்பர்கள், அனைவரிடமும் பேசும்போதும் பழகும்போதும் அதிகப் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.

நல்ல நாட்கள் 6, 8, 10.
எச்சரிக்கை நாட்கள் 29, 31.

துலாம் (செப் 23 - அக் 22)



நீங்கள் பொருளாதாரத்தைப் பெருக்கும் வழிகளில் ஈடுபடுவீர்கள். வழக்கம்போல் நல்லவையாக அமையும். உங்கள் தீர்ப்புகள் மற்றவர்களுக்கு ஏற்புடையதாக அமையா. எனவே முடிவு எடுக்கும் போது கவனம் தேவை, பெரியோர்களின் சந்திப்பு பயனை நல்கும். அநாவசியமான செலவுகளைத் தவிர்க்கவும்.

நல்ல நாட்கள் 4, 6, 8.
எச்சரிக்கை நாட்கள் 29, 1.

விருச்சிகம் (அக் 23 - நவ 22)



அனாவசியமான செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். கலைத் துறை சம்பந்தப்பட்ட வேலைகளில் வெற்றி கிட்டும். ஜலதோஷம் உள்ளவர்களிடமிருந்து விலகி இருங்கள். உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு அது நல்லது. அவசரப்பட்டு எந்த முடிவுகளையும் செய்யாதீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள் 29, 4, 5, 9.
எச்சரிக்கை நாட்கள் 6,7,10.

தனுசு (நவ 23 - டிச 20)



குடும்பத்தில் நல்லவை மிகும். நன்கு சிந்திக்காது எந்த முடிவையும் செய்யாதீர்கள். பெரியோர்களின் புத்திமதியைக் கேட்பது நல்லது. பண வரவுக்கு வழியுண்டு. வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருங்கள். நீங்கள் பந்தயம் மற்றும் சூதாட்டங்களில் விருப்பம் உள்ளவர்களாக இருந்தால் அந்தப் பக்கம் தலை வைக்காதீர்கள். உங்கள் பணம் தான் போகும். நல்ல நாட்கள் 17.

நல்ல நாட்கள் 29, 30, 2, 5, 7.
எச்சரிக்கை நாட்கள் 6, 8, 9.

மகரம் (டிச 21 - ஜன 19)



மேலதிகாரிகளின் உறவு நல்லபடி இருக்கும், வியாபாரிகளுக்கு நன்மைதரும் சூழ்நிலை உண்டு. உங்கள் ஊகங்கள் தவறானவை ஆகிவிடக்கூடும். அனாவசியச் செலவுகளைத் தவிர்க்கவும். கூட்டு முயற்சிகள் பலன் தரும். எதிலும் ஓர் அசாத்திய துணிச்சல் உங்களுக்கு ஏற்படும். சில்லறை விஷயங்களுக்காக வாக்குவாதம் செய்வதை விட்டு விடுங்கள்.

நல்ல நாட்கள் 30, 6, 9.
எச்சரிக்கை நாட்கள் 5, 8.

கும்பம் (ஜன 20 - பிப் 18)



நண்பர்களின் உதவி கிட்டும் என்று நம்பாதீர்கள். பண வரவுக்கான சூழ்நிலை ஏற்படும். உடல் உழைப்பைவிட அறிவின் உழைப்பு அதிகம் பலன் தரும். மேலதிகாரிகள் உங்களிடம் இணக்கமாக இருப்பார்கள். குடும்பத்தின் சூழ்நிலை நன்றாக இருக்கும் என்றாலும் குறிப்பிடத்தக்கபடி ஒன்றுமில்லை. துணிமணிகள் போன்றவற்றை வாங்கும் வாய்ப்புண்டு என்பதற்காக அனாவசியச் செலவு செய்யாதீர்கள்.

நல்ல நாட்கள் 29, 31, 4, 6.
எச்சரிக்கை நாட்கள் 3, 5, 8.

மீனம் (பிப். 19-மார்ச் 20)



உத்தியோகத்தில் வெறுப்பு ஏற்படலாம். சிரமமும் உண்டாகலாம். அதற்காக அதை விட்டு விட்டால் பிறகு உங்களுக்கு வேறு வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிடும். கவர்ச்சியாகப் பேசுவோரிடம் ஏமாந்து போகாதீர்கள். மீன ராசிப் பெண்களுக்குத் திருமணம் நிச்சயிக்கவோ செய்யவோ ஏற்ற தருணம் இது.

நல்ல நாட்கள் 31, 4, 9, 10.
எச்சரிக்கை நாட்கள் 3, 6, 8.

—தஞ்சை நகுலன்

கிளியோபாத்ராவின் ஸ்டுடியோ விஜயம்



'மனோரஞ்சிதம்' படத்தில் கிளியோபாத்ரா பாத்திரத்தில் ஒய். விஜயா.

முரளி கிருஷ்ணா புரொடக்ஷன்ஸார் மிகவும் துரிதமாகத் தயாரித்து வரும் "மனோரஞ்சிதம்" படப்பிடிப்பு சென்னை வாகினி ஸ்டுடியோவில் நடைபெற்றுக்கொண்டிருந்தது! அன்றைய படப்பிடிப்பில் விஜயகுமார், ஒய். விஜயா, எம். என். ராஜம் ஆகியவர்கள் கலந்துகொண்டனர். டைரக்டர் கோவி. மணிசேகரன் விஜயகுமாருக்கும், எம்.என் ராஜத்திற்கும் எடுக்கப்பட இருக்கும் காட்சியைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். வழக்கம்போல் மற்ற தொழில் நுட்பக் கலைஞர்களும், பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் அங்கே கூடியிருந்தார்கள்!......

அப்போது திடீரென்று கிளியோபாத்ரா வேடத்தில் ஓர் நடிகை செட்டிற்குள் நுழைந்தார் ஒருகணம்!......அனைவரும் திகைத்து நின்றனர்! ஏன் டைரக்டர் உட்பட! இப்படப் பிடிப்பில் சம்பந்தப்படாதவர்கள் அந்த நடிகை யார் என்று தெரியாமல் திகைத்தனர். நடை, உடை, முகச்சாயல் அத்தனையும் பார்த்ததும் எலிசபெத் டெய்லர் நினைவுதான் அனைவருக்கும் வந்தது! ஆனால் அவர் அயல்நாட்டு நடிகையாக நிச்சயம் இருக்கமுடியாது.

பின் யார் அந்த நடிகை? பக்கத்தில் நடைபெறும் இந்திப் படசெட்டிலிருந்து யாரோ வட இந்திய நட்சத்திரம் படப்பிடிப்பைக் காண வந்திருக்கிறார் என்பதுதான் அங்குள்ள பலபேருடைய அபிப்பிராயம். படப்பிடிப்பு நடைபெறும் இடத்தை மறந்து எல்லோருடைய கவனமும் "கிளியோபாத்ரா"விடமே இருந்தது. "என்ன சார்! என்னை அடையாளம் தெரியவில்லையா?" என்று கூறியதும், குரலைக் கேட்டு ஒய். விஜயா என்ற நினைவு அனைவருக்கும் வந்தது.

ஒய். விஜயாவுக்கு, கிளியோபாத்ரா வேடப் பொருத்தம் அவ்வளவு கச்சிதமாக அமைந்துவிட்டது குறித்து அனைவரும் அசந்துபோய்விட்டனர். படத்திலும், அவருடைய பாத்திரப் படைப்பின் பெயர் கிளியோபாத்ரா! அந்தப் பெண் தன்னுடைய பெயரை கிளியோபாத்ரா என்று வைத்துக்கொண்டு அதோடு நின்றுவிடாமல் நடை, உடை, பாவனைகள் அனைத்துமே கிளியோபாத்ரா சாயலில் இருப்பதுபோல் அந்தப் பாத்திரத்தைச் சிருஷ்டித்திருக்கிறார் கதாசிரியர் கோவி. மணிசேகரன்.

தமிழ்த் திரையுலகில் இன்றுள்ள இளம் புதிய நடிகைகள் வரிசையில் கலை ஆர்வத்தால் நடிப்பில் துரித முன்னேற்றம் கண்டுள்ளவர் ஒய். விஜயா. இப்படத்தில் வரும் கதாபாத்திரங்களுக்கேற்ப நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

இப்படத்தின் ஆரம்ப விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் பெங்களூரிலிருந்து வரவழைக்கப்பட்ட மனோரஞ்சிதம் மலர் வழங்கப்பட்டது.



எந்தப் பற்பசை விளம்பரத்திற்காக இப்படிப் பல்லைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்?
"அந்தரங்க"த்தில் தீபா—கமலஹாசன்
(பாத்திமா பிலிம்ஸ் வெளியீடு)

படச் செய்திகள்

பத்ரகாளி

இப்பொழுது தமிழகத்தில் திரையிடப்பட்டிருக்கும் "பத்ரகாளி" படத்தின் கதாநாயகி ராணி சந்திரா, காயத்ரி என்ற பெயரில் அந்தப் படத்தில் நடித்திருக்கிருர். படத்தின் கதாநாயகியின் பெயரும் காயத்ரி தான்! அண்மையில் பம்பாய் விமான நிலையத்தில் நடைபெற்ற விமான விபத்தில் ராணி சந்திரா பலியாகிவிட்டார்! அவரைப் போலவே சாயலுள்ள புஷ்பா என்ற நடிகையைத் தேர்ந்தெடுத்து, ராணி சந்திரா நடிக்கவேண்டிய மற்ற காட்சிகளைத் திறமையுடன் படமாக்கி வெளியிட்டிருக்கின்ருர் அந்தப் படத்தின் டைரக்டரும், தயாரிப்பாளருமான ஏ.சி. திருலோக சந்தர்!

சுறுசுறுப்பான டைரக்டர்

தமிழ்த் திரையுலகிலே இன்று மிகவும் சுறுசுறுப்பான டைரக்டராக விளங்கிவருபவர் எஸ். பி. முத்துராமன் ஆவார்! சுறுசுறுப்பான டைரக்டர் மட்டுமல்ல இவர்! தொடர்ந்து வெற்றிப் படங்களை அளித்துவரும் டைரக்டராகவும் விளங்கி வருகிருர். சென்ற ஆண்டில் இவர் டைரக்ட் செய்து வெளிவந்துள்ள படங்கள் ஐந்து! அவை: "துணிவே துணை", "ஒரு கொடியில் இரு மலர்கள்", "காலங்களில் அவள் வசந்தம்", "ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது". "மோகம் முப்பது வருஷம்".

'பிசி' நடிகை

நடிகைகளிலே இன்று மிகவும் பிசி நடிகை ஸ்ரீ பிரியா! இப்பொழுது அவருக்குப் பல படங்கள்! "ஒளிமயமான எதிர்காலம்", "நவரத்தினம்", "பாலாபிஷேகம்", "வாழ நினைத்தால் வாழலாம்", "புண்ணியம் செய்தவள்", "சொந்தமடி நீ எனக்கு", பி.வி.டி. புரொடக்ஷன்ஸ் புதிய வண்ணப் படம் போன்ற பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கின்ருர்! இவர், சென்னை சாந்தோம் கடற்கரை ஓரத்தில் புதிதாகக் கட்டி குடிபுகுந்திருக்கும் அந்த நட்சத்திரப் பங்களாவை மிகவும் ராசியானதாக நினைக்கிருர். ஏனெனில் இவர் அந்த வீட்டிற்குப் போனபிறகுதான் இவருக்குப் பட ஒப்பந்தங்கள் அதிகமாயிருக்கின்றனவாம்.

வேறு எந்த நடிகையும் இப்படி ஓர் அருமையான இடத்தைத் தேர்ந்தெடுத்து இப்படி ஒரு வீட்டைக் கட்டவில்லை! அவருடைய வீட்டின் மாடியில் நின்றுபார்த்தால் வங்கக்கடலின் அழகையெல்லாம் ரசித்து மகிழலாம்! மேலும் மேலும் அலைகள் ஓடிவந்து கரையை முத்தமிட்டுச் செல்லுங் காட்சியையும், பவுர்ணமி தினத்தன்று கடலின் அடித்தளத்திலிருந்து புறப்படும் முழுமதியையும் கண்டு மகிழலாம்!

சிலநேரங்களில் சில மனிதர்கள்

ஜெயகாந்தனின் "சில நேரங்களில் சில மனிதர்கள்" விரைவில் திரையிடப்படவிருக்கிறது. இப்படத்தில் லட்சுமியும் ஸ்ரீகாந்தும் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளனர்.

இப்படத்தை பாத்திமா பிலிம்ஸ் மலேசியாவில் வெளியிடுகிறது.



கன்னத்திலே பள்ளம் விழுந்தால் எண்ணத்திலே கள்ளமில்லையோ!
கள்ளமில்லாததால்தான் திரை 'சான்ஸ்' குவிகின்றதோ!
'பேர் சொல்ல ஒரு பிள்ளை' படத்தில் 'பிஸி' நடிகை ஸ்ரீ பிரியா.

"இன்றிரவு நான் தர்மம் செய்வேன்" என்று கூறி ஒருவர் தாம் தர்மம் செய்ய விரும்பும் பொருளை எடுத்துச் சென்று ஒரு கள்வனின் கையில் கொடுத்துவிட்டார்.

காலையில் மக்கள், இரவு கள்வனுக்குத் தர்மம் வழங்கப்பட்டிருப்பதாகப் பேசிக்கொண்டனர்.

அப்பொழுது அவர், "இறைவனே எல்லாப் புகழும் உனக்கே உரியது. (என்னுடைய தர்மம்) ஒரு கள்வனுக்குக் கிடைத்ததற்காக" என்று கூறி (மேலும் இன்றிரவும்) "தர்மம் செய்வேன்" என்று கூறினார்.

பின்னர் தாம் தர்மம் செய்ய விரும்பும் பொருளை எடுத்துச் சென்று ஒரு விபசாரியின் கையில் கொடுத்துவிட்டார்.

காலையில் மக்கள் இரவு விபசாரிக்குத் தர்மம் வழங்கப்பட்டது என்று பேசிக்கொண்டனர்.

அப்பொழுது அவர், "இறைவனே! எல்லாப் புகழும் உனக்கே உரியது. (என்னுடைய தர்மம்) ஒரு கள்வனுக்கும் ஒரு விபசாரிக்கும் கிடைத்ததற்காக" என்று கூறி (மேலும் "இன்றிரவும்) தர்மம் செய்வேன்" என்று கூறினார்.

பின்னர் தாம் தர்மம் செய்ய விரும்பும் பொருளை எடுத்துச் சென்று ஒரு செல்வந்தரின் கையில் கொடுத்துவிட்டார்.

காலையில் மக்கள், இரவு செல்வந்தருக்குத் தர்மம் வழங்கப்பட்டது என்று பேசிக்கொண்டனர்.

அப்பொழுது அவர், "இறைவனே எல்லாப் புகழும் உனக்கே உரியது. (என்னுடைய தர்மம்) ஒரு கள்வனுக்கும் ஒரு விபசாரிக்கும் ஒரு செல்வந்தருக்கும்

தர்மம்

கிடைத்ததற்காக" என்று கூறினார்.

எனவே அவருக்கு "நீர் செய்த தர்மங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்டன. நீர் கள்வனுக்கு வழங்கிய தர்மத்தால் அவன் தன் களவுத் தொழிலைக் கைவிட்டுவிடக்கூடும் என்பதாலும் விபசாரிக்கு வழங்கிய தர்மத்தால் அவள் தன் விபசாரத்தைக் கைவிட்டுவிடக்கூடும் என்பதாலும் செல்வந்தருக்கு வழங்கப்பட்ட தர்மத்தால் அவர் தமக்கு அல்லாஹ் அளித்த பொருளிலிருந்து தாமும் தர்மம் வழங்க வேண்டுமென்ற உணர்வு எழக் காரணமாக இருப்பதாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது" என்று (அவர் காலத்திலிருந்த தூதர் மூலம்) அறிவிக்கப்பட்டதாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

— அல்ஹதீஸ்

ஒருவர்: அந்த இரண்டு பையன்களும் அண்ணன் தம்பி போலிருக்கு! இருவரும் ஒரேமாதிரி சிலுவாரும் சட்டையும் போட்டிருக்கிறார்களே!


மற்றவர்: அண்ணன் தம்பியா? தப்பு! தப்பு! வலப்பக்கம் போறது புருஷன்! இடப்பக்கம் மனைவி!



எல்லாப் பிள்ளைகளுக்கும் நாசிலெமா

பத்தாங் பர்சுந்தை தமிழ்ப்பள்ளி வழி காட்டுகிறது!

~மஞ்சரி~



கடந்த ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து நவம்பர் 12 வரை பத்தாங்பெர்சுந்தை கூட்டுத் தமிழ்ப் பள்ளியில் மாணவர்களின் வருகை குறிப்பிடத்தக்க அளவு கூடியது. அது மட்டுமா? "சார், எனக்கு மயக்கம் வருகிறது; வயிறு வலிக்கிறது; களைப்பாய் இருக்கிறது" என்று அதற்கு முந்திய காலத்தில் மாணவர்களிடையே எழும்பி வந்த புகார்களும் அறவே மறைந்து விட்டன. "எப்போது வகுப்பு முடியும். வீடு திரும்பலாம். காலி வயிற்றை நிரப்பலாம்" என்ற தவிப்பும் அப் பள்ளி மாணவர்களிடமிருந்து மேற்குறித்த நாட்களில் பறந்தோடி இருந்தது.

இத்தகைய நல்ல விளைவுகள் அவர்களிடையே ஏற்படக் காரணம் அரசாங்கம் அக்டோபரில் மேற்கொண்டிருந்த பரீட்சார்த்த சத்துணவுத் திட்டம் தான். அத் திட்டத்தின் கீழ் அந்தப் பள்ளியில் பயிலும் 69 மாணவர்களுக்கும் அக்டோப 1 முதல் நவம்பர் 12 வரையிலு முள்ள 30 பள்ளி நாட்களி "நாசிலெமா" கிடைத்தது.

கெடா, கிளந்தான், பகாங் பேரா, சிலாங்கூர், திரெங்கானு முதலிய ஆறு மாநிலங்களி உள்ள பாடாங்தெராட [கெடா], பாசிர்மாஸ், தா மேரா, தும்பாட் [கிளந்தான்] ஜெரண்டுட், லிப்பிஸ் [பகாங்], செலாமா (பேரா), கோலசிலாங்கூர், உலுசிலாங்கூர் (சிலாங்கூர்), கோலதிரெங்கானு, உலு திரெங்கானு [திரெங்கானு] ஆகிய 11 மாவட்டங்களிலும் கல்வியமைச்சு இந்தப் பரீட்சார்த்த சத்துணவுத் திட்டத்தை மேற்கொண்டது. இதன்மூலம் அந்த மாவட்டங்களில் உள்ள எல்லா தமிழ், சீனம், மலாய் ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் முதல் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் 2 முதல் 6-ம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களில் 25 சதவிகிதம் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் இலவசமாக நாசிலெமா வழங்கியது. இதனால் மொத்தம் 474 பள்ளிகளைச் சேர்ந்த 49,727 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக அரசாங்கத்திற்கு சுமார் $3 லட்சம் செலவாகியது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட மூராட் அறிக்கையின் பலனாக உண்டான நன்மைகளில் இதுவும் ஒன்று. இந்த (1977-ம்) ஆண்டில் மேலும் பதினேழு மாவட்டங்களில் இத்திட்டத்தை அமுலாக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. அவை எந்த எந்த மாநிலத்தைச் சேர்ந்த எங்கெந்த மாவட்டங்கள் என்பது இன்னும் தெரியவில்லை.

60 பிள்ளைகளுக்கு ஒரு கந்தம் அரிசி, ஒரு கட்டி நெத்திலி [அல்லது 20 முட்டை] 2 தேங்காய் என்பது அரசாங்கத்தின் கணக்கு. இந்தக் கணக்கின்படி ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்குப் பத்துக் காசு செலவாகிறது.

பெரும் பொறுப்பு

முதல் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் மற்ற வகுப்பு மாணவர்களில் 25 சதவிகிதத்தினருக்கும் என்னும் கொள்கைபடி பத்தாங் பெர்சுந்தை கூட்டுத் தமிழ்ப் பள்ளியின் மொத்த மாணவர்கள் 690 பேரில் 270 மாணவர்களுக்கே அரசாங்கத்தின் நாசிலெமா உதவி கிடைத்தது. இதர 420 மாணவர்களுக்கும் நாசிலெமா வழங்கும் பெரும் பொறுப்பை அந்தப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொண்டது. இதனால் சங்கத்திற்கு எற்பட்ட செலவு ஒரு வெள்ளி இரண்டு வெள்ளி அல்ல. சுமார் $1,300 ஆகும்.

ஒரு பெற்றோர் ஆசிரியர் சங்கம் குறிப்பாகத் தமிழ்ப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கும் அரசாங்கத்தின் கல்வித் துறை சம்பந்தப்பட்ட கொள்கைகளை நிறைவேற்ற எவ்வகையில் அது உதவலாம் என்பதற்கும் பத்தாங் பெர்சுந்தை தமிழ்ப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் அந்தப் பள்ளியின் ஆசிரியர்களும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

பிரச்னைகள்

இத் திட்டத்தை மேற்கொண்ட நாட்களில் சில பிரச்னைகளையும் தாங்கள் எதிர்நோக்கியதாகப் பள்ளியின்



நாசிலெமா பரிமாறிவிட்டு மாணவியிடம் "போதுமா, இன்னும் வேண்டுமா?" என்று கேட்கிறார் போலிருக்கிறது ஆசிரியை மு. தேவகி.

தலைமையாசிரியர் திரு. க. நடராஜனும் பெ. ஆ. ச. தலைவர் திரு. மு. முனியாண்டியும் கூறுகின்றனர்.

"தோட்டக்காரருக்கும் பள்ளியைச் சுத்தப்படுத்தும் பணியாளுக்கும் நாசிலெமா சமைப்பதிலும் பிள்ளைகள் சாப்பிட்டவுடன் பாத்திரங்களைச் சுத்தப்படுத்துவதிலுமே நேரம் போய் விடுகிறது. இதனால் வழக்கமான அவர்களின் பணிகள் முடங்கி விடுகின்றன. ஆசிரியர்களுக்கும் ஓய்வில்லாமல் போகிறது. தினமும் 12 கந்தம் அரிசியில் நாசிலெமா செய்வது என்ன லேசுபட்ட காரியமா?" என்கிறார் திரு. க. நடராஜா.

ஒரு பள்ளியின் மாணவர்களில் சிலருக்கு மட்டும் நாசிலெமா வழங்குவது என்னும் திட்டத்தை மாற்றி எல்லாருக்கும் வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று பெ. ஆ. ச. தலைவர் முனியாண்டி கூறுகிறார். "இப்படி அரசாங்கம் செய்து விட்டால் தோட்டக்காரர் போன்ற மற்றவர்கள் செய்யும் சமையல் பொறுப்பை சங்கம் தனது செலவில் நடத்த முடியும். ஒவ்வொரு மாதத்திற்கும் நாங்கள் $1,300 நன்கொடை திரட்ட முடியாது, இது அல்லாமல் நோட்டுப் புத்தகம், காலணி, சீருடை போன்ற உதவிகளை கடந்த ஆண்டுகளை போல் இந்த ஆண்டு எங்களால் செய்ய இயலாது போய் விட்டது, சமையல் வேலை குறைய நாசிலெமாவுடன் தயாரிக்கப் பட்ட உணவுகள், பாசிப் பயறு, ஓட்ஸ் கஞ்சி போன்றவற்றை மாற்றி மாற்றி வழங்கலாம். பெரிய பள்ளிகளில் தோட்டக்காரர் இருப்பார். சமைக்க உதவுவார். ஆனால் சிறிய பள்ளிகளில் ஆசிரியர் அல்லது ஆசிரியைகள் தாம் சமைத்தாக வேண்டும். இதனால் வகுப்பை நடத்துவதில் சிக்கல் ஏற்படலாம் அல்லவா" என்று திரு. முனியாண்டி கேட்டார்.



"நாசிலெமா சாப்பிட்டு விட்டாயா? இனி நன்றாகப் படிக்க வேண்டும் தெரியுமா?" என்று பள்ளியின் நிர்வாக வாரியத் தலைவரான -கோலசிலாங்கூர் மாவட்ட துணை அதிகாரி மாணவனுக்கு அறிவுரை கூறுகிறாரோ! பக்கத்தில் தலைமை ஆசிரியர் திரு. க. நடராஜன், இடக்கோடியில் பெ. ஆ. சங்கத் தலைவர் திரு. மு. முனியாண்டி.

மொத்தத்தில் சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம்தான். அனுபவத்தில் ஏற்பட்டுள்ள மேற்குறித்த பிரச்னைகள் தீர்க்கப்படுமானால் மேலும் மிக மிக நல்ல திட்டமாக அது விளங்குமல்லவா?



வட்டியும் முதலுமாகச் சேர்த்து நானூற்று இருபது வெள்ளி. எத்தனையோ முறை தவணை சொல்லியாயிற்று; கடன் கொடுத்தவர் வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசிவிட்டார். இன்று கட்டியே தீர வேண்டும். எங்கெங்கோ அலைந்து எவரெவரையோ கேட்டுப் பார்த்தும் பணத்திற்கு வழியில்லை. இராகவனுக்குத் தலை சுழன்றது.

தடுமாற்றத்தோடு நடந்து கொண்டிருந்தவன் "சட்"டென்று நின்றான். காலடியில் ஒரு பணப்பை கிடந்தது; எடுத்துத் திறந்தான். சிவப்பு நோட்டுக்கள், யாரோ ஒருவரின் அடையாள அட்டை, ஒரு கடிதம். எண்ணிப் பார்த்தான்; சரியாக ஐநூறு வெள்ளி. அவனுக்கு மகிழ்ச்சி கரை புரண்டது.

பணத்தைக் கால் சட்டைப் பையில் திணிக்கப் போனவனை அவன் மனச்சாட்சி தடுத்து நிறுத்தியது. "பணம் இல்லாததனால் இத்தனை நாட்கள் நீ எவ்வளவு வேதனைப்பட்டாய்! இருந்த பணத்தை இழந்தவர், அதை விட அதிகமாக அல்லவா வேதனைப் பட்டுக்கொண்டிருப்பார்! எந்த முக்கியமான செலவுக்காக வைத்திருந்தாரோ, யாரிடம் கடனை வாங்கி வந்தாரோ? அதை நினைத்துப்பார்! உடனே போ! அவரைக் கண்டுபிடித்து பணத்தைக் கொடுத்துவிடு! நேர்மையைக் கடைப்பிடி! உத்தமனாக நடந்து காட்டு!"

இராகவன் உறுதி பூண்டான். "விறுவிறு" வென்று நடந்தான். கடன் கொடுத்தவரின் வீட்டுக்குச் சென்றான்; நானூற்று இருபது வெள்ளியைக் கொடுத்துக் கடனைத் தீர்த்துவிட்டு எண்பது வெள்ளியோடு நிம்மதியாக வீட்டுக்குத் திரும்பினான்.

—பொடியன்

சமுதாயம் வாழ்த்துகிறது

தோட்டத் தொழிற்சங்கத்தின் வாழ்த்து

வெளிவரவிருக்கும் புதிய சமுதாயத்திற்கு எமது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள் உரியதாகுக.

சமுதாயச் சீரமைப்பு, வறுமை ஒழிப்பு, மக்களுக்குத் தரமான வாழ்க்கையைத் தருதல் ஆகிய குறிக்கோள்களுடன் தங்களது புதிய சமுதாய இதழ் வெளிவரவுள்ளதை அறிந்து மகிழ்கிறோம்.

தரமான குடும்பப் பத்திரிகைகள் இன்று நமது சமுதாயத்திற்கு மிக மிகத் தேவையான ஒன்றாகும். பயனுள்ள வகையில் நடத்தப்படும் பத்திரிகை மக்களிடையே நல்ல செல்வாக்கினைப் பெறும் என்பதில் அணுவளவும் ஐயம் கிடையாது.

பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவமிக்க தாங்கள் முன்னின்று நடத்தும் இவ்விதழ் நல்வெற்றியை அடைய வேண்டும் என வாழ்த்துகிறோம்.

ஜி. பெருமாள்

இடைக்காலப் பொதுச் செயலாளர்

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம்.

எழுத்தாளர் தலைவரின் நம்பிக்கை

மலேசிய இந்திய சமுதாயம் இப்போதுதான் நீண்ட உறக்கத்திலிருந்து சிறிது விழித்திருக்கின்றது. அது மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்துவிடாதபடி கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் சமுதாயத்தின் முன்வரிசையில் நிற்போருடையதாகும். முழுமையாக உறக்கம் தெளியாத சமுதாயத்திற்கு மெழுகுவர்த்தியைப் போல் தியாகத்தீயில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டேனும் வழிகாட்டித் துணையாகும் திரு. முருகுபோல் ஒரு சிலரேனும் இருப்பதில் ஆறுதல் கொள்ள முடிகின்றது. திரு. முருகுவின் பொறுப்பில் "புதிய சமுதாயம்" உருவாகின்றது என்பதை அறியும்போது நம்பிக்கை ஒளி சுடர் விடுகின்றது. நமது மலேசியத் திருநாட்டில் உதயமாகும் புதிய சமுதாயத்திற்குப் "புதிய சமுதாயம்" நல்வழிகாட்டியாக அமைய மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

சி. வடிவேல்

தலைவர், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

பத்திரிகை விற்பனையாளர் சங்கத்தின் வாழ்த்து

"புதிய சமுதாயம்" என்ற பெயரைத் தாங்கி நமது மலேசிய நாட்டிலே நலிந்து, மெலிந்து வரண்டு வாடிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பிப் பல்வகையிலும் சிந்திக்கச் செய்யவும் திறமையுடன் உழைத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வசதியற்றோருக்கு உதவி செய்யவும் நாட்டுக்கும் நல்லாட்சிக்கும் தனது கடமை என்னும் பங்கைச் செய்யவும், சிவகாமி பெற்ற செல்வன் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் தமிழ்க் காவலர் பொன்விழாக் கண்ட பெருமகனாரை ஆசிரியராகக் கொண்டு மாதமிருமுறை மலர்ந்து நாடுநகர் மூலை முடுக்கு பட்டி தொட்டிகளெல்லாம் உலாவியும் மக்களை உற்சாகப் படுத்தியும் புதிய சமுதாயம் என்னும் இச் சஞ்சிகை குடும்பத்திலுள்ள பெரியோர், சிறியோர், மாணவர்கள், அரசியல்வாதிகள், வாலிபர்கள், வயோதிகர்கள் அனைவரும் படிக்க வேண்டிய அநேக அம்சங்களைத் தாங்கி பீடு நடை போட வாழ்த்துகிறேன். தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் இந்த சஞ்சிகையின் வளர்ச்சிக்குப் பேராதரவு கொடுக்கும் படி பணிவன்புடன் கேட்டுக்கொள்வதோடு நாட்டிலுள்ள பத்திரிகை விற்பனையாளர்கள் அனைவரும் அதிகப்படியான பிரதிகளை விற்பனை செய்து ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். சமுதாய சீர் திருத்தத்திலும் சமுதாய வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்டி துலாக்கோல் போல் நடுநிலை நின்று தனது பணியைச் செய்து புதிய சமுதாயம் நின்று நிலவி நீடூழி வாழ வேண்டும், வளர வேண்டும் என்று சிலாங்கூர் இந்தியர் பத்திரிகை விற்பனையாளர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறேன்.

ஒய். செபஸ்தியான்

தலைவர்,

சிலாங்கூர் இந்தியர் பத்திரிகை விற்பனையாளர் சங்கம்.

மலாயா தமிழ்ப் பள்ளி ஆசிரியர் தேசிய சங்கம்

நமது மலேசிய நாடு பல இன சமூகங்கள் கலந்து வாழும் ஓர் அற்புதமான நாடு. இந்த மலேசிய நாட்டில் ஒவ்வொரு சமுதாயமும் காலவோட்டத்திற்கேற்ப புதிய-மறுமலர்ச்சியான சிந்தனையோடு அரசியல் பொருளியல்-வாழ்வியல் துறைகளில் முன்னேறி வருகின்றது என்பது வெள்ளிடைமலை. ஆனால், நமது சமுதாயமோ காலவோட்டத்தை எதிர்க்கும் திராணியின்றியும் புதிய எண்ணங்களை ஏற்கும் மனமாற்றமின்றியும்

"வெந்ததைத் தின்போம்
விதி முடிந்தால் சாவோம்"

என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில்



நம் மக்களிடையே மனப்புரட்சி தேவை அல்லது மனமாற்றம் தேவை. இந்த மனமாற்றத்தை உருவாக்கும் உயர்நோக்கத்தைக் கொண்டு முத்தமிழ் வித்தகர் முருகு அவர்கள் "புதிய சமுதாயம்" எனும் பெயரில் திங்களிருமுறை இதழை வெளிக்கொணர்வது குறித்து மகிழ்கின்றேன்.

"புதிய சமுதாயம்" மக்களின் கொள்கைக் குரலாக-தமிழினத்தின் வாழ்வியல் ஏடாக இயங்கும் என்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு. தமிழுக்குக் குரல் கொடுக்கும் தங்க ஏடான புதிய சமுதாயம் தமிழறிந்த எல்லோராலும் வரவேற்கப்படும் என்பதில்-குறிப்பாகத் தமிழாசிரியர்களால் பெரிதும் வரவேற்கப் படும் என்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு.

ந. கோவிந்தசாமி

தலைவர்

மலாயா தமிழ்ப் பள்ளி ஆசிரியர் தேசிய சங்கம்

மணிமன்றங்கள் வாழ்த்துகின்றன

ஆசிரியர் திருமிகு முருகு அவர்களைக் கொண்டு புதிய சமுதாயம் மலர்வதை வாழ்த்தி வரவேற்கின்றோம். புதிய சமுதாயம் மறுமலர்ச்சிக்கு வித்திடும் என்று நம்பிக்கை கொள்வோம். பத்திரிகைத் துறையில் மாத்திரம் அன்று, சமுதாய மறுமலர்ச்சித் துறையிலும் ஆசிரியரின் பணிகள் பரவிச் சென்றுள்ளன.

மலேசிய மண்ணிலும் சமுதாயச் சீர்கேடுகள் மலிந்து வருகின்றன. சிறுமை கண்டு பொங்குகிற நியாய மனங்கள் சில சமயங்களில் காலத்தால் தோற்கடிக்கப்படுகின்றன. குமுறவும் கொதிக்கவும் வேண்டிய பல இடங்களில் உணர்ச்சியே இல்லாமல் மரத்துப் போய் விடுகின்றார்கள் சிலர். ஆகவே தாம் ஓய்வுபெற வேண்டிய நிலையிலும் புதிய சமுதாயத்தைக் காணும் முயற்சியில் ஆசிரியர் இறங்கியுள்ளார்.

ஆசிரியரின் ஆக்கப் பணிகளுக்கு மணிமன்றங்களின் ஆதரவு என்றும் உண்டு.

புதிய சமுதாயம் வருக! வாழ்க! உயர்வோம்!

க. கிருஷ்ணசாமி,
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை.

கழகத் தலைவரின் வரவேற்பு

புதிய சமுதாயம் எனும் பெயருடன் நல்ல குறிக்கோளில் வெளிவரவிருக்கும் திங்களிரு முறை ஏட்டினை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் நாட்டின் புதிய தோற்றங்களுக்கும், பகுத்தறிவுச் சிந்தனைகளுக்கும், சமுதாய கட்டுப்பாட்டுணர்ச்சிகளுக்கும் புதிய சமுதாயம் எல்லா வகையிலும் சிறந்த தொண்டாற்றுமென்று நம்புகின்றேன்.

தமிழ்நாட்டில் பொன்னி எனும் இலக்கிய ஏட்டை நடத்தி இலட்சக்கணக்கான வாசகர்களின் ஆதரவைக் கொண்டு இலங்கிடப் பெரும் பங்காற்றிய முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் புதிய சமுதாயம் ஏட்டிற்குப் பொறுப்பாசிரியராகச் செயலாற்றுவதனால், புதிய சமுதாயம் தரமான கருத்துக்களைப் படைப்பதன்வழி உயர்வான வாசகர்களை உருவாக்குமென நம்புகின்றேன்.

புதிய சமுதாயம் போன்ற ஏடுகள் சமுதாயத்திற்குப் பயன்படவும், அதனைச் சமுதாயம் பயன்படுத்திக் கொள்ளவும் நல்ல நோக்குடையோர் கடமைப்பட்டுள்ளனர்.

புதிய சமுதாயத்திற்கு மலேசிய திராவிடர் கழகத்தின் நல்வரவேற்பையும், மனங்கனிந்த வாழ்த்தையும் கூறுகின்றேன்.

கே. ஆர். இராமசாமி,
தேசியத் தலைவர்,
மலேசியத் திராவிடர் கழகம்.

சமுதாயம் வாழ்த்துகிறது



கலைஞர் இயக்கத்தின் கனிவு

நாடகம், இசை, நடனம் ஆகியவைகளில் நாம் புதிதாகத் தேட ஒன்றுமில்லை. நம் முன்னோர்கள் நமக்காக நிறையக் கலைச் செல்வங்களைத் தேடி வைத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். அந்தச் செல்வங்களையாவது நாம் நமதுடைமையாக்கி அனுபவித்து மகிழ வேண்டும். புதிய கலை, புதிய அலை என்றெல்லாம் இப்போதைய தலைமுறை போய் விடாமல், பழமை வாய்ந்த அரிய கலைகளைப் பற்றிய சுவையான விவரங்களைப் "புதிய சமுதாயம்" தந்து கலைஞர்களுக்கு ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டும்.

எல்லா வகையிலும், எல்லா நிலையிலும் பின் தங்கிவிட்ட சமுதாயம் ஏற்றம் பெற, எழுச்சி பெற, அனுபவமிக்க ஆற்றல் மிக்க தலைமையில் தொடங்கும் "புதிய சமுதாயம்" வெற்றி நடைபோட வேண்டும்.

பி. கே. சாமி
செயலாளர்
மலேசியத் தமிழ்க் கலைஞர் இயக்கம்

இலக்கியக் கழகத்தின் வாழ்த்து

தமிழ்நெறிக் காவலர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் கால் நூற்றாண்டுக்கு மேல் தமிழ் நாளேட்டின் ஆசிரியத் துறையிலும், இலக்கியப் பணியிலும் மிகச் சிறந்து விளங்கும் சான்றாண்மை மிகுந்த தமிழறிஞர்.

அவரை ஆசிரியராகக் கொண்டு, சிறப்பான கொள்கைகளை ஏற்று வெளிவரவிருக்கும் "புதிய சமுதாயம்" என்ற ஏடு தமிழர்களின் வள வாழ்வுக்குத் துணிவுடன் செயலாற்றும் என நம்புகின்றோம்.

பல இனச் சமுதாயத்தில் இருப்போர் இல்லாதாருக்கிடையில் உள்ள இடைவெளியைக் குறைத்து, சீர்கேடுகளை வளர்த்து வரும் வறுமையை ஒழித்து, மக்களின் கண்களாகவும், செவிகளாகவும் விழிப்புடன் இருந்து அரசாங்கத்திற்குத் தூது உரைக்கும் அரும் பணிகளையும் எழுத்தாற்றலால் செய்க என இவ்வேட்டினை வேண்டுகின்றோம்!

எங்கள் நல்வாழ்த்துக்களைக் கனிவுடன் உரித்தாக்குகின்றோம்! புதிய சமுதாயமே! வருக! வாழ்க! வெல்க!

இர. ந. வீரப்பன்
செயலாளர்,
தமிழ் இலக்கியக் கழகம்.

ஓயாத கலை ஆழி ஓய்ந்ததே!

சோ. பரஞ்சோதி

பெரு நில அதிர்வொன்று ஏற்பட்டு, பூமி வாய் பிளக்க அதில் கலைக்கோயில் ஒன்று இடிந்து விழுந்து மறைந்து மண்ணோடு மண்ணாய்க் கலந்து விட்டது!

கலைமாமணி ஆழி அருள்தாசன் நம்மை விட்டுப் பிரிந்து அமரராகிவிட்டார். சாவுக்கு முன்தினம் காலையில் கலைக் கூட்டம், மாலையில் பொதுக் கூட்டம் என்று தான் இறக்கும் வரை சமூகத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர் "ஆழி".

அவர் இறந்த அன்றுதான் முதன் முதலில் "முல்லைத் தேரி"ன் முழு நாடக ஒத்திகை நடைபெற வேண்டி மாலை 7 மணிக்கு நாடக மன்ற உறுப்பினர்களை வரச் சொல்லி இருந்தார். அதே போன்று தன்னோடு மிகவும் அணுக்கமாக இருந்த சிலரை இரவு 9 மணிக்குத் தன் வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார். அனைவரும் அவர் குறிப்பிட்டபடி வந்து சேர்ந்தார்கள்! ஆம்... ஆழியின் பேரலை ஓய்ந்துவிட்ட சோகச் செய்தியைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எடுத்துச் சொல்ல வந்தார்கள்!

கலைமாமணி, நாடகவேள், நாடகத் தந்தை, சொல்லின் செல்வர் என்கின்ற சிறப்புப் பெயர்களையெல்லாம் பெற்றிருந்தார்.

நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நாடக எழுத்தாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், நடன ஆசிரியர், அரங்க அமைப்பாளர், ஓவியர், சிறந்த பேச்சாளர், நேரிய செயலினர், கலைஞர் தலைவர் என்பவை அவருடைய சிறப்பியல்புகள்.

ஆழி அருள்தாசன் 15.7.1932ல் தஞ்சை மாவட்டம் ஆழி ஊரில் பிறந்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் "இண்டர்" வகுப்பு வரையில் படித்தார். "இந்தி" விசாரத்' வரை படித்துள்ளார். அதனோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பால பண்டிதம் வரை படித்துப் பட்டம் பெற்றார்.

படிப்பு முடிந்தபின் தி.மு.க.வில் சேர்ந்து பணிபுரிந்தார். அந்த நேரத்தில்தான் அவர் மேடைப் பேச்சாளராக உருவானார். 1948ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரிலும் ஈடுபட்டார். இதனால் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே அவர் மலேசியா வந்தார்.

பினாங்கில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு கோலாலம்பூரில் கடை ஒன்றில் விற்பனையாளராகக் சில காலம் வேலை செய்துவிட்டு, ஓர் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் குமாஸ்தாவாகப் பணி புரிந்தார். பிறகு அரசாங்கப் பணியில் போக்குவரத்துத் துறையில் தலைமைக் குமாஸ்தாவாகவும் கடைசியில் கேளிக்கை வரி இலாகாவிலும் பணியாற்றினார்.



மலைநாட்டில் முதன் முதலில் 1952ம் ஆண்டு வ.உ.சி. விழாவில் சொற்பொழிவாளராக அறிமுகமானார். பின்னர் தி.க. கலைப் பகுதித் தலைவரானார். செராஸ் ரோடு கழக இல்லத்தில் சொற்பயிற்சிகளை நடத்திப் பல நல்ல பேச்சாளர்களை உருவாக்கினார்.

நாடகத் துறையில் அவர் சிறந்த தயாரிப்பாளராக மட்டுமல்லாது நடிகராகவும் இருந்துள்ளார். பள்ளியில் ஷேக்ஸ்பியரின் "ஹாம்லெட்" நாடகத்தைத் தமிழாக்கி நடித்துள்ளார். அது போன்றே, "வீழ்ந்த கோயில்" "இராமாயணம்", "ரத்தக் கண்ணீர்" போன்ற நாடகங்களிலும் அவர் நடித்துள்ளார். இதில்

குறிப்பாக இராமாயணத்தில் அவர் சீதையாகப் பெண் வேடமிட்டு நடித்துப் பல இளம் உள்ளங்களைக் கிறுகிறுக்க வைத்த செய்தியைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

1955ம் ஆண்டு அவர் தயாரித்தளித்த "வெண்ணிலா" நாடகம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. பத்திரிகைகளின் கண்டனங்களுக்கும், எதிர் விமர்சனங்களுக்கும் அவர் ஆளானார். இதனால் அவர் நாடு கடத்தப்படக் கூடிய அபாயம்கூட உருவானது. இந்தப் புரட்சிகரமான காலக் கட்டத்தில்தான் அவர் குமாரி பைசோனைச் சந்தித்தார். காதல் மலர்ந்தது. சீர்திருத்த திருமணம் செய்துகொண்டார்.

பிறகு "ஜீவஜோதி", "மறுமலர்ச்சி", "மலர்ந்த வாழ்வு" போன்ற நாடகங்களைத் 'தகவல் இலாகாவிற்காக எழுதித் தயாரித்தார்.

அதன்பின் பிறருக்காக நாடகங்களைத் தயாரிப்பதை விடுத்து, தானே ஒரு நாடகக் குழுவை அமைத்து சிறப்பான முறையில் நாடகங்களைத் தான் நினைத்தபடி தயாரிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டதின் காரணமாகவே மலாயாக் கூட்டரசு தமிழ்க் கலை மன்றத்தை நிறுவினார். பிறகு இதே மன்றம்தான் மலேசியத்தமிழர் கலைமன்றமாக பெயர் மாற்றமடைந்தது. இம் மன்றத்தின் குறிக்கோள் "முத்தமிழ் முழங்கும் நற்கலை வாழி" என்பதாகும். 16 ஆண்டு காலம் அதன் தலைவராக இருந்து அம் மன்றத்தைக் கட்டிக் காத்துள்ளார்.

கலைமன்றம் அமைத்ததுமுதல் அவர் படைத்த நாடகங்கள்: "யார் குற்றவாளி", "மின்னொளி" "வாடாமலர்", "உயிரோவியம்", "நினைவுச் சின்னம்", "ஒரேகுரல்" "நள்ளிரவில்", "கடாரம்" முதலியவை ஆகும். அவர் இறுதியாகப் படைக்கவிருந்த நாடகம் "முல்லைத்தேர்". ஆழி தன்னுடைய நாடகங்களை முழுமையாக எழுதி முடித்துவிட்டு ஒத்திகை பார்க்கும் வழக்கமில்லாதவராக இருந்திருக்கிறார். நாடக அரங்கேற்றம் நடைபெறப்போகும் சில தினங்களுக்குமுன்புதான் கதையை முழுமையாக எழுதி முடிப்பது வழக்கமாம். ஆனால், 'என்ன காரணத்தாலோ "முல்லைத் தேரை" முழுமையாக எழுதி முடித்ததோடு அதைப் புத்தகமாக அச்சிடவும் கொடுத்து விட்டார்.

காப்பியா?

நீங்கள் அருந்தும் காப்பியுடன் ஒரு கோப்பை குளிர் நீரையும் அருந்துவது உடம்பிற்கு நல்லது. மூனிச் போஷாக்கியல் சங்கம் இப்படிக் கூறுகின்றது. வயிற்றின் பிரதான தூண்டுமுட் சுரப்பியாகிய இரைப்பை நீரை காப்பி அளவுக்கதிகமாகச் சுரக்கச் செய்கிறது. ஆதலால் காப்பியையடுத்து அருந்தப்படும் ஒரு கோப்பை குளிர் நீர் இந்நிலைமையைச் சீர்செய்துவிடுகின்றது.



ஆழி மற்றவர்களைப் பாராட்டுவதிலும், சிறப்புச் செய்வதிலும் முதன்மையாளராக இருந்திருக்கிறார்.

தலைநகரில் நடந்திருக்கும் பாராட்டு விருந்துகள், நிகழ்ச்சிகளில் அவர் தலைமையில், அவர் ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சி ஏராளம் என்பதைப் பலர் உணர்வார்கள். தலைநகர் தமிழர் திருநாள் குழுவிற்குக் கடந்த சில ஆண்டுகளாகத் தலைவராக இருந்து, துவளத் தொடங்கிவிட்ட தமிழ் உணர்ச்சியை, இலக்கிய ஆர்வத்தைத் தட்டி எழுப்பத் துவங்கினார்.



"ரத்தக் கண்ணீர்" நாடகத்தில் கதாநாயகன் மோகனாக ஆழி நடித்தார்

ஆழி பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டிருந்தார். அவர் "ஞாயிறு" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்திருக்கின்றார். மேலும் அண்மையில் ஒரு பத்திரிகை துவங்க வேண்டுமென்ற எண்ணத்திலும் அவர் இருந்தார். அதோடு புத்தக வெளியீடு செய்யும் நோக்கமும் அவருக்கிருந்தது. ஏற்கனவே அவருடைய பாடல்கள் அடங்கிய புத்தகங்களை வெளியிட்டுள்ளார். தன்னுடைய நாடகங்களைப் புத்தக வடிவில் கொணரும் முதல் கட்ட வேலைதான் "முல்லைத் தேர்" அச்சிற்குச் சென்றது.

ஆழி தன் இறுதி காலத்தில் கலைஞர் இயக்கத்தின் தலைவராகவும், கலைஞர் அறநிதித் தலைவராகவும் இருந்து மலேசிய தமிழ்க் கலை உலக முன்னேற்றத்திற்குப் பல முன்னோடித் திட்டங்களை உருவாக்க ஆவல் கொண்டிருந்தார். அதில் அவரின் தலையாய லட்சியம் தலைநகரில் தமிழர்களுக்கென ஒரு நாடக அரங்கம் அமைக்க வேண்டுமென்பது தான். இந்தக் கலைப் புனிதரின் ஆன்மா சாந்தியடைய தமிழர் சமுதாயம் நன்றிக் கடனாக அவரின் லட்சியம் ஈடேற, தமிழர்கள் மார்தட்டிச் சொல்ல "ஆழி அரங்கம்" உருவாக வேண்டுமென்று எதிர் பார்ப்போம்.

ஆழி அருள்தாசன் ஆற்றிய கலைப் பணி, பொதுப்பணி எல்லாம் நம் நெஞ்சை விட்டகலாது. அவர் புகழ் தமிழர் உள்ளளவும் வாழும்.

நையாண்டி மேளம்

'ஆவன்னா'

கொள்ளிவாய்ப் பிசாசு

மங்கலான நிலவொளி. அந்த மரப்பாலத்தை யும் அதை ஒட்டி நிற்கும் பிரம்மாண்ட மான அரச மரத்தையும் தாண்டி விட்டால் வீடு வந்துவிடும். நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரிய வில்லை; நடையைச் சற்று எட்டிப் போட்டேன்.

அந்தப் பாலத்தையும் அரசமரத்தையும் பற்றிப் பல கதைகள்; பயங்கரமான கதைகள்; எல்லாம் நினைவிற்கு வந்தன. பாலத்தைத் தாண்டி விட்டேன். சடாமுனி போலக் கிளை களைப் பரப்பிக் கொண்டு அரசமரம் "ஓ"வென்று நின்று கொண்டிருந்தது. திடீரென்று காற்று சுழன்றடித்தது. அரசமரம் தலை விரித்தாடியது. ஒரு கணந்தான்; மீண்டும் அமைதி. என் மூச்சு எனக்கே கேட்கும் அளவுக்கு அமைதி. அரச மரத்தினடியில் ஏதோ ஒன்று இருப்பது அந்த மங்கிய ஒளியிலும் எனக்குத் தென்பட்டது. கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு பார்த் தேன்; சந்தேகமில்லை; மரத்தில் சாய்ந்து கொண்டு ஓர் உருவம் உட்கார்ந்திருப்பது தெரிந் தது. இருந்த இடத்திலிருந்தவாறே, "யாரது?" என்றேன். பதில் வரவில்லை; சற்று நெருங்கிச் சென்றேன்.

குச்சி குச்சியான கைகால்கள்; கூடு விழுந்த நெஞ்சு; காடாக மண்டிக் கிடந்த தலைமுடி; உடல் முழுதும் "முசுமுசு"வென்று ரோமக்கூட் டம்; முகம் சரியாகத் தெரியவில்லை; நான் அரு கில் நெருங்கி விட்டதை உணர்ந்து கொண் டதோ என்னவோ அந்த உருவம் நிமிர்ந்து என்னைப் பார்த்தது. கண்கள் நெருப்புத் துண் டங்களாகக் கிடந்தன. துணிச்சலை வரவழைத் துக்கொண்டு, "யாரது இங்கே இந்த நேரத் தில்?" என்று கேட்டேன்.

"இப்படி உட்கார், சொல்கிறேன்" என்று மெல்லிய குரலில் அந்த உருவம் சொன்னதும் தயங்கியவாறே அதனருகில் கிடந்த ஒரு கல்லில் உட்கார்ந்தேன்.

சற்று நிமிர்ந்து உட்கார்ந்தது அது. தொண்டையைச் செருமிக் கொண்டு, என் முகத்தைப் பார்த்தவாறு மிகச் சாவதானமாக, "நான் யாரென்று கேட்டாயே! நான் தான் கொள்ளிவாய்ப் பிசாசு" என்றது.

என் மண்டைக்குள் புழுக்கள் நெளிந்தன. நெஞ்சுக்குள் ஆயிரம் ஊசிகள் ஒரே நேரத்தில் "நறுக்"கென்று பாய்ந்தன. "சடக்"கென்று எழுந்து ஓடிவிட முனைந்தேன். அது எட்டி என் கையைப் பற்றிக் கொண்டது.

"உனக்குப் புண்ணியமாகப் போகட்டும்; ஆளை விடு! ஓடி விடுகிறேன்!" என்று நாக்குழ றக் கூறினேன்.

"கொஞ்சம் மரியாதையாகப் பேசு!" என்று உறுமியது அது.

"தப்பித்தால் போதும்; எதற்கு வம்பு!" என்று எண்ணிக் கொண்டு "ஐயா கொள்ளி வாய்ப்பிசாசு அவர்களே! என்னை ஒன்றும் செய்யாதீர்கள்; விட்டு விடுங்கள்!" என்று மிக வும் மரியாதையாகக் கூறினேன்.

"நறநற"வென்று சிரித்தது அந்தக் கொள்ளி வாய்ப்பிசாசு அதன் பற்கள் "பளி"ரென்று மின்னின. "பயப்படாதே உன்னைத் தின்ன மாட்டேன்! நான் சைவன்!" என்று சொல்லி என் கையை விட்டது.

"நீங்கள் சைவரா!" என்று தயக்கத்தோடும் வியப்போடும் கேட்டேன்.

"ஆமாம்! ஆடு, கோழி போன்றவற்றைச் சாப்பிடுவதுண்டு; ஆனாலும் நான் சைவன் தான்!" என்றது மீண்டும் சிரித்தபடி.

"ஆட்டையும் கோழியையும் உண்ணும் நீங்கள் எப்படிச் சைவராக முடியும்?" என்றேன். பயம் சற்றுத் தெளிந்திருந்தது, பேசிப் பார்க்க லாமே என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

"புல்லையும் தழையையும் மட்டும் தானே ஆடு தின்கிறது, அதனால் அது சைவ ஆடுதான்! சைவ ஆட்டைத் தின்னும் நானும் சைவன் தானே?"

"உங்கள் வாதம் ஆட்டுக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம்! ஆனால் கோழி புழு, பூச்சி களைத் தின்னுமே! அது சைவக் கோழியாகாதே?"

"உனக்கு ஆராய்ச்சி போதாது போல் தெரி கிறது; அந்தப் புழுக்களும் பூச்சிகளும் சைவ உணவைத்தான் தின்னுகின்றன; சைவப் புழுக் களையும், சைவப் பூச்சிகளையும் தின்னும் கோழி சைவக் கோழிதான்; அதைத் தின்னும் நானும் சைவன்தான்! சைவ ஆடு, சைவக்கோழியோடு அவ்வப்போது நான் சைவ மனிதர்களையும் சாப் பிடுவதுண்டு: மற்றபடி, அசைவப் பிராணி களையோ அசைவ மனிதர்களையோ நான் தின்ப தில்லை; நான் சுத்த சைவன்! ஆமாம், நீ எப்படி? சைவனா, அசைவனா?"

மிகவும் சமத்காரமாகப் பேசி, என் கழுத்திலேயே அது வாய்வைக்கப் பார்க்கிறது என்பது எனக்குப் புரிந்து விட்டது.

"நான் உங்களுக்குப் பயன்பட மாட்டேன் என்று நினைக்கிறேன். நீங்கள் மிக உறுதியாகக் காத்துவரும் சுத்த சைவ விரதம் என்னால் கெட்டுவிடும். ஏனென்றால் நான் நூற்றுக்கு நூறு சுத்த அசைவன்!" என்று ஒரு போடு போட்டேன். கொள்ளிவாய்ப் பிசாசு சிரித்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சிரிக்காமல் என்ன செய்யச் சொல்கிறாய்? மரக்கறி உணவு உண்பவர்களைச் சைவர்கள் என்பதும் மாமிச உணவு கலந்து உண்பவர்களை அசைவர்கள் என்பதும் எந்த நியாயத்தில் சேர்த்தி? சைவம் என்பது சமயம்; அது சாப்பாட்டு மடமல்ல! சிவநெறியை எவன் உள்ளத்தில் இருத்தி வைத்திருக்கிறானோ, அவன்தான் சைவன்! எதை உண்டால் என்ன? மனதில் இருப்பதுதான் சைவம்; வயிற்றில் இருப்பதல்ல!"

"உங்கள் வசதிக்கேற்பப் புது விளக்கம் தருகிறீர்களே!"

"மரக்கறி உணவை உண்பதனால் மட்டுமே ஒருவன் சைவனாகி விடமுடியாது. மாமிச உணவை உண்பதனால் மட்டுமே ஒருவன் சைவன் இல்லை என்றும் ஆகிவிடாது!"

"மரக்கறி உணவுக்கு நீங்கள் எதிரியோ?"


"மரக்கறி உணவு மேலானது என்பது உண்மைதான்; ஆனால் அதற்கும் சமயத்திற்கும் முடிச்சுப் போடுவது சரியாகுமா? மரக்கறி உணவுண்பவர்களை ஒரே மொத்தமாகச் சைவர்கள் என்று கூறுவது சமயத்திற்கு இழுக்கு. மாமிச உணவை ஒதுக்க வேண்டும் என்று சமயப் பெரியார்கள் சொன்னது எல்லா வகையிலும் நியாயமானதுதான்; ஆனால் அதை ஒரு சமயக் கோட்பாடாக நினைத்துக் கொள்வது சரியாகாது!"

"அப்படியென்றால். யாரைத்தான் சைவன் என்று சொல்வது?"

"எந்த உணவென்றாலும் குறைவில்லாமல் உண்டு, உடலையும் உள்ளத்தையும் வலுவாக்கி உழைப்பைப் பெருக்கி, சிவநெறியில் நின்று வாழ்பவன் எவனோ அவன்தான் சைவன்!"

கொள்ளிவாய்ப் பிசாசின் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. மேலும் அங்கு நின்று அதன் வயிற்றுக்குள் அடக்கமாவதும் எனக்குப் பிடிக்கவில்லை. "விறுவிறு"வென்று நடையைக் கட்டினேன்.

"நில்! நில்!" என்று பின்னாலிருந்து அது கூவியது. திரும்பிப் பார்க்காமல் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தேன். ●


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
தமிழின் ஐம்பெருங் காப்பியங்களில் முத்தமிழ்க்காப்பியம், தமிழர் வரலாற்றுக்காப்பியம் எனக் கூறப்படுவது "சிலப்பதிகாரம்"! இதை இயற்றியவர் இளங்கோ அடிகள்.
சிலப்பதிகாரத்தின் கதாநாயகி, கற்பிற் சிறந்த கண்ணகி_ கதாநாயகன் சிறந்த வியாபாரி, கோவலன்–
இவர்களின் கதை இதோ.
திருக்குணவாயில் என்னும் ஊரில் ஒரு கோவிலில் வாழ்ந்து வந்த இளங்கோ அடிகளிடம் ஒரு நாள் குறவர்கள்.....
அடிகளே, வேங்கை மர அடியில்... மார்பகங்களில் ஒன்று இல்லாப் பெண் மணி நின்றிருக்க, தேவர்களுடன் வந்த அப்பெண்ணின் கணவன் அவளைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு வானத்தில் மறைந்தனர்
அந்தப்பெண்ணைப்பற்றிய வரலாற்றை மிகச் சுருக்கமாக, தன்னுடன் கூட இருந்த கூல வாணிகச் சாத்தனரிடமிருந்து கேட்ட பிறகு...
தவறு செய்யும் அரசனைத் தர்மம் கொல்லும்! கற்புடைய பெண்ணை மக்கள் வணங்குவர் முந்திய பிறப்பில் செய்த தீச்செயல் அடுத்த பிறப்பில் ஒருவனைத் தொடர்ந்து வந்து தண்டிக்கும் என்ற உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவதற்கே
அந்தப்பெண்ணின் கதையை "சிலப்பதிகாரம்" என்னும் காப்பியமாக இளங்கோ அடிகள் எழுதினார். இதோ படித்துக்கொள்ளுங்கள்...... ஒரு நாள்...
நம்ம தோழி கண்ணகிக்குக் கல்யாணம் தெரியுமா?
யாரு லட்சுமி மாதிரி அழகா இருப்பாளே மாநாய்க்கன் என்பவரின் மகள் அவளுக்கா?
ஆமாம்! மாப்பிள்ளை யாரு தெரியுமா?
தொடரும்..

அந்த எஸ்டேட்டுக்கு இதற்குமுன் நான் போனதில்லை! இதுதான் முதல் தடவை! பாதைகளோ ஒழுங்காக இல்லை! வீடுகளோ பார்க்கச் சகிக்கவில்லை!

ஒவ்வொரு வீட்டுக்கு முன்னும் பின்னும் கிழிந்துபோன அழுக்குச் சாக்குகளும், படுதாக்களும் தொங்கிக்கொண்டிருந்தன. அந்த அலங்கோலமே தோட்டப்புற மக்களின் பரிதாப வாழ்க்கையை எடுத்துக்காட்டிற்று!

வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. சத்திய ஜித்ரேயின் கிராமியப் படத்தைப் போல இருந்தது என்று சொன்னால் மிகையாகாது!

வழி நெடுகிலும் குப்பையும் கூளமும்! ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் ஒட்டைத் தோம்புகள்! உடைந்த சாமான்கள்! நசுங்கிய டின்கள்!

நஞ்சுங் குஞ்சுமாய், அல்லது நண்டுஞ் சிண்டுமாய் என்று சொல்வார்களே! அதை நேரில் காணும் வாய்ப்பை அன்றுதான் பெற்றேன்.

செம்பட்டை நிறம் காட்டும்—பிசிறு பிடித்த—இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டும்—தலையோடு பிள்ளைகள்! அவர்களின் உடையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

அழுக்குப் பிடித்த உடலைச் சுற்றிக் கொண்டிருக்கும் அழுக்குக் கந்தல்.........!

ஹூம்! பெற்றோர்கள் இருந்து சம்பாதித்து, குடும்பம் நடத்தும் நிலையிலேயே குழந்தைகள் இப்படி இருக்கிறார்களே! அனாதைக் குழந்தைகள் அல்லது பிச்சைக்காரர்கள்நிலை எப்படி இருக்கும்?

தங்களின் அருமையான குழந்தைகளை எந்த நேரத்திலாவது வாரியணைத்து கொஞ்சி மகிழவேண்டும் என்றுகூட அவர்களுக்குத் தோன்றாதோ...?

இந்தக் கோலத்தில் குழந்தைகளைக் கொஞ்சிக் குலாவத் தோன்றுமா? சே......! என்ன வாழ்க்கை வேண்டியிருக்கிறது?

பத்து வயதிலிருந்து ஒரு வயது வரை எட்டுக் குழந்தைகள்! அடேயப்பா! எப்படித்தான் சமாளிப்பாளோ அந்த அருமைத் தாய்? அந்தத் தாயின் நிலையைப் பார்த்தால் அதைவிடப் பரிதாபம்! வற்றல் மேனி! வாடிய முகம்! பரட்டைத் தலை......!

அந்த வீட்டின்முன் நின்றேன். உள்ளே நுழையாதே என்று வீட்டின் வாடையே விரட்டுகிறது!

என்ன செய்வது? எனது கடமை இருக்கிறதே? அவள், வீடு இருக்கும் அலங்கோலத்திற்காக நாணுகிறாள்! வீடு தேடி வந்துவிட்டார்களே என்பதற்காக மகிழ்ச்சியடைகிறாள்.

அத்தனை ஏழ்மையிலும் உபசரிக்கும் அந்தப் பண்பு மட்டும் இன்னும் மாறவில்லை!

அகமும் முகமும் மலர ஆவலோடு வரவேற்று உள்ளன்போடு பழகும் அந்த உயரிய பண்பாடு இந்த அவலத்திற்குள் அல்லவா அமிழ்ந்து கிடக்கிறது!

படாடோபமும் பகட்டும் நிறைந்த பட்டணத்தில் காண முடியாத அந்த உண்மையான உள்ளன்பு, ''நாமும் ஏன் இங்கேயே இருந்துவிடக்கூடாது'' என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது.

ஆனாலும் இந்த அழுக்கு! அலங்கோலம்...! அவலம்...! என் உடல் குலுங்குகிறது,

ஆட்டங் கண்டுபோன நாற்காலியை எடுத்துப் பணிவோடு ஓரமாக வைக்கிறாள். கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உட்காருகிறேன்.

''கரியா! ஓடிப்போய் ஆரஞ்சு வாங்கியாடா......''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்......''

''என்னம்மா வீடு தேடி வந்துட்டீங்க...! தண்ணிகூட தராமலா? டேய் நீ போயேண்டா! திறந்து, உறிஞ்சுவதும் போட்டு வாங்கிட்டு வா......''

''உன் பேரு என்ன......?''

''பாக்கியமுங்க......''



"சகல செளபாக்கியமும் நிறைஞ்சிருக்க வேண்டுமென்றுதான் இப்படிப் பேர் வைப்பார்களாம் நம்மவர்கள்..."

"பேருதான் பாக்கியம்...! என்னத்தைச் சொல்றது போங்க...!"

"அதுதான் குழந்தை பாக்கியம் பூரணமாயிருக்கே...! ஒவ்வொருத்தர் ஒரேயொரு பிள்ளை வேண்டுமென்று தவம் செய்றாங்க..."

"இதுக்குப்போய் தவமிருக்கணுமா...? அதுதான் வேணும் வேணும் என்றாலும் கடவுள் வரிசையா தந்துகிட்டே இருக்கிறாரே..."

"கடவுள் எல்லாருக்கும் கொடுக்கமாட்டார்! உன்னைப் போன்ற பாக்கியவதிக்குத்தான் கொடுப்பார்...!"

"என்னமோம்மா! நீங்கதான் சொல்றீங்க, நாங்க படுறபாடு இருக்கே... அது அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்..."

"அப்படியில்லே! சிலபேருக்குக் கை நிறையப் பணம் தருவார். சிலபேருக்கு மடி நிறையப் பிள்ளைகளைத் தருவார்! பணம் அதிகமாக இல்லாட்டி எப்படியும் வாழ்ந்திட முடியும். அதை எந்த வழியிலாவது சம்பாதிக்கவும் முடியும். ஆனால் குழந்தையை சம்பாதிக்க முடியாது..."

"நீங்க சொல்றதும் வாஸ்தவந்தாம்மா...! ஆமா...அம்மாவுக்கு எத்தனை பிள்ளைங்க...?"

அவள் தயங்கிக் கொண்டே தான் கேட்டாள்.

"இரண்டுதான்!"

"எங்களாட்டம் நிறைய வெச்சுக்கிட்டு அவதிப்படாமே கச்சிதமா ரெண்டு பிள்ளைங்க, குடுத்து வெச்சவங்க!"

"ஓ...! நான் உன்னைச் சொல்கிறேன்...நீ என்னைச் சொல்கிறாயா? இன்னும் ஒன்று இருந்தால் நல்லது! மூன்றாக இருக்கலாம் என்றுதான் நான் விரும்புகிறேன். இரண்டு போதும் என்பது அவர் கொள்கை"

"உங்களுக்குக் கஷ்டம் தெரியலே, ஆசைப்படுறீங்க. அதோடு வசதியும் இருக்கு...நீங்க படிச்சவங்க! நாலு என்ன, அஞ்சுகூட இருக்கலாம். வசதியுள்ளவங்க நல்லா வளக்கலாமே..."

என் இதயத்தில் அவளது சொற்கள் அழுத்தமாகப் பாய்ந்து என்னவோ செய்தன. நான் விழித்துக்கொள்கிறேன்.

நான் எதற்காக வந்தேன் என்பது நினைவுக்கு வருகிறது.

"ஆமாம், புத்திசாலித்தனமா பேசுறே...! ஆனால் அதுபோல நடந்துகொள்ளவில்லையே......? வசதியுள்ளவங்க ஐந்து பிள்ளைகளை வளர்க்க முடியுமென்று சொன்னாயே, அதுசரி. ஆனால் உன்னைப்போல் கஷ்டமான நிலையில் உள்ளவர்கள் ஏழெட்டு வைத்திருக்கலாமா...?"

அவள் நாணத்தோடு தலையைக் குனிந்து கொள்கிறாள். பேசிக் கொண்டிருக்கும்போதே நான் வீட்டுக்குள்ளே நோட்டமிட்டேன். துணியால் கட்டிய தொட்டிலில் குழந்தை ஒன்று! ஈரத்தில் நீண்டநேரமாக அவதிப்பட்டுக் கொண்டிருப்பது போல முண்டிக் கொண்டிருந்தது.

தரையில் கிழிந்த பாயில் இரண்டு வயது மதிக்கத்தக்க மற்றொரு குழந்தை சுருண்டு கிடந்தது!

மூலையில் அழுது அடம் பிடித்துக் கொண்டிருந்த பெண் குழந்தை ஒன்று புதிதாக என்னைப் பார்த்த வியப்பிலோ பயத்திலோ வாயடைத்து நின்றது!

வாசலில் நாலைந்து குழந்தைகள்! எல்லாம் ஒரே ரகம்! எது யார் வீட்டுக் குழந்தை என்று கூடத் தெரியவில்லை!

எனக்கு என்னவோ போலிருந்தது! அந்த மௌனமும் பிடிக்கவில்லை! மீண்டும் அவளிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"குழந்தை ஈரத்தில் இருக்கிறதே..,! மாற்றவில்லையா...?"

"அது அடிக்கடி அப்படித்தான்! எவ்வளவு துணிதான் தோய்க்கிறது?"

நான் உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறேன்.

துணியும் துவைப்பதுண்டா என்று கேட்க வேண்டும் போலிருந்தது!

"விடியக்காலையிலே எழுந்ததிலேயிருந்து வேலை சரியாயிருக்கு... கொஞ்சமும் ஒழியலே.., இதுங்க செய்யிற அட்டகாசம்..,! ஒரு சாமானை



யும் ஒழுங்கா வைக்க முடியாதுங்க...!நானும் ஓடியாடித்தான் பாடுபடறேன்...!முடியுதா...?"

ஒரு வாளி நிறைய துணிகளைத் துவைத்துக் கொண்டு வந்து நிற்கிறாள் ஒன்பது வயதுள்ள சிறுமியொருத்தி. மூத்தவளாக அதுவும் பெண்ணாகப் பிறந்த பாவமோ? இந்த இளம் வயதிலேயே அவளது சுமை ஆரம்பமாகி விட்டது!

"அம்மா! ஆரஞ்சு குடிங்க..." அவளது அன்பான உபசரணை என் சிந்தனையை மீட்டுகிறது.
"ரொம்ப நன்றி! இவன்தான் மூத்த பையனா...?"
"ஆமாங்க...!" பேரு கரியன்"
"அதென்ன பேரு... என்னமோ கரியன்னு? கறுப்பாக இருக்கிறான் என்றா?"
"இல்லேம்மா...! அவன் அப்பா வெச்சது கரிகாலன்! நாங்க அப்படிக் கூப்பிடுவோம்..."

நான் சிரித்துக் கொள்கிறேன்! எத்தனை அருமையான அழகிய பெயர்!
"உனக்கு எட்டுப் பிள்ளைகள் அதிகந்தான் என்பதை நீயும் ஒப்புக்கொள்கிறாயா?"
"ஆமாங்க! அதிகந்தான்! சில சமயம் இந்தப் பிள்ளைகள் படும் பாட்டைப் பார்க்கவே சங்கடமாயிருக்குங்க."
"இப்போ வேதனைப்பட்டு என்ன செய்யமுடியும்? முதலிலேயே திட்டம் போட்டு அளவாகப் பெற்றிருக்க வேண்டும்!"
"என்னம்மா சொல்றீங்க? என்ன திட்டம் போடணும்...?" அவள் அப்பாவித்தனமாக என்னை விழித்துப் பார்த்தாள்.
"அதுதான் குடும்பக் கட்டுப்பாடு! திட்டமிட்ட சிறிய மகிழ்ச்சியான குடும்பம்! நீ கேள்விப்பட்டதேயில்லையா...?"
அவள் குழப்பத்தோடு ஏறிட்டுப் பார்த்தாள்.
"உனக்குக் குழந்தைகள் போதும் என்று நினைத்தால் கர்ப்பத்தடை செய்து கொள்ளலாம். மாத்திரைகள் உண்டு. அறுவை சிகிச்சையும் செய்து கொள்ளலாம்..."

"அது பாவமில்லையாம்மா?..."
"பெற்ற பிள்ளைகளை இப்படி வறுமையிலே வாட விடுவது மட்டும் பாவமில்லையா?"
"என்னமோம்மா நீங்க சொல்றீங்க...முந்தி ஒருத்தவங்க இப்படித்தான் வந்து சொன்னாங்க. ஆனா நம்ப அமீனா இருக்குதே அது சொல்லுச்சு இதெல்லாம் பாவம்! கடவுள் கொடுக்கிற உயிரை நாம் அழிக்கக் கூடாதாம்! அது சொல்றதிலே ஞாயமிருக்கே!"
என் இதயத்துக்குள் சுளீரென்று ஓர் அடி விழுந்தது! நான் சமாளித்துக் கொள்கிறேன்.
"அப்படிச் சொல்லவில்லை, பாக்கியம்! உயிரை அழிப்பது தான் பாவம்! ஆனால் உண்டாகாமலே பார்த்துக் கொள்ளலாம் அல்லவா? அதுதான் குடும்பக் கட்டுப்பாடு என்பது!"
"நீங்க சொல்றதும் சரிதாங்க! ஆனால் அந்தக் கடைக்கார சின ஆச்சி இருக்காளே! அவளுக்குப் பதினாலு பிள்ளைகள்! அவளே சொல்ரு இது நல்லதில்லை! மருந்துங்க சாப்பிட்டா உடம்புக்கு ஏதாவது கெடுதல் நேருமாம்.,! ஒன்னு கிடக்க ஒன்னு வந்து தொந்தரவா போச்சுன்னு என்ன செய்றது..."
என் இதயத்தில் மற்றுமோர் சாட்டையடி பலமாக விழுவது மாதிரி இருந்தது. அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் இவர்களுக்கு எப்படி நான் விளங்க வைப்பது?...

சினத்திக்கு என்ன? அவள் வியாபாரம் செய்பவள்! அவள் குழந்தைகள் படித்தாலும் படிக்காவிட்டாலும் ஏதாவது வியாபாரம் செய்து எப்படியும் பிழைத்துக் கொள்வார்கள்! வேலையைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை! நாம்தான் பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்! அதனால் குடும்பக்கட்டுப்பாடு நமக்கு அவசியந்தானே? சரி மருந்து வேண்டாம் மாத்திரை வேணடாம் இயற்கையான வழி முறைகளைப் பின்பற்றலாமே...?"

நான் மிகவும் சாமர்த்தியமாகப் பேசி விட்டதாக நினைத்தேன்.
"என்னம்மா சொல்றீங்க...?"
"இது ரொம்ப சுலபமான வழி மனக்கட்டுப்பாடு இருந்தால் போதும்!" நான் அவளுக்கு விளக்கம் சொன்னபோது அவள் என்னைப் பார்த்து விரக்தியோடு ஒரு சிரிப்பு சிரித்தாள்!
"அம்மா நீங்க சொல்வது உங்களைப் போல வசதியானவங்க படிச்சவங்களுக்குச் சரியாயிருக்கலாம்! ஆனால் எங்களைப் போல ஏழைங்களாலே எப்படியம்மா முடியும் ..?"
"ஏன்? நீங்களும் மனிதர்கள் தானே! அதுவும் நீ பெண்ணாயிற்றே? உன்னாலே கட்டுப்பாடாக இருக்க முடியாதா...?"
"நானும் பெண்ணாக இருப்பதினாலேதாம்மா இதைச் சொல்றேன்! நீங்க வசதியுள்ளவங்க! கைநிறைய சம்பளம்! காரு, பங்களா! நேரத்துக்கு நல்ல சாப்பாடு எல்லாமே இருக்குது! பொழுது போக்க சினிமாவும், டெலிவிஷனும் இன்னும் எவ்வளவோ இருக்கு! ஒழிஞ்ச நேரத்திலே வெளியே போயி நாலு இடம் சுத்திப் பார்ப்பீங்க! உங்களுக்குப் பொழுது சந்தோஷமா கழியுது! கவலையில்லே! அதனாலே நிம்மதியா இருப்பீங்க! எல்லா சுகமும் இருக்கிறதாலே திட்டம் போடலாம்! கட்டுப்பாடாக இருக்கலாம்! ஆனால் நாங்க...? வயித்துப் பிரச்னையையே தீர்க்கமுடியாத எங்களுக்கு என்ன சுகமிருக்கு...? என்ன சந்தோசமிருக்கு...? சொல்லுங்கம்மா...?

"காலையிலிருந்து மாடா வேலை செய்ரோம்! களைச்சுப் போய் வீட்டுக்கு வர புருஷனுக்கு வீட்டிலே என்ன சந்தோசம், நிம்மதி இருக்குது...? என்னையே அவருக்கிட்ட தருவதைவிட வேறு என்னம்மா எங்கிட்டே இருக்கு...?

"அவர் விரும்புறபோது திட்டம், கட்டுப்பாடு அது இதுன்னு நான் பேசிக்கிட்டு இருந்தா அவரு பாட்டிலே தனக்குச் சுகம் கிடைக்கிற வேறு இடத்தைத் தேடிப் போவாரு... அதனாலே வரும் கஷ்டமோ நஷ்டமோ எனக்குத் தானேம்மா...! அவரு குடிச்சாலும் வேற எந்தப் பழக்கமும் அவருகிட்டே இல்லே! அதுவே போதும் எனக்கு! என் பிள்ளைகளை எப்படியாவது வளர்த்து விட்டுட்டா அது அது எப்படியோ பிழைச்சிட்டு போகுதுங்க... கடவுள் விட்ட வழியாகட்டும்..."

நான் பொறி கலங்கிப்போய் அசைவற்றிருந்தேன்.

குடும்பத் திட்டம் பற்றி எத்தனையோ படித்த பெண்களிடமெல்லாம் பேசியிருக்கிறேன். ஆனால் இந்தப் படிக்காத பட்டிக்காட்டுப் பெண்ணின் பேச்சில் புதைந்து கிடந்த வாதத்திறமையை நான் இதுவரை எங்குமே கண்டதில்லை கேட்டதில்லை.

எத்தனை ஆழமாக அனுபவ பூர்வமாக அவளால் சிந்திக்க முடிகிறது. அவளுக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்?
நான் மௌனமாக எழுந்து நின்றேன், என் கைகள் தானாகவே குவிந்து அவளுக்கு வணக்கம் செலுத்தின.

அடுக்கடுக்காக பரிசு இப்பொழுது அனைத்துலகப் பரிசு

சிங்கப்பூர் தமிழர் திருநாள் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு, தமிழ் இளைஞர் மணி மன்றம் நடத்திய போட்டிகளில் கட்டுரைக்கு முதல் பரிசு, குறுங்காவியத்திற்கு இரண்டாம் பரிசு, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசான தங்கப் பதக்கம், நேசன் பவுன் பரிசுத் திட்டம் துவங்கிய முதல் மாதத்திலேயே சிறுகதைக்குப் பவுன் பரிசு, கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசான தங்கப் பதக்கம். 1975ல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய குறுங் காவியப் போட்டியில் முதற் பரிசு...

இப்படித் தமது இலக்கிய முயற்சிகளுக்காகப் பரிசுக்குமேல் பரிசுகளைப் பெற்றுவரும் பினுங்கைச் சேர்ந்த கவிஞர் சி. அன்பானந்தம் தாம் பெற்ற பரிசுகளுக்கெல்லாம் சிகரமாக மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ்பாடி முதற் பரிசான ரூபாய் 2,000 பெற்றுள்ளார். மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ்ப் போட்டி அனைத்துலக ரீதியில் தமிழ் நாட்டில் அண்மையில் நடத்தப்பட்டதாகும்.

தமது மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழுக்கு முதற் பரிசு கிட்டியிருக்கிறது என்ற தகவல் கிடைத்தவுடனேயே தாம் அடைந்த மகிழ்ச்சியை விவரிக்க இயலாது என்று கூறும் அன்பானந்தம், இப்போது பினுங்கு ஸ்ரீ மகா மாரியம்மன் மீது பிள்ளைத் தமிழ் இயற்றி வருகிறார்.

நந்தா விளக்கு, கனிமொழி ஆகிய குறுங் காவியங்களையும் "கண்ணதாசனின் காவியக் கனிகள்" என்னும் தொடர் கட்டுரையையும் மற்றும் பல கவிதை நாடகங்களையும் எழுதியுள்ள அன்பானந்தம் ஆனைமுகன் அந்தாதி, ஆறுமுகன் அந்தாதி, முருகன் திருப்பெயர்ப் புகழ்ப் பாமாலை முதலிய நூல்களை இலவசமாக வெளியிட்டு— வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.



மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் குறுங்காவியப் போட்டியின் முதல் பரிசினை கவிஞர் சி. அன்பானந்தன், வழக்கறிஞர் ஜெகதேவன் நட்சத்திரத்திடமிருந்து பெற்றுக்கொள்கிறார்.

அடுத்த இதழில்...

முத்துவைக் கேள்விகள்

பகுதி இடம் பெறுகிறது.

உங்கள் கேள்விகளைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

ஆசிரியர்,
"புதிய சமுதாயம்"
27A, ஜாலான் தம்பாப்பிள்ளை,
கோலாலம்பூர் 09-05.

சினிமா கேள்வி - பதில் பகுதியும் தனியே இடம்பெறுவதால், அதற்கும் உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்கலாம்.

மலைநாடு கண்ட தமிழ் முனிவர்



தோற்றம்: 1903 மறைவு: 16-3-1974

"தமிழ் எங்கள் உயிரென்பதாலே - வெல்லும் தரமுண்டு தமிழர்க்கு இப்புவிமேலே"

தமிழகத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுப்பிய இத்தமிழ் முழக்கத்திற்கு நடைமுறை ரீதியில் முழுப் பலனையும் காண்கிற மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்றை மலைநாட்டில் தொடங்கி வெற்றியும் கண்டவர் தமிழவேள் சாரங்கபாணி ஆவார்.

தமிழவேளை நினைக்கும்போது "தமிழ் எங்கள் உயிர்" நிதியைத் தொடங்கி மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு ஒரு பகுதியைக் காண்பதில் அப்பெருந்தகை அடைந்த வெற்றியை நாம் மறக்க இயலாது.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு முதன்மையான இடமும் ஒரு தனித் துறையும் கிடைப்பதற்குத் தமிழவேள் அவர்களும் "தமிழ் முரசு" நாளிதழும் ஆற்றியிருக்கும் அபாரத அரும்பணியைத் தமிழர் சமுதாயம் எப்போதும் நன்றியோடு நினைவுகூரும்.

சென்னையிலிருந்து இங்கு வந்த நீலகண்ட சாஸ்திரியார் பல்கலைக் கழகத்தில் அமைக்க இருக்கும் இந்தியப் பகுதியில் வடமொழிக்கே முதன்மை அளிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தார். மலாயாப் பல்கலைக் கழக அமைப்புக்கு வித்திட்ட "கார்-சாண்டர்ஸ்" அறிக்கை இந்தியப் பகுதியில் தமிழுக்கே முதன்மை அளிக்கவேண்டுமென்று திட்டவட்டமாகச் சிபாரிசு செய்திருந்தது.

இந்நிலையில் நீலகண்ட சாஸ்திரியாரின் மாறுபட்ட சிபாரிசு இங்குள்ள இந்திய சமுதாயத்தில் ஆத்திரத்தை உண்டாக்கியதில் வியப்பில்லை. ஆங்காங்கு சமூகத்தில் நீலகண்ட சாஸ்திரியாரின் வடமொழி ஆதிக்க சிபாரிசுக்கு எதிர்ப்புக் கணைகள் ஆவேசமாக எழுந்தன. தமிழவேளும், தமிழ் முரசு பத்திரிகையும் இந்த எதிர்ப்பு இயக்கத்திற்குத் தளபதிகளாக வழிகாட்டினர். அதன் பலனாக நீலகண்ட சாஸ்திரியாரின் "கோணல்" சிபாரிசு தவிடுபொடியாக்கப்பட்டது.

பல்கலைக் கழகத்தின் மூலத் திட்டப்படி தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் முதன்மை தருகிற விதத்தில் இந்தியப் பகுதி அமைந்தது.

பல்கலைக் கழக இந்தியப் பகுதியின் வரலாற்றில், நீலகண்ட சாஸ்திரியாரின் திசை திருப்பும் சிபாரிசை முறியடித்தது, முதல் வெற்றியாகும். அதன் பின்னரும் பல்கலைக் கழக இந்தியப் பகுதி நிலைப்பதற்கும் செழிப்பதற்கும் தொடர்ந்து அவர் பணியாற்றத் தவறவில்லை. பல்கலைக் கழக இந்தியப் பகுதிக்குத் தேவைப்படுகிற தமிழ் நூல்களையும் பிற நூல்களையும் திரட்டுவதற்குப் பெரும் பணம் தேவைப்பட்டது. பல்கலைக் கழக நிர்வாகம் இதற்கு இந்திய சமூகத்தின் உதவியை எதிர்நோக்கியது. அந்த உதவியை நிறைவேற்றுகின்ற ஓர் இயக்கமாகவே "தமிழ் எங்கள் உயிர்" நிதியைத் தமிழவேள் தமது பத்திரிகை வாயிலாகத் தொடங்கினார்.

ஆளுக்கொரு வெள்ளி வழங்கும்படி தமிழவேள் விடுத்த அந்த அறைகூவலுக்குச் சமுதாயத்தில் மகத்தான ஆதரவு கிடைத்தது. ஏறத்தாழ நாற்பது ஆயிரம் வெள்ளிக்குமேல் ஒரு சில மாதங்களில் "தமிழ் எங்கள் உயிர்" நிதி மூலம் திரட்ட முடிந்தது.

பல்கலைக் கழகத்தில் இந்தியப் பகுதிக்குத் துணையாக நல்ல நூல் நிலையம் அமைவதற்கு இந்த இயக்கம் தக்க சமயத்தில் கைகொடுத்தது. இந்தியப் பகுதியின் வரலாற்றில் தமிழவேள் வாயிலாகச் சமுதாயம் தேடிக்கொண்ட இரண்டாவது வெற்றி என்று இதனைக் குறிப்பிடலாம். அதன் பின்னரும் பல்கலைக் கழக இந்தியப் பகுதியின் குறைவற்ற வாழ்வில் தமிழவேள் அவர்கள் ஈடுபாடு காட்ட மறக்கவில்லை. இந்தியப் பகுதி அமைந்தபோதிலும் தமிழ் மொழியைப் படித்துப் பட்டம் பெறுவதற்கு மாணவர்கள் போதிய அளவுக்கு முன்வரவில்லை. ஒவ்வோர் ஆண்டும் பல்கலைக் கழகத்திற்குப் பயில வருகிற ஆயிரக்கணக்கான மாணவர்களில் ஓரிரு

'தமிழவேள்' கோ. சாரங்கபாணி அவர்கள் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

வரைக்கூட இந்தியப் பகுதிக்கு இழுப்பது பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது. மிகவும் சிபாரிசு செய்து எடுத்துக்கூறி மாணவர்களை இந்தியப் பகுதிப் பாடத்தை எடுக்கும்படி தூண்ட வேண்டியிருந்தது.

இந்நிலையில் தமிழவேள் உபகாரச் சம்பள அமைப்பு ஒன்றைத் தம்முடைய அணுக்கமான கூட்டாளிகளுடன் தோற்றுவித்து இந்தியப் பகுதியில் சேருகிற மாணவர்களுக்கு முழு உபகாரச் சம்பளம் கிடைக்கச் செய்து மாணவர்களிடையே இந்தியப் பகுதியின்மீது ஒரு கவர்ச்சி உண்டாவதற்கும் வழிவகை செய்தார்.

இந்தியப் பகுதி ஆரம்பித்த முதல் சில ஆண்டுகளுக்கு இந்த உபகாரச் சம்பளத்தின் மூலமே மாணவர்களைத் திரட்ட முடிந்தது என்பதையும் குறிப்பிடவேண்டும். இந்தியப் பகுதி நிலைபெறுவதற்குத் தமிழவேள் ஆற்றிய தொண்டுகளில் இதனையும் ஒரு முக்கிய கட்டமாகவும், சமுதாயத்திற்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகவும் கொள்ளவேண்டும்.

மலேசிய நாட்டுக்கு வருகை புரிந்த தவத்திரு. குன்றக்குடி அடிகளார் "தமிழவேள்" என்னும் சிறப்புப்பட்டத்தைப் பெருந்தகை சாரங்கபாணி அவர்களுக்கு வழங்கினார். தமிழகத்தில் தமிழவேள் என்னும் உயரிய சிறப்பைப் பெற்றவர்கள் எனக்குத் தெரிந்தவரை இருவரே ஆவர். ஒருவர் கரந்தையில் தமிழ்ச் சங்கம் நிறுவிய தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையாவார். மற்றொருவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் புரவலராகத் திகழ்ந்த தமிழவேள் பி. டி. ராஜன் ஆவார். இந்தத் தமிழ்ப் பெரியார் இருவரும் தமிழகத்தில் தமிழ்மொழிக்குக் கண் போலத் திகழ்ந்தவர்கள்; தமிழைத் தங்கள் கண்போலக் காத்தவர்கள். அவர்களின் உள்ளம் அப்பழுக்கற்ற தமிழ் உள்ளம். அவர்களின் தமிழ் உணர்ச்சியில் எவ்விதமான ஐயப்பாட்டுக்கும் இடம் இருந்ததில்லை.

அதுபோலவே தமிழவேள் என்னும் அந்த உயரிய சிறப்பை நமது மலைநாட்டில் பெற்றிருந்த பெருமகனார் சாரங்கபாணியும் நம்மிடையே தமிழுக்குக் கண்ணாக விளங்கியவர்; கண்ணைப் போல் தமிழைக் காத்தவர். அன்னாரின் உள்ளத்திலும் தமிழ் நீக்கமற நிறைந்திருந்தது. தமிழின் புரவலராக வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த பெருமை தமிழவேள் சாரங்கபாணிக்கு உண்டு.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு நிலையான இடத்தைப் பெற்றுத்தந்தது, தமிழவேள் ஆற்றிய தமிழ்ப் பணிகளுக்குச் சிகரம் போல் அமைந்தது என்று கூறலாம்.

இன்று பல்கலைக் கழக இந்தியப் பகுதி, இந்திய சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்ந்து வருவது வெளிப்படை. இந்தியப் பகுதியில் இதுகாறும் படித்துப் பட்டம் பெற்று நாட்டின் பல்வேறு துறைகளிலும் பிரகாசிக்கின்ற நல்லவர்கள், தங்களுக்கும் சமுதாயத்திற்கும் தாய்மொழிக்கும் இந்தியப் பகுதி அமைப்பு மூலம் கிட்டிய ஒரு புதிய அத்தியாயத்தையும், அந்த அத்தியாயத்திற்கு அடிநாள் முதல் உறுதுணையாக நின்ற பெருமகன் தமிழவேளையும் என்றும் நன்றியோடு நினைவிற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அண்மையில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மலேசிய இந்தியர் காங்கிரசின் சார்பில் நின்று வாகை சூடிய திருவாளர்கள் கே. பத்மநாபனும், எஸ். சுப்பிரமணியமும் மலாயாப் பல்கலைக் கழக இந்தியப் பகுதியில் பட்டம் பெற்றவர்கள் என்பது பூரிப்பளிக்கிற நிலையாகும். (இப்பொழுது திரு. சுப்பிரமணியம் துணை அமைச்சராகவும், திரு. பத்மநாபன் நாடாளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது)

இவர்களைப் போலவே இந்தியப் பகுதியில் பட்டம் பெற்ற மற்றவர்கள் ஆங்காங்குச் சிறப்பும் பொறுப்பும் வாய்ந்த பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் தமிழவேளின் நினைவு இந்தியப் பகுதியோடு என்றும் இணைந்திருக்கின்ற வகையில் தக்க திட்டமொன்றை வகுப்பது பற்றிச் சிந்திப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

இந்தியப் பகுதியோடு தமிழவேள் பெயரும் இணைந்து விளங்குவதற்கு அவர்களின் திட்டம் துணை புரிவதாக இருக்கவேண்டும்.

பெருமகன் தமிழவேள் ஆற்றிய சமுதாயப் பணிகளில் "தமிழர் திருநாள்" கொண்டாட்டம் குறிப்பிடத்தக்க சாதனையாகும். தமிழர்களை நெல்லிக்காய் மூட்டைக்கு ஒப்பிடுவது உண்டு. சேர்ந்து நிற்காமல் சிதறி ஓடுவதிலும் தங்களுக்குள்ளே எதிரும் புதிருமாக நின்று சண்டு பிடித்துக்கொள்வதிலும், தமிழர்கள் பெயர் பெற்றவர்கள். மூவேந்தர் கொடிகட்டிக் கோலோச்சிய அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை பாரம்பரியச் சொத்தாகத் தமிழ்ச் சமுதாயத்தோடு ஒட்டி வளர்ந்து வருகிற இந்த அரிய "சிறப்பு" அவர்களை விட்டு இன்னும் நீங்கியபாடில்லை.

தமிழவேள் கண்ட தமிழர் திருநாள் தமிழ்ச் சமுதாயத்தைக் காலங்காலமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கும் இந்தத் தீராத நோயை தீர்க்கின்ற ஒரு சோதனை முயற்சி என்றே கருதப்படவேண்டும். சாதியாலும், சமயத்தாலும், அரசியலாலும், மற்றும் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளாலும் பிளவுற்றுக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தை நெறிப்படுத்தி நிலைப்படுத்தி நாட்டில் ஒரு சிறப்பான இடத்தை அதற்குப் பெற்றுத் தருவதற்குத் தமிழவேள் தமிழர் திருநாளை ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

தமிழர் திருநாள் சமுதாயத்தின் ஒற்றுமைத் திருநாளாக, மேம்பாட்டுத் திருநாளாக, கலை இலக்கியத் திருநாளாக நாடெங்கும் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. குறிப்பாகச் சிங்கப்பூரில் தமிழர் திருநாள் சமுதாயத்தின் பெரு விழாவாகப் பழங்காலத்தில் பூம்புகார் கண்ட இந்திர விழாவைப் போன்று பூரிப்புத் தருவதாக ஒவ்வோர் ஆண்டும் அமைந்திருந்ததை இப்போது எண்ணிப் பார்த்தாலும் புல்லரிப்பு ஏற்படுகிறது. சிங்கப்பூர் இன்ப உலக அரங்கம் [ஹாப்பி வோர்ல்ட்] தமிழர் திருநாள் கொண்டாட்டத்தின்போது வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தைத் தன்னகத்தே கொண்டு இன்பத் தமிழ் உலகமாகவே காட்சி அளிக்கும்.

தமிழகத்திலிருந்து ஆண்டுதோறும் புதிய புதிய பேராசிரியர்கள் தமிழர் திருநாளுக்கென்று வருவார்கள். அவர்கள் நாடெங்கும் தமிழர் திருநாள் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவுகள் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் நமது மக்கள் மனத்தில் கொள்வதற்கு நன்கு துணை புரிந்தன. அது மட்டுமன்றி இங்குத் தமிழ்ப்பயிர் தழைப்பதற்கும், தமிழ் இலக்கியம் மலர்வதற்கும் பேராசிரியர்களின் உரைகள் பெரிதும் பயன்பட்டன. தமிழர் திருநாள் கொண்டாட்டத்தின்போது நடைபெற்ற குழந்தைக் காட்சி, ஓவியப் போட்டி, கதை, கட்டுரை, கவிதை, பேச்சு, பாடல், ஆடல் போட்டிகள் மற்றும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் ஆகிய அனைத்தும் சமுதாயத்தில் இளைஞர்களிடையே பல்வேறு ஆற்றல்களையும் வளர்க்கப் பெரும் துணை புரிந்திருக்கின்றன.

இன்று பெரிதாகப் பேசப்படுகிற பொருளாதார முன்னேற்றம் அந்தக் காலத்திலேயே தமிழர் திருநாள் மேடைகளில் மிக அழுத்தமாக வலியுறுத்தப்பட்டு வந்ததையும் இங்குக் குறிப்பிடவேண்டும். தமிழர் திருநாள் பதினைந்து பதினாறு ஆண்டுகள் சமுதாய இயக்கமாக ஒற்றுமை, உயர்வு ஆகிய இருபெரும் குறிக்கோள்களோடு நாடெங்கும் பரவி நின்றது. அதன் பயனாகச் சமுதாயத்தில் எல்லாத் துறைகளிலும் மாற்றமும் ஏற்றமும் ஏற்படுவதையும் கண்ணால் காணமுடிகிறது.

பெருமகன் தமிழவேள் வரலாற்றில் தமிழர் திருநாள் மூலம் தமிழர்களின் பேதங்களுக்கும் பிளவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க அவர் மேற்கொண்ட சோதனை முயற்சி ஒரு முக்கிய அத்தியாயமாகும்.

தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதில் தமிழர் திருநாள் இயக்கம் மனநிறைவு அளிக்கத்தக்க முழு வெற்றி கண்டதாகச் சொல்லமுடியாவிட்டாலும் பல்வேறு துறைகளிலும் சமுதாயம் மலர்ச்சி காண்பதற்கு அத்திருநாள் ஆற்றியிருக்கும் பெரும் பங்கை மறுப்பதற்கில்லை. தமிழர் திருநாள் மூலம் உருவான கலைஞர்கள், கவிஞர்கள், விளையாட்டு வீரர்கள், பேச்சாளர், எழுத்தாளர் ஏராளம் என்பதும் உண்மையாகும்.

முருகு சுப்பிரமணியன்

இந்தியாவில் பிறந்த தமிழர், மலேசியாவில் பிறந்த தமிழர், இலங்கையில் பிறந்த தமிழர் என்பது போன்ற பிறப்பு வேறுபாடுகளையும் களைந்து தமிழர்கள் ஓர் அணியாகத் திரளுவதற்குத் தமிழர் திருநாள் மேடைகள் வாய்ப்பளித்தன. உத்தியோகம் பார்க்கும் தமிழரும், வர்த்தகம் செய்யும் தமிழரும், தோட்டத்தில் பால்வெட்டும் தமிழரும் ஒரே மேடையில் கூடி நிற்பதற்கு இடமளித்தது தமிழர் திருநாளாகும்.

உருவான எல்லா முயற்சிகளுக்கும் இடையூறு சேர்வதுபோல தமிழர் திருநாளுக்கும் "துறுக்குச்சால்" ஓட்டியவர்கள் முனைந்ததில் வியப்பில்லை சிங்கப்பூரில் ஒரு பத்திரிகை தமிழர் திருநாளுக்குக் கடுமையான எதிர்ப்பை மத அடிப்படையில் கிளப்பிவிட்டது. அந்த மற்றோர் அமைப்பு தமிழர் திருநாளுக்குப் போட்டியாகப் பொங்கல் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தது. மலைநாட்டிலும் தமிழர் திருநாளுக்குப் போட்டியாகப் பொங்கல் விழாவை நிலைநிறுத்தக் கடுமையான முயற்சிகள் நடைபெற்றன.

ஆனால், தமிழவேள் எதிர்ப்பிலே வளர்ந்தவர். ஏச்சுகளையும் பேச்சுகளையும் வாங்கிக் கட்டிக்கொண்டு தாம் எடுத்த காரியத்தில் "முரட்டுப்" பிடிவாதமாக நிற்கின்ற சுபாவம் அவருக்கு இயல்பாக உண்டு.

கொள்கைப் பிடிப்பிலும் மன உறுதியிலும் சீர்திருத்தச் செம்மல் பெரியார் ஈ.வெ. ரா.வுக்கு நிகராகப் பெருமகன் தமிழவேளைக் குறிப்பிடமுடியும். எதிர்ப்புகளுக்கு அவர் என்றும் அஞ்சியதில்லை. கல்லடிக்கும் சொல்லடிக்கும் அவர் கலங்கியதில்லை. உண்மையில் எதிர்ப்பு தூமுறி எழும்போதுதான் அவருடைய சிந்தனை, செயல், எழுத்து யாவும் வேகமும் கூர்மையும் கொள்ளும். தமிழர் திருநாளுக்கு நேர்ந்த எதிர்ப்புகளும் தமிழவேளிடம் பலித்திட்ட மன உறுதி காரணமாகத் தகர்ந்துபோனதையே காணமுடிந்தது.

தமிழர் திருநாள் கொண்டாட்டங்களில் மலைநாட்டு இந்தியர்கள் மலைநாட்டுக் குடிமக்களாகி மலைநாட்டிலேயே வேர் கொள்ளவேண்டுமென்பதும் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டதையும் இப்பொழுது நினைவுகூர்வது நன்று. தமிழ்ச் சமுதாயத்தில் ஒற்றுமை, முன்னேற்றம், பொது உணர்வு ஆகிய குறிக்கோள்களை அழுத்தமாக எடுத்துச்சொல்லவேண்டிய கட்டாயமும் தேவையும் இன்றும் இருந்துகொண்டிருப்பதை மறுப்பதற்கில்லை.

இக்கொண்டாட்டங்கள் முன்போல அத்துணை விரிவாகவும் ஆர்வத்தோடும் இப்போது நடைபெறவில்லை என்றபோதிலும் சமுதாயத்தை ஒரே அணியில் இணைக்கின்ற தமிழவேளின் இந்த உயரிய குறிக்கோள் நீடித்து வெற்றி காண்பதற்குச் சமுதாயம் தக்க மார்க்கத்தைக் காண்பது நன்மையாகும். தமிழர் திருநாளைக் கண்டதன் மூலம் தமிழ் மொழிக்கு மட்டுமன்றித் தமிழ்ச் சமுதாயத்திற்கும் காவலராகத் தமிழவேள் ஏற்றம் பெற்றார்.

* * *

இன்று நாடெங்கும் பரவிப் படர்ந்து சமுதாயத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சிறிய இளைஞர் இயக்கமாகத் திகழ்ந்துவரும் தமிழ் இளைஞர் மணிமன்றங்களுக்கு வித்திட்டவர்-மூலகாரணராய் விளங்கியவர்-பெருமகன் தமிழவேள் என்பது தெரிந்த செய்தி.

தமிழ் முரசு ஏட்டில் வாரந்தோறும் வெளிவந்த மாணவர் மணிமன்ற இதழ் தமிழ் இளைஞர்களிடையே தமிழ்ப் பயிற்சியும் எழுத்தாற்றலும் வளருவதற்கு அடிகோலியதோடு அழுத்தமான சமுதாய உணர்வையும் அவர்களிடையே தோற்றுவித்தது.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பு மாணவர் மணிமன்ற வாசகர்களும் எழுத்தாளர்களும் பினாங்கு மாநகரத்தில் தோற்றுவித்த அமைப்பே தமிழ் இளைஞர் மணிமன்றமாகும். மாணவர் மணிமன்ற இதழும், ஆசிரியர் தமிழவேளும் பினாங்கிலும் அதன்பிறகு பல்வேறு நகரங்களிலும் தோற்றுவிக்கப்பட்ட மணிமன்றங்களுக்கு தோன்றாத் துணையாக நின்று நம்பிக்கையை வழங்கி நல்ல வழியைக் காட்டி வந்திருக்கின்றனர்.

தமிழ் இளைஞர் மணிமன்றங்கள் சமுதாயத்தின் முக்கிய அங்கமாக நிலைபெறுவதற்கு மணிமன்றங்களின் தந்தை என்றும் முறையில் தமிழவேள் அம்மன்றங்களுக்கு நல்கி வந்திருக்கும் பேராதரவு குறிப்பிடத்தக்கதாகும்.

மணிமன்றங்களில் இன்று குறிப்பிடத்தக்க பெரும் தலைவர்களாக விளங்கி வருகிற நண்பர்கள், மாணவர் மணிமன்ற இதழ் சீராட்டிப் பாராட்டித் தமிழ்ப் பாலூட்டி வளர்த்த தமிழ்ச் செல்வங்கள் என்பதை நினைவுகூர்வது பொருத்தமாகும். மணிமன்றங்களின் குறிக்கோளும் செயல் திட்டமும் அன்று முதல் இன்றுவரை பெருமகன் தமிழவேளின் தமிழ் உணர்வையும், சமுதாய உணர்வையும் முழுமையாகப் பிரதிபலித்து நிற்பதும் வெளிப்படை.

மணிமன்றங்களில் அங்கம் வகிக்கும் ஆயிரக்கணக்கான துடிப்புமிக்க தமிழ் உள்ளங்கள் தமிழவேள் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்த தமிழ் நெறிக்கும் அரணாகத் திகழ்ந்துவருவது சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டுகிற சிறந்த சின்னமாகும்.



இலங்கையர் காங்கிரசின் வாழ்த்து

"புதிய சமுதாயம்" என்னும் இவ்விதழ் புதியதொரு சிந்தனையின் உருவகமாகும். இதன் ஆசிரியர் அனைவருக்கும் நன்கு அறிமுகமான பிரமுகராவார். அத்துடன் நெடுங்கால அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளருங்கூட. இப்பொழுது அவருக்குத் தம் கருத்துக்களையும், மக்களின் எண்ணங்களையும் தம் எண்ணப்படி வெளியிட வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இது சவால் மிகுந்த பணியெனினும் பயனுள்ள முயற்சியாகும். மக்களுடன் தொடர்புகொள்ளவும், தம் கருத்துக்களையும் மற்றவர்களின் எண்ணங்களையும் வெளியிடவும் ஒருவருக்கு இது வாய்ப்பை வழங்குகிறது.

தொடக்கத்தில் இது சில சங்கடங்களை எதிர்நோக்கக்கூடும் என்பது உண்மையே. ஆனால், சமுதாயத்தின் நாடியையும், கால ஓட்டத்தில் விரைந்து மாறுகிற சூழ்நிலைகளையும் நன்கு உணர்ந்த ஒருவரின் பேறு வழி அமைவதால், இத்தகைய ஒரு பத்திரிகையின் வரவு நல்ல அறிகுறியாகும்.

முதல் நோக்கிலேயே பார்க்கவேண்டும், படிக்கவேண்டும் என்னும் எண்ணத்தை உங்களுக்கு உண்டாக்கக்கூடியதாக இந்த இதழ் அமையவேண்டும் என்பது எனது நம்பிக்கையும், பிரார்த்தனையுமாகும். இது நிறைவேறக் கடின உழைப்பும், எல்லையற்ற ஆர்வமும் தேவை. இவை ஆசிரியரிடம் நிறைந்துள்ளன.

ஆகவே, அவருக்கு நற்பேறும், இறை அருளும் கிட்ட வாழ்த்துகிறேன்.

செனட்டர் டத்தோ
டாக்டர் சி. சின்னத்துரை
தலைவர்,
மலேசிய இலங்கையர் காங்கிரஸ்

மணிமன்றப் பேரவை தமிழவேள் நினைவாகத் தொடங்கி இருக்கின்ற கல்வி நிதி, மக்களின் வலுவான ஆதரவோடு கணிசமான அளவுக்குப் பெருகும் என்று நம்புகிறேன். அந்தக் கல்வி நிதியிலிருந்து பேரவை நாடெங்கும் பெருவாரியான மாணவர்களுக்கு உதவிச் சம்பளங்களை வழங்குகிற வாய்ப்பும் உருவாகும் என்று எதிர்பார்க்கிறேன். தமிழ்ச்சமுதாயம் கல்வித் துறையில் மேம்படுவதற்கு இந்தக் கல்வி நிதியும் முக்கிய ஆதாரமாக அமைகின்ற விதத்தில் பேரவை இந்த நிதியைத் திரட்டுவதில் பெரும் கவனம் செலுத்தவேண்டும் என்பது எனது விருப்பமாகும். குறைந்தது ஒரு லட்சம் வெள்ளியாவது இந்த நிதிக்கு மூலதனமாகத் திரட்டப்பட்டால்தான் பேரவை எதிர்பார்க்கின்ற பரவலான பலனை அது பெறமுடியும்.

பெருமகன் தமிழவேள் ஒரு பத்திரிகை ஆசிரியராக மட்டுமன்றி, சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்ற ஒப்பற்ற தலைவராகவும் தம் வாழ்நாளில் திகழ்ந்துவந்தார். நாடெங்கும் சமுதாயத்திற்கு பயனளிக்கக்கூடியவகையில் தமிழர் திருநாளைத் தோற்றுவித்ததும், தமிழ் இளைஞர் மணிமன்றம் போன்ற அமைப்புகளுக்குத் தக்க வழிமுறைகளை வகுத்துத் தந்ததும், மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு இந்தியப்பகுதி மூலம் நிலையான இடத்தைப் பெற்றுத் தந்ததும், சமுதாயத்திற்கு அவர் பெரும் தலைவராக விளங்கியதற்குத் தெளிவான அடையாளங்களாகும்.

இவை தவிர, சிங்கப்பூரில் இந்திய சமூகத்திற்கு எல்லா வகையாலும் உயர்வும் ஒளியும் ஊட்டுகின்ற தலைமைத்துவப் பணியையும் தமிழவேள் அயராமல் செய்துவந்தார். சமுதாயத்தின் சக்தி, வீண் பிளவுகளாலும் சண்டை சச்சரவுகளாலும் விரயமாகிவிடக்கூடாது என்பதில் தமிழவேளுக்கு மிகுந்த அக்கறையுண்டு. தமிழர் திருநாள் கொண்டாட்டம் அதன் பிரதிபலிப்பே ஆகும். அதுபோலவே சிங்கப்பூரில் தமிழவேள் கண்ட தமிழர் பிரதிநிதித்துவ சபையும் இந்தக் குறிக்கோளின் பிரதிபலிப்பே ஆகும். சிங்கப்பூரில் உள்ள சமுதாய அமைப்புகளை எல்லாம் பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒருங்கிணைத்து, சமுதாயத்தின் சக்திசாதனங்கள் அனைத்தும் ஒருமுகமாகச் செயல்படுவதற்குத் தமிழர் பிரதிநிதித்துவ சபை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்துவந்தது. சிங்கப்பூரில் சமுதாயத்தைப் பிரதிநிதிக்கின்ற வலுவுள்ள அமைப்பாக அது பல ஆண்டு காலம் விளங்கி வந்தது.

இந்தப் பிரதிநிதித்துவ சபையின் வலிமைக்கும், வளர்ச்சிக்கும் தமிழ்முரசு நாளிதழும் பெருமகன் தமிழவேளும் ஆற்றியிருக்கிற பணிகள் அளவிலடங்கா. சிங்கப்பூரில் ஆண்டுதோறும் தமிழர் திருநாளை மிகப்பரந்த அளவில் கொண்டாடுவதற்கும் தமிழர் பிரதிநிதித்துவ சபையே பொறுப்பு வகித்தது.

சிங்கப்பூர் அரசாங்கம் தமிழ் மொழிக்கு வழங்கி இருக்கும் ஆட்சி மொழி அந்தஸ்துக்குத் தமிழர் பிரதிநிதித்துவ சபையின் கட்டுக்கோப்பும் சமுதாயத் தலைமைத்துவமும் முக்கிய காரணங்கள் என்பதையும் கட்டாயம் குறிப்பிட வேண்டும். அதுமட்டுமின்றி, சிங்கப்பூரில் வாழும் இந்திய சமுதாயத்தினர் சிங்கப்பூர் குடிமக்களாக ஆவதற்கும் தமிழர் பிரதிநிதித்துவ சபை குறிப்பிடத்தக்க பெரும்பணி ஆற்றி இருக்கிறது.

தமிழர் பிரதிநிதித்துவ சபைக்கு மட்டுமன்றி தமிழர் சீர்திருத்தச் சங்கம், தமிழ்க் கல்விக் கழகம் ஆகிய அமைப்புகளுக்கும் தமிழவேளின் சீரிய தலைமைத்துவம் கிட்டியிருந்தது. தமிழர் சீர்திருத்தச் சங்கம் மிகப் பழமையான அமைப்பாகும். தனக்கென சொந்தக் கட்டடத்தைப் பெற்றுள்ள அந்தச் சங்கம் தமிழவேளின் அரவணைப்பினால் அரிய பெரிய சாதனைகளைப் புரிந்து மகத்தான வளர்ச்சியைக் கண்டு இன்றும் சிறப்பாக நடந்து வருகிறது.

தமிழ்க் கல்விக் கழகம் சிங்கப்பூரில் நடைபெற்று வருகிற தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் இணைக்கின்ற கூட்டு அமைப்பாகத் திறம்பட இயங்கி வந்தது. இந்த அமைப்பு மூலம் சிங்கப்பூரிலுள்ள தமிழ்ப் பள்ளிகள் பெற்றிருக்கிற நன்மைகள் கணக்கிலடங்கா. குறிப்பாகத் தமிழ்க் கல்விக்கும், தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கும், கல்விக் கழகம், தமிழர் சீர்திருத்தச் சங்கம், தமிழர் பிரதிநிதித்துவ சபை போன்ற அமைப்புகளின் மூலம் தமிழவேள் ஆற்றியிருக்கிற பயன்மிக்க தொண்டுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்று, இன்று தமிழ் உயர்நிலைப் பள்ளியாக விளங்குகிற உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியாகும்; மற்றொன்று கலைமகள் தொழிற் பள்ளியாகும். இந்த இரண்டு பள்ளிகளுக்கும் உண்டியல் மூலம் நிதி திரட்டுகின்ற முயற்சியில் இந்த அமைப்புகளின் தொண்டர்கள் ஆயிரக் கணக்கில் ஈடுபட்ட பிரமிப்பூட்டும் காட்சியை இன்று நினைத்தாலும் புல்லரிக்கிறது.

உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட நிதி திரட்டுவதற்காக உண்டியல் ஏந்துவதென்று தீர்மானித்து, ஆயிரம் தொண்டர்களை ஒரே நாளில் சிங்கப்பூர் முழுவதும் பெரும்படை போல அனுப்பி வைத்தோம். ஆயிரம் தொண்டர்களைச் சிங்கப்பூரிலுள்ள சமூக அமைப்புகளும் பள்ளிக் கூடங்களும் கொடுத்து உதவின. எதிர்பார்த்தபடி இந்தத் தொண்டர்கள் தாங்கள் ஏந்திச் சென்ற சுமார் 500 உண்டியல்கள் மூலம் ஏறத்தாழ இருபதாயிரம் வெள்ளியை ஒரே நாளில் உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளிக்காகத் திரட்ட முடிந்தது.

அதுபோலவே, கலைமகள் தொழிற்பள்ளிக்குக் கட்டடம் எழுப்புவதற்காக இரண்டாயிரம் தொண்டர்கள் வேண்டுமென்று தமிழ் முரசு மூலம் தமிழர் பிரதிநிதித்துவ சபை வேண்டுகோள் விடுத்தது. அந்த வேண்டுகோளுக்கிணங்கி உண்டியல் ஏந்துவதற்கு இரண்டாயிரம் தொண்டர்கள் திரண்டனர். அவர்கள் ஏந்திய ஏறத்தாழ ஆயிரம் உண்டியல் மூலம் சுமார் முப்பதாயிரம் வெள்ளியை ஒரே நாளில் அந்தப் பள்ளியின் கட்டட நிதிக்குச் சேர்க்க முடிந்தது.

இந்த இரண்டு உண்டியல் இயக்கங்களும் சிங்கப்பூரில் தமிழர் பிரதிநிதித்துவ சபைக்கும், தமிழவேளின் சமுதாயத் தலைமைத்துவத்திற்கும், அப்பெருமகனின் அறைகூவலுக்கும் அந்த நாளில் சிங்கப்பூரில் எந்த அளவுக்குப் பலம் இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் சான்றுகளாகும்.

சமுதாயத்தின் சக்தி சிதறாமல் செயல்படுமானால் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிய முடியும் என்பதற்கும் இந்த இரண்டு உண்டியல் இயக்கங்கள் இன்றும் நமக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன என்பதே எனது கருத்தாகும்.

இந்த உண்டியல் இயக்கங்கள் இரண்டுக்கும் முக்கியப் பொறுப்பு வகிக்கின்ற நற்பேறு எனக்குக் கிட்டியிருந்ததால் அந்த இயக்கங்களின் சாதனையை முழுமையாக என்னால் உணர முடிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் முரசு பத்திரிகையில் நான் துணை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தேன். பத்திரிகையில் துணையாசிரியர் பொறுப்பை வழங்கியதோடு தமது சமுதாயப் பணிகளிலும் தமக்குத் துணை புரிவதற்கு நல்ல வாய்ப்புகளைப் பெருமகன் தமிழவேள் எனக்கு வழங்கி வந்ததை இன்று நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

தமிழர் சீர்திருத்தசங்கத்தின் செயலாளராகத் தொடர்ந்து சில ஆண்டுகளுக்கு பணியாற்றுகின்ற வாய்ப்பும் தமிழர் பிரதிநிதித்துவ சபையின் சார்பில் அவ்வப்போது முக்கிய பொறுப்புக்களை வகிக்கின்ற நல்ல வாய்ப்பும் எனக்குக் கிடைத்தன. எனக்கு மட்டுமன்றித் தமிழ்முரசில் பணியாற்றிய பல்வேறு நண்பர்களுக்கும் பெருமகன் தமிழவேள் சமுதாயப் பணி புரியும் இத்தகைய சந்தர்ப்பங்களை வழங்கத் தவறியதில்லை. ஒரே சமயத்தில் தமிழ் முரசு ஆசிரியராகவும், சமுதாயத்தின் தலைவராகவும் அப்பெருமகன் செயல்பட்டது மாதிரி தம்மிடம் பணிபுரிந்த துணை ஆசிரியர்களையும் பத்திரிகை அலுவலோடு அதற்கப்பாலும் சமுதாயப்பணிகளிலும் ஈடுபடுத்திய பெருமை அவருக்கு உண்டு

அப்பெருமகன் ஊக்குவிப்பின் பலனாகவே என்னைப் போன்று தமிழ் முரசில் பணிபுரிந்த துணையாசிரியர்கள் பலரும் சமுதாயத் தொண்டுகளில் நாட்டம் கொள்வதற்கு வழி அமைந்தது. தமிழர் பிரதிநிதித்துவ சபை, தமிழர் சீர்திருத்தச் சங்கம், தமிழ்க் கல்விக்கழகம் முதலிய அமைப்புகளிலும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களிலும் முக்கிய பொறுப்புகளை தமிழ் முரசில் பணிபுரிந்த துணையாசிரியர்களே தமிழவேளுக்குத் துணையாக வகித்து வந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது.

தமிழ் முரசு இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின் கீழ் பத்திரிகைத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் அப்பெருமகனின் துணையோடு எல்லா நிலைகளிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்கின்ற பரந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு பிரச்னைகளையும் மனதில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பும் எனக்குப் பெரிதும் பயன்பட்டது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு நேருக்குநேர் பழகுவதற்கும், கலந்துரையாடுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும் இது எனக்கு வாய்ப்பை வழங்கியது.

பெருமகன் தமிழவேள் தமது தமிழ் முரசு பத்திரிகையைச் சமுதாயத்தின் குரலாகவே ஒலிக்கச் செய்து வந்தார் என்று சொல்வது மிகையாகாது. ஒரு பத்திரிகை ஆற்றவேண்டிய பல்வேறு பணிகளில் மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பணியும் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்ற சிறப்பான பணியைப் பெருமகன் தமிழவேள் மிக அற்புதமான முறையில் அவ்வப்போது செய்து வந்திருப்பதைச் சமுதாயம் ஒருபோதும் மறவாது.

தமிழவேளை நினைக்கும் பொழுது நமக்குத் தமிழகம் பெற்றெடுத்த பெரியார்கள் பலரின் மொத்த உருவமாக அவர் நம்மிடையே திகழ்ந்து வந்திருப்பதாகவே உணரமுடிகிறது.

தமிழ்த் தென்றல் திரு. வி. க., தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளை, தமிழவேள் பி. டி. ராஜன், சீர்திருத்தத் தந்தை ராமசாமி பெரியார், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., "தமிழ்நாடு" பத்திரிகையின் பழம்பெரும் ஆசிரியர் வரதராஜுலு நாயுடு, "முத்தமிழ்க் காவலர்" கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகிய தமிழ்ப் பெரியார்கள் பலரின் சிறப்புக் கூறுகளையெல்லாம் தன்னகத்தே கொண்ட தமிழ் முனிவராக நம்மிடையே அவர் திகழ்ந்து வந்தார்.

அப்பெரியார் தம் வாழ்வில் கடைப்பிடித்த சமுதாயப் பொதுஉணர்வும், தமிழ் உணர்வும் நமக்கு என்றும் வழிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. வருகின்ற தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும், நினைவுக் குறிப்பாகவும் விளங்குகின்ற முறையில் தமிழவேளின் வாழ்க்கை வரலாறு முறையாக நூல் வடிவில் தொகுக்கப்பட்டு விரைவில் வெளிவருவதும் இன்றியமையாதது.

[மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை 1973 - 74ல் வெளியிட்ட "தமிழ் ஒளி" தமிழவேள் மலரில் வெளியான கட்டுரை]



'சித்திரம் பேசுதடி' நாடகத்தில் நடிக்கும் பி. தியாகராஜன்

தமிழ் போல வாழ்க!

சி. அன்பானந்தம், பிறங்கு

பூமேவு திருமாது பொழிகின்ற செல்வம்,
புதுமாரி தரஆறு புகுந்தார்க்கும் வெள்ளம்,
காமேவு மிளந்தென்றல் கலந்தூட்டும் ஆர்வம்,
கனிச்சாறில் மலைத்தேனும் கரைந்தாக்கு மின்பம்.
நாமேவு கவின்சொல்லில் நனிதூறும் ஆக்கம்,
நறைமாலை யணிகந்தன் நயந்தேற்றும் ஊக்கம்.
பாமேவு சுவை-எல்லாம் பரிவோடு நல்கப்
பயன்தாங்கி வரும்ஏடு பரந்தெங்கும் வாழ்க!

கலைவாணி இசைக்கின்ற கனகமணி வீணை
கருத்தீர்க்கும் ஒலிகூட்ட; கடலலையின் செல்வி
நிலையாகத் தரவந்து நிறைக்கின்ற பொன்னின்
நிறமெங்கும் ஒளிகூட்ட; நினைக்கின்ற எல்லாம்
தலையான துணையாக்கித் தருகின்ற கையை
தனில்மேவு மொருசக்தி தகவோடு நல்கும்
குலையாத மனத்தேற்றம் குலமேன்மை காக்கக்
குறையாத வளமோங்கிக் கொடிகட்டி வாழ்க!

முருகென்ற பெயருக்குத் தமிழென்றும் ஓர்பேர்
முகிழ்க்கின்ற தமிழ்காக்கும் முருகுக்கே ஆம்சீர்!
தருவென்ற கொடைநெஞ்சம் தமிழ்நெஞ்சம் இன்று
தழைக்கின்ற சமுதாயம் வழிகாணற் கென்று
மருநின்ற மலர்நாண மணம்வீசு கின்ற
மலர்'புதிய சமுதாயம்' மணிப்பேரில் அன்பாய்த்
தருகின்ற சுவைஏடு தமிழேடு வையம்
தனிலென்றும் நிலையாகித் தமிழ்போல வாழ்க!



முன்னேட்டம்

தொலைக்காட்சி

31-3-77 வியாழன் மாலை 5.30க்கு
இந்திப்படம்: முல்ஜின்

7-4-77 வியாழன் மாலை 5.30க்கு
தமிழ்த்திரைப்படம்: வைராக்கியம்

10-4-77 ஞாயிறு மாலை 4.00க்கு
இந்திப்படம்: ஜெய் சி தோட்



வானொலி

நாடகம்

(சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2.00க்கு ஒலிபரப்பாகும்)

2-4-77 தைப்பிங் ந. வரதராசன் எழுதிய "மனைவி அமைவதெல்லாம்"

9-4-77 கோலக்கெட்டில் த. இலட்சுமணன் எழுதிய "நினைவின் மறுபுறம்"

தொடர் நாடகம்

(திங்கட்கிழமைதோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகும்)

தலைநகர் எஸ். வைரக்கண்ணு எழுதும் புதிய தொடர்: "உன்னை நான் காண்பேனோ?"

4-4-77 "உன்னிடம் மயங்குகிறேன்" (முதற் பகுதி)

11-4-77 "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" (இரண்டாம் பகுதி)

என். இராமலிங்கம், எம்.எஸ். சுவாமிநாதன், பத்துமலை, புஷ்பாதேவி ஆகியோர் இத்தொடரில் முக்கிய பாகங்களை ஏற்கின்றனர்.

மனச் சுழல்

(ஞாயிறுதோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகும்)

3-4-77 வி. ஐ. ஜோசப், பிலோமினா முக்கிய பாகங்களில் நடிக்கும் "மெல்லத் திறக்கும் மனக் கதவு"

10-4-77 தலைநகர் ரவிசங்கர் எழுதிய "சித்திரம் பேசுதடி" எழுத்தாளர் ஒருவரின் கற்பனையில் உருவாகும் கோர உருவம் உயிர்பெற்றுவரும் இந்நாடகத்தில் ரவி, சிவாஜிராஜா, பி. தியாகராஜன் முதலியோர் நடிக்கின்றனர்.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகும்)

2-4-77 சுங்கை பாக்காப் திருமதி நாகம்மா எழுதிய "ஏக்கோர் சாமி"

9-4-77 கங்கார் கமலாசங்கர் எழுதிய "வெகுளி வெங்கடாசலம்"

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமைதோறும் மாலை மணி 6.30க்கு ஒலிபரப்பாகும்)

2-4-77, 9-4-77 ஆகிய நாட்களில் இரு பகுதிகளாக ஜெய்சங்கர், சுஜாதா நடித்த "நீ ஒரு மகாராணி" ஒலியேறும். வானொலி வடிவம்; எல். ராமன்.

(கடைசி நேர நிகழ்ச்சி மாற்றங்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல)

அன்பு·அழகு·அறிவுப் பாட்டு

ஏற்கனவே "இளந்தளிர்" என்னும் குழந்தைப் பாடல் நூலை வெளியிட்டுள்ள 'பாப்பாவின் பாவலர்" முரசு நெடுமாறன் இப்போது அன்புப் பாட்டு, அழகுப் பாட்டு, அறிவுப் பாட்டு ஆகிய மூன்று குழந்தைப் பாடல் நூற்களை வெளியிட்டுள்ளார்.

குழந்தைப் பாடல் எழுதுவதில் வல்லவராக அழ. வள்ளியப்பா தமிழகத்திற்குக் கிடைத்தாற்போல, மலேசியத் தமிழ்க் குழந்தை உலகத்துக்குக் கிடைத்துள்ளவர் பாப்பாவின் பாவலர் முரசு நெடுமாறன்.

முரசு நெடுமாறன் முறையான கவிதை இலக்கணமும் தமிழ்ப் புலமையும் பெற்றவர். அதற்கு மேலாகத் தமிழின் மீது மாறுத பற்றுள்ளவர். அதிலும் தனித் தமிழ்ப் பற்றுளர்.

இனிய, எளிய சொற்களில் குழந்தைகளின் மனத்தைத் தொட்டுத் தழுவும் வண்ணம் அவரின் பாடல்கள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு நாலின் தொடக்கப் பாடலும் "தமிழை நினைந்து" எழுதப்பட்டுள்ளது அவரின் தமிழ் உணர்வைப் புலப்படுத்துகின்றது.

"மேலும் மேலும் படிப்பேன்
மேன்மைத் தமிழைப் படிப்பேன்
தமிழால் இன்று வளர்வேன்
தமிழை நானே வளர்ப்பேன்"

என்னும் வரிகள் அழகுப் பாட்டில் இடம் பெற்றுள்ளன.



[illegible]

தமிழைக் குழந்தைகள் படிக்கும் உணர்வை ஊட்டுவதோடு தமிழால் வளர முடியும் என்னும் நம்பிக்கையையும் வளர்த்து, தமிழை நானே வளர்க்கும் கடமை உணர்ச்சியையும் பிஞ்சு உள்ளங்களில் ஏற்றும் வகையில் அவ்வரிகள் அமைந்துள்ளன.

சின்னஞ்சிறு கதைகள் மூலம் சிந்தனைக்கும் அறிவுக்கும் உதவும் கருத்துக்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். "அறிவுப் பாட்டு" முழுக்க முழுக்க இந்த அடிப்படையில்தான் எழுதப்பட்டுள்ளது. நன்மையும் தீமையும், அறிவின் பயன், அழிவும் ஆக்கமும், பட்டமும் பையனும், காலமும் செயலும், உதவி, மலையும் மலைப்பும், பசி, கொழுத்த நண்டு முதலியன கருத்து விளக்கப் பாடல்களாக மிளிர்கின்றன.

இவற்றில் பசியும், எலிப்பொறியில் பூனையும் நகைச்சுவை வழங்கும் பாடல்களாகக் கொள்ளலாம். தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் வகையில் எழுதப்பட்ட பாடலாக "திருவிழா" பாடலைக் கொள்ளலாம். அழகிய முகப்பட்டையும், அழகழகான சித்திரங்களும் ஒவ்வொரு பாட்டுக்கும் அழகு சேர்க்கின்றன.

சிறந்த தயாரிப்பில், செறிவாக உருவாக்கப்பட்டுள்ள அழகுப் பாட்டு, அன்புப் பாட்டு, அறிவுப் பாட்டு நூற்கள் அனைத்துத் தமிழ்ப் பள்ளிகளிலும் போதிக்கத்தக்கனவாகும்.

இப்பாடல்களைத் தேசியமொழியில் வெளியிட்டால் கூட மிகுந்த செல்வாக்கைப்பெறும். கவிஞர் முரசு நெடுமாறன் தம்மைச் சிறந்த குழந்தைக் கவிஞரென மேலும் உறுதிப்படுத்தியுள்ளார். பொதுவாக தமிழறிந்தார் அனைவரும் படித்தின்புறவேண்டிய நூற் செல்வம் இவை.

அன்புப் பாட்டு 75 காசு, அழகுப் பாட்டு 75 காசு, அறிவுப் பாட்டு $1 விலையுள்ள இந்நூற்கள் மலேசியப் புத்தகாலயம், 278-B, ஜாலான் ஈப்போ, கோலாலம்பூர் முகவரியில் கிடைக்கும்.

—கோவலன்

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.